பட்டுக்கோட்டை **பிரபாகர்**

ஆகாயத்தில் ஆரம்பம்

ஆகாயத்தில் ஆரம்பம்

பட்டுக்கோட்டை பிரபாகர்

மின்னூலாக்கம் : செல்லா

பூம்புகார் பதிப்பகம்
63, பிரகாசம் சாலை (பிராட்வே)
சென்னை - 600 108

மின்னூலாக்கம்
செல்லா
www.minnoolakam.blogspot.com

விலை ரூ.30/-

பூம்புகார் வெளியீட்டு எண் 420
முதற் பதிப்பு 1985
இரண்டாம் பதிப்பு ஏப்ரல் 1999
உரிமை ஆசிரியருக்கே

அச்சிட்டவர்கள் ஈகிள் பிரஸ், சென்னை 600 013

பதிப்புரை

அன்புக்குரிய வாசகர்களுக்கு.

வணக்கம்.

பூம்புகாரின் 25வது வெள்ளிவிழா ஆண்டு.

ஆம்.

பூம்புகார் பதிப்பகம் தொடங்கி இருபத்தைந்து ஆண்டுகள் உங்கள் அன்பான ஆதரவோடு வீரநடை போடுகிறது.

பூம்புகாரில் புதிய எழுத்தாளர்கள் எழுத வேண்டும் என்ற எண்ணத்தில் புதிய ஆசிரியர்களை தேடத் தொடங்கினோம். புதிய – ஆனால் உங்களுக்குத் தெரிந்த முத்தான, முற்போக்கான சிந்தனைகளுடன் சிறப்பாக எழுதும் திருவாளர் பட்டுக்கோட்டை பிரபாகர் அவர்களின் நூல்கள் பூம்புகார் மூலம் உங்கள் கரங்களில் தவழ்வது பெருமைதானே!

திரு. பட்டுக்கோட்டை பிரபாகர் அவர்களைப் பற்றி நாங்கள் அதிகம் சொல்ல வேண்டியதில்லை.

நிலவுக்குத் தான் கதிரவன் தேவை. ஆனால் கதிரவனுக்கு.

மேலும் எழுத்து என்பது கலைகளுள் எல்லாம் தலை சிறந்த கலை. மற்றைய கலைகள் எக்காலத்துக்கும் நிலைத்து நிற்பவை அல்ல. ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கு மின்னலைப் போன்று பளிச்சிட்டு மறைந்துவிடும். ஒரு ஆசிரியனின் எழுத்துக்கள் மட்டும் எக்காலமும் நிலைத்து நின்று அவனுக்கு ‘எழுத்தாளன்’ என்னும் ஒரு பெரிய கௌரவத்தை சமுதாயத்தில் பெற்றுத் தருகின்றது.

தன் மனதில் உதித்த சொந்தக் கருத்துக்களை தனது நடைகளில் மக்களுக்காக எழுதும் எழுத்தாளர்கள்தான், எழுத்தாளர் இனத்தில் சிறந்த இனமாக கருதப்படு கின்றனர். இதையே 'படைப்பிலக்கியம்' என்றும் அறிஞர் பெருமக்கள் கூறுவர். அப்படிப்பட்ட எழுத்தாளர்களில் ஒரு சிலரில் ஒருவரான திரு. பட்டுக்கோட்டை பிரபாகர் அவர்களைப் பற்றி எங்களுக்குத் தெரிந்தவைகளை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

அவர்களுடைய பல நூல்கள் தெலுங்கு, கன்னட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பல கதைகள் சின்னத் திரையில் வடிவம் பெற்றுள்ளது. சில தமிழ் திரைப்படங்களுக்கு திரு. பட்டுக்கோட்டை பிரபாகர் அவர்கள் வசனம் எழுதி இருக்கின்றார்கள். இவருடைய நூல்களை ஆய்வு செய்து இரு மாணவர்கள் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்கள். 200க்கும் மேலான சிறுகதைகள், 300க்கும் மேலான நாவல்கள் மற்றும் 60 தொடர்கதைகளும் எழுதியுள்ளார்கள்.

திரு. பட்டுக்கோட்டை பிரபாகர் அவர்களின் நாவல்கள், சிறுகதைத் தொகுப்புகள், குறுநாவல்கள் பூம்புகார் வாயிலாக வர இருக்கின்ற இந்த நல்ல வேளையில் பூம்புகார் வாசகர்களாகிய நீங்கள் எப்போதும் போல் இப்போதும் நல் ஆதரவு தரும்படி அன்போடும், கனிவோடும் கேட்டுக் கொள்கிறோம்.

– பூம்புகார் பதிப்பகத்தார்

முன்னுரை

அன்புள்ள உங்களுக்கு.

வணக்கம்.

இதுவரை நான் எவ்வளவோ கிரைம் நாவல்கள் எழுதியிருந்தாலும், என்னைப் புதிதாகச் சந்திக்கிற வாசகர்கள் குறிப்பிட்டுப் பாராட்டிப் பேசும் சில நாவல்களில் 'ஆகாயத்தில் ஆரம்பம்' ஒரு நாவல்.

''கிரைம் கதைகள் படிக்கும்போது அதில் குற்றம் செய்பவர்கள் பயன்படுத்தும் யுத்திகளைப் பார்த்து அதேப்போல மக்கள் குற்றம் செய்ய மாட்டார்களா? குற்றம் செய்பவர்களுக்கு வழிமுறைகளைக் கற்றுத் தருவது போலாகாதா?''

– இந்தக் கேள்வி என்னையும், என் போன்று கிரைம் கதைகள் எழுதுகிற எழுத்தாளர்களையும் எல்லாப் பேட்டிகளிலும் தவறாமல் கேட்கப்படும் கேள்வி.

ஒரு தொலைக்காட்சி பேட்டியில் என்னைக் கேட்டபோது நான் சொன்ன பதில்

''இன்றைக்கு சினிமாவும், தொலைக்காட்சியும் மக்களை முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன. அவைகளில் காட்டப்படும் விஷயங்களைவிட பெரிதாக எழுத்தில் சொல்லி விடுவதில்லை. நாட்டில் எந்தக் குற்றம் நிகழ்ந்தாலும் •பத்திரிகைகளில் விரிவாக செய்திகள் போடுகிறோம். தொலைக்காட்சிகளில் காட்டுகிறோம். உதாரணமாக ஒரு மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த தீவிரவாதிகள் சிலர் ரகசியமாக சுரங்கம் தோண்டி தப்பிச் சென்றார்கள். அந்த சுரங்கத்தை புகைப்படம் எடுத்து அம்புக்குறி போட்டு எப்படித் தப்பினார்கள் என்று விரிவான விளக்கம் பத்திரிகைகளில்

வந்தது. இதுவே தொலைக்காட்சி செய்திகளில் காட்டப் பட்டு காவல்துறை அதிகாரிகள் நடித்துக் காட்டினார்கள். இதைப் பார்க்கும், படிக்கும் கைதிகள் சுரங்கம் தோண்டி தப்பிக்கலாம் என்று தூண்டப்பட்டால்? அதற்காக செய்தியை மக்களிடம் மறைக்க முடியுமா? நடக்கும் சம்பவங்களை அப்படியே சொல்ல வேண்டியது மீடியாக்களின் கடமை. அதனால் கதைகள் படித்து குற்றம் செய்யக் கற்றுக் கொள்கிறார்கள் என்பது நியாயமில்லாத குற்றச்சாட்டு!''

இந்தப் புத்தகத்தின் இரண்டாவது பதிப்பை வெளி யிட்டுள்ள பூம்புகார் பதிப்பகத்திற்கும், முதலில் பிரசுரித்த மாலைமதி இதழுக்கும் என் அன்பும், நன்றியும்.

பிரியங்களுடன்,

ஆத்மா இல்லம்,
25/1,கெனால் பேங்க் ரோடு,
கஸ்தூரிபா நகர், அடையாறு,
சென்னை – 600 020.

1

ராத்திரியின் ரகசியம் துவங்கியிருந்தது. ஊரெல்லாம் தலைக்கு மேல் வெளிச்சம் போட்டுக் கொண்டது. எது எதற்கோ சௌகரியமாகிய இருளுடைய மொழியாக பூச்சிகளின் சபா ஏறாத சங்கீதம். மேகத்தின் சரசத்தில் பலவீனமான சந்திரன்.

தட் தட் தட் என்று 350 பவர் புல்லட்டில் அவன் வந்து கொண்டிருந்தான். வண்டியின் புல்ஸ் ஐ வரைந்து கட்டுப்படுத்தப்பட்ட ஹெட் லைட் வெளிச்சம், பம்பரின் இருண்டு சைடுகளிலும் உபரியாக சிவப்பு வெளிச்சங்கள் தவிர, அவன் உதட்டிலும் ஒரு குட்டி டேஞ்சர் வெளிச்சப்பொட்டு ஓட்டத்திற்கு தகுந்தாற் போல் மிதந்து வந்து கொண்டிருந்தது.

மதிய மழையில் மிச்சங்கள் இரண்டு பக்கமும் சிதறி விலகிக் கொள்ள வண்டியின் வேகம் குறைத்து அந்த குறுகலான சந்தில் திருப்பினான். தூக்கத்தை துறந்து லொல் என்று ஓடிப்போன நாய் கொஞ்ச தூரம் துரத்தி விட்டு நின்று விட்டது. விளக்குக் கம்பத்தின் ஓரத்தில் குழந்தையை உட்கார்த்தி வைத்து விட்டு கையை கட்டிக் கொண்டு தாய் காத்திருந்தாள். ''சீக்கிரம்.

அதைக் கடந்து தெருவின் கடைசிக்கு வந்து கொண்டிருந்தான். சில வீடுகளில் டியூப்லைட் எரிந்து

பிள்ளைகள் உரக்க பாடம் படித்துக் கொண்டிருந்தார்கள். குடிசை வாசலில் கயிற்றுக் கட்டிலில் சால்வைப் போர்வைக்குள் எவனோ தற்காலிகமாக செத்துப் போயிருக்க.

அவன் அந்த வீட்டின் முன் நிறுத்தினான். வீட்டின் மாடிக்கு வெளியிலிருந்து புறப்பட்ட படிகளுக்கான பைக்கை வைத்தான். விசில் சத்தம் படிகளில் ஏறினபோது கீழ் வீட்டின் கதவு திறக்கப்பட்டு ராமானுஜம், "தம்பி," என்றார்.

மறுபடி இறங்கி வந்து, "என்ன?"

"உனக்கு போன் வந்துச்சிப்பா. இதோ பாரு, இந்த நம்பரை உடனே கூப்பிடச்சொன்னாங்க."

சீட்டை வாங்கிப் பார்த்து பாக்கெட்டில் வைத்துக்கொண்டான். "சரி," என்று நகர்ந்தவனை, "தம்பி, இன்னிக்கு தேதி அஞ்சு என்றார்.

"சுத்தமா மறந்துட்டேன்," என்று பாண்ட்டின் பின் பாக்கெட்டில் இருந்து பர்ஸை எடுத்து விரித்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினான். "பாக்கி காலைல வாங்கிக்கிறேன் என்று," விலகி, படிகள் ஏறினான்.

அந்தச் சலவைத் தாளை இரண்டாக மடிக்க மனமில்லாமல் அதை அப்படியே எடுத்துக்கொண்டு உள்ளே போய் கதவை தாழிட்டுக் கொண்டார் ராமானுஜம்.

கதவை திறந்து கொண்டு அறைக்குள்ளே வந்தவன் ஷூக்களை உதறிவிட்டு, மேஜை மீதிருந்த அக்காய் ஸ்டீரியோ பிரம்மாண்டத்தை ப்ளே செய்தான். சிவப்பு சதுரங்களின் நடனத்துடன் இசையை பிசிறு பிசிறாய் பிரித்து இது வயலின், இது கிடார், இது காம்ப்போ என்று சொல்லிக் கொண்டிருக்க. ஜட்டி மட்டும் உடம்பில் வைத்துக் கொண்டு அறையுடன் ஒட்டின பாத் ரூமுக்கு நடந்தான்.

ஈரக் கால்களோடு திரும்பி வந்து பாக்கெட் எடுத்து உதட்டால் சிகரெட் இழுத்துக் கொண்டு கட்டிலில் மல்லாக்க விழுந்தான். கண்களை மூடிக்கொண்டு கால்களால் இசைக்கேற்ப தாளம் போட்டுக் கொண்டிருக்க. கழற்றி வைத்திருந்த ரிஸ்ட் வாட்ச் கிக். கிக். கிக். என்றது. பார்த்தான். 8-00.

எழுந்து பின்பக்கம் உலோக தகடெல்லாம் பொருத்தப்பட்ட ஜீன்ஸ் மாட்டிக் கொண்டு, முழுக்கை பனியன் மாட்டிக்கொண்டான். ஸ்டாண்டிலிருந்து ஸ்கார்ஃப் எடுத்து கழுத்தில் சுற்றிக் கொண்டு, டேப்பை நிறுத்தி புறப்பட்டான். பைக்கை ஸ்டார்ட் செய்யுமுன் பாக்கெட்டில் அந்தச் சீட்டை ஒருதரம் தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

முக்கிய சாலைக்கு வந்ததும் சீறினான்.

அவன் கிரண்.

கிருஷ்ணன் என்ற பெயரைத் தொழிலுக்கு லாயக்கில்லாத பெயர் என்று செப்பனிட்டு கிரண் என்றாக்கியது முஸ்தபா. முஸ்தபா இவன் வாழ்க்கையில் இருபதாவது வயதில் அறிமுகமானவர். கிருஷ்ண—கிரணின் பூர்வாங்கம் நதி போல புதிரானது.

கறுப்பான ஒரு குண்டு அம்மாள் நினைவில் இருந்தாள். இட்டிலி, ஆப்பக்கடை நினைவில் இருந்தது. ‘யாரு பெத்த பிள்ளையோ, அழகா இருக்கியேடா ராசா... உன்னை வந்து புறக்கணிக்கிறாங்களே. ’ என்று அவள் அடிக்கடி புலம்பினது நினைவில் வந்தது. யார் அவர்கள்? எப்படிப் புறக்கணித்தார்கள்? நினைவில் இல்லை. பள்ளிக்கூடத்தில் அப்பா பேர் கேட்ட போது விழித்தது, பசங்கள் விளையாட்டில் சேர்க்காமல் விலகியது, வாத்தியார் வரிசையாக பையன்களை அடித்த போது எல்லோரும் அம்மாவை அழைக்க இவன் மட்டும் ‘அய்யோ’ என்றது. லேசாக நினைவில் தங்கியிருக்கிறது.

அந்த அம்மாள் எப்போது செத்தாள்? அப்புறம் எங்கெங்கே இருந்தான் என்பதற்கு அவனிடமே சரியான விவரங்கள் இல்லை. வாழை மட்டையில் மேஜை துடைத்திருக்கிறான். பார்பர் ஷாப்பில் டீ வாங்கி வந்து, முடி அள்ளிப் போய் குப்பை தொட்டியில் கொட்டியிருக்கிறான். சினிமாவுக்கு கறுப்பு டிக்கெட் விற்று கழுத்தில் கர்சீப் கட்டிப் பழகியிருக்கிறான். ரோஸி வீட்டில் மட்டும் நாலு வருஷம் இருந்து, டீச்சரும், சாரும் பள்ளிக்கூடத்துக்குப் போக, பாப்பாவுக்கு ஜட்டி மாட்டி, யானை விளையாட்டு விளையாடி, தூங்க வைத்து, மொட்டை மாடியில் படுத்துக் கொண்டு ரகசியமாய் சினிமா போய். . . மீசை பூத்து, உடம்பு நெடுக்கில் வளர்ந்து, ரோஸி டீச்சரின் கவனத்தைக் கவர்ந்து அந்த ஞாயிற்றுக் கிழமை மத்தியானம் அறை சுத்தம் செய்கையில், 'கிருஷ், இங்கே பாரேன். என்று டீச்சர் அழைக்க, திரும்பினால் சேலை நழுவி. அச்சச்சோ. எச்சில் விழுங்க, கைகள் நடுங்க... 'சின்னப் பையா, எவ்வளவு அழகா வளர்ந்துட்டே? இறுக்கத்தில் பயந்து போய், கிறங்கி போய், கற்றுத்தரப்பட்டான். ஆர்வமாய்க் கற்றுக்கொண்டான். அந்தோணி சாருக்கு அரசல் புரசலாய்த் தெரிந்து போக, புடவையின் ஆட்சியில் தைரியத்தை விற்று விட்ட அவரால், அவள் ஊரில் இல்லாத சமயம் இவன் மேல் திருட்டுப் பழி போட்டு, மொத்து மொத்தென்று மொத்தி, திசை பக்கம் திரும்பாதே என்று விரட்டத்தான் முடிந்தது.

ஓசி ரயிலில் முஸ்தபா அறிமுகம். அப்புறம் தான் கிரண் ரொம்ப உருப்படாமல் போனது. உலகத்தில் கெட்ட விஷயங்கள் பூரா அறிந்து கொண்டான். வெறும் விரலால் சோடா திறந்து, ஹாப் விஸ்கி ராவாக கவிழ்த்து, புகை புகையாய் நரம்புக்கு போதை ஏற்றிக்கொண்டு, விலாசம் விலாசமாய் அலைந்து, இரண்டு கோர்ஸ்

பென்சிலின் குத்திக் கொண்டு எல்லாம். எல்லாம். கற்றான்.

கிரணின் முழங்காலுக்கருகே உள்ள ஆழமான தழும்பு துப்பாக்கி சூட்டினால் ஏற்பட்டது. தம்பிக் கோட்டைக்கு அருகாக சேறான கடற்கரையோரத்தில் தோணியிலிருந்து மூட்டையை தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு, முழங்கால் வரைச் சகதியில் துரிதமாக ஓடுகையில் கஸ்டம்ஸ் இன்ஸ்பெக்டர் தந்த பரிசு. அப்படியும் சிக்காமால் தப்பி வந்து முஸ்தபாவிடம் சபாஷ் பெற்றவன்.

குறி தவறாமல் சுடத் தெரிந்தவன். 38 ரிவால்வரில் ஒன்று லைசென்ஸ் இல்லாமல் வைத்திருக்கிறான். முஸ்தபா உபயம் லீ அண்ட் என்ஃபீல்டின் அந்த குட்டி கறுப்புச் சாத்தானின் வயிற்றைக் கடக் என்று திறந்து வினாடிகளில் லோட் செய்ய தெரியும். முஸ்தபாவின் மறைவுக்குப் பிறகு சென்னை வந்து, சொந்தமாகக் கற்ற தொழிலை சிறு தொழிலாக இரண்டு நண்பர்களோடு செய்பவன்.

தற்போது பைக்கில் துடிப்பாய்ப் பயணம் செய்து கொண்டிருப்பவன்.

கிரண் பொதுத் தொலைபேசி பெட்டிக்கருகே பைக்கை நிறுத்திவிட்டு, உள்ளே வந்து டயல் செய்தான். காத்திருந்தான்.

''யாரு? என்றாள்.

''கிரண்.''

''ஒரு நிமிஷம்,''

டெலிபோன் கூண்டில் பக்கச் சுவரில் சரளா என்று அக்கறையாகச் செதுக்கி ஒரு எண் பென்சிலினால் எழுதப் பட்டிருந்தது. முயற்சித்தால் லொக் லொக் என்று இருமி விட்டு, ஒரு தாத்தா இது ராஜேஸ்வரி சிட்பண்ட்ஸ் என்பார்.

'ஹலோ,'' என்றான்.

''ராவ், என்னடா?'' என்றான் கிரண்.

''வர்றியா? பேசணும்.''

''காலைல கூடப் பார்த்தோமே.

''அப்போ விஷயம் இல்லை.''

''வீட்டுக்கு வரட்டுமா?''

''ஆமாம்.''

''பிஸியா இருக்கே போலிருக்கே.

''ஆச்சு. இதோ புறப்பட்டுட்டா அவ.''

''வர்றேன்.''

வைத்துவிட்டு கீழே இறங்கியவன் மறுபடி உள்ளே போய், பாக்கெட்டில் மற்றொரு ஐம்பது பைசாவைத் தேடி சரளாவுக்கு டயல் செய்தான், சுவரில் எண் பார்த்துக் கொண்டு.

''ஹலோ. என்றது முரட்டுக் குரல்.

''சரளா இருக்காங்களா?''

''மொட்டையா சொன்னா? இந்த ஆபீஸ்ல என்னவா வொர்க் பண்றாங்க?''

''என்ன ஆபீஸ் இது?''

''ஐ. ஜி. ஆபீஸ். நீங்க யாரு?''

வைத்துவிட்டான். சன்னமாக சிர்த்துக் கொண்டு பென்சில் எண்களை அழுத்தமாய் துடைத்து விட்டு வெளிவந்து பைக்கை ஸ்டார்ட் செய்தான்.

நுங்கம்பாக்கத்தில் வள்ளுவர் கோட்டம் பக்கமாக ஒரு தனிமையான சாலையில் வாசலில் கொய்யாமரம் இருந்த தனி வீட்டின் வாசலில் இவனுக்காக காத்திருந்த ராவ் கைலி கட்டிய பனியன் மட்டும் அணிந்திருந்தான். முன்

வழுக்கையை சாமர்த்தியமாக முயன்றும். காற்றடித்த போதெல்லாம் காட்டிக் கொடுத்தது.

பைக்கை நிறுத்தி ஸ்டாண்ட் போட்டுவிட்டு வந்த கிரண், ''மொட்டை மாடியில் லைட் எரியுது ராவ்'' என்றான்.

''அலெக்ஸ் அரேஞ்ச் பண்ணிக்கிட்டிருக்கான்.''

''அலெக்ஸ் வந்திருக்கானா?''

''அவனையும் கூப்பிட்டிருந்தேன்.''

''என்ன அரேஞ்ச் பண்றான்?''

''மூங்கில் சேரெல்லாம் கொண்டு போய் போட்டு..''

''இன்னிக்கென்ன பௌர்ணமியா?''

''இல்லை. உள்ளே வா.''

''யாராச்சும் வர்றாங்களா?''

''ஆமாம், அந்தாளு ஹோட்டலுக்குத் தான் கூப்பிட் டான் நான்தான் வேணாம்னு நம்ம வீட்லயே வச்சிக்கிடலாம்னு வரச் சொல்லிட்டேன். கார் போயிருக்கு அழைக்க.''

பேசிக் கொண்டே மொட்டை மாடிக்கு வந்தார்கள்.

அழகாய்த் தாடி வைத்திருந்த, கை இல்லாத ஒருவர் ஓவர் ஜாக்கெட் அணிந்த அலெக்ஸ் ஐஸ் பாக்ஸையும், கிளாஸ் டம்ளர்களையும் எடுத்து வைத்து விட்டு, ''கிரண், கொஞ்சம் பெரிய சமாச்சாரம், 'என்று விட்டு,' ராவ் நீயே சொல்லு,'' என்றான்.

ஒரே ஒரு டியுப்லைட்டில் கொஞ்சம் கொசுக்கள். கைப்பிடிச் சுவரை உதைத்துக் கொண்டு, சிகரெட்டைப் புகைத்துக்கொண்டு, ராவ் சொன்ன திட்டம் கிரணுக்கு உடனே பிடித்துப் போனது.

கீழே கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது,

"ஒரு சட்டையை எடுத்துப் போட்டிக்கிட்டு போ ராவ்."

ராவ் கீழே போய் அந்த உயரமான நபருடன் வரும்போது சட்டை போட்டிருந்தான். அவர் உயரமாய் பேண்ட் போட்டு. கோட் போட்டு. டையில் ஒற்றைக் கல் பின் செருகி. செம்பட்டை தட்டின மீசையுடன், கண்களை காண்பிக்காமல் அடர்த்தியான கண்ணாடி அணிந்திருந்தார்.

அறிமுகப்படுத்தும் போது, மென்மையாய் கை குலுக்கினார். மொட்டை மாடியில் கதவைச் சாத்திவிட்டு வந்து மீதமிருந்த நாற்காலியில் அமர்ந்தான் ராவ்.

ட்ரிங்ஸ் சாப்பிட்டுக் கொண்டே பேசலாமா?"

"இல்லை கொஞ்சம் பேசலாம், அப்புறம் பேசலாம் என்றார் அறிமுகப்படுத்தப்பட்ட ராகுல்.

"பேசுங்க" என்றான் அலெக்ஸ்."

"நானா? ராவ்கிட்டே எல்லாம் சொன்னேனே. நீங்க தான் இப்போ சொல்லணும்," என்று நீளமான சிகரெட் எடுத்து ஹோல்டரில் பொருத்திக் கொண்டார்.

"விபரங்கள் பத்தாது மிஸ்டர் ராகுல்" என்றான் கிரண்.

"என்ன விபரம் பத்தலை? கேளுங்கள் சொல்லுறேன்."

"இதிலே சம்பந்தப்பட்டிருக்கிற வெளிநாடு எது?"

"நோ, நோ. நீங்க வரக்கூடாத பாய்ண்ட்க்கு வர்றிங்க. அம்மாவைப் பார்த்து இவர் தான் உண்மையா அப்பாவா என்று கேட்கிற கேள்வி. என்னை சங்கடப்படுத்தக் கூடாது நீங்க. பேச்சு உங்களுக்கும்,

எனக்கும் தான். இதை வாங்கிக்கங்க, தொகையில பேரம் பேசுங்க, நியாயம். ஆராயறது சரியில்லை.''

''அவர் சொல்றது சரிதான் கிரண். நமக்கென்ன அதைப் பத்தி? நாம ஒப்படைக்க வேண்டியது இவர்கிட்டே. நம்ம தொடர்பு பூரா இவர்கிட்ட. மேல் விவரம் நமக்கு வேண்டியது இல்லையே.

கிரண் சற்று அமைதியாய் இருக்க. மற்றவர்கள் அவன் பேசக் காத்திருந்தார்கள்.

''பேர் என்ன?'' என்றான்.

''டாக்டர் விக்ரம்''

''டாக்டர்ன்னா ஜுரத்துக்கு ஊசி போடுபவரா?''

''சேச்சே. ஸோலார் எனர்ஜியில் பெரிய ஆள்.''

''ஓக்கே சார், செஞ்சிடலாம் அலெக்ஸ், பாட்டிலை உடை. மிச்சத்தைப் பேசி முடிவு செஞ்சிடலாம் என்றான் கிரண்.

2

அந்த உயர் ரக ஹோட்டலின் அறையின் முழங்கால் வரை நீண்டிருந்த ஷூக்களில் கால்களை நுழைத்துக் கொண்டிருந்தான் பிரிட்டோ. டிரெஸ்சிங் டேபிள் முன் அமர்ந்து தாடையில் மின்சாரக் கத்தியை ஓடவிட்டுக் கொண்டிருந்தான் சுனில் பிரபாகர்.

''பிரபா, நீ நிதானமா தயாராகு, ரெடியானதும் புக்ஸ் படிச்சிக்கிட்டிரு. ஒரு மணி நேரத்தில வந்துடறேன்,'' என்று சென்ட் பீய்ச்சிக் கொண்டான்.

'' சரியா நமக்கு பத்து மணிக்கு அப்பாய்ண்மெண்ட் பிரிட்டோ.''

''வந்திடுவேன், டாக்ஸிலதான் போறேன்.''

''எத்தனை நாளைக்கப்புறம் சந்திக்கப் போறே?''

''நாள் இல்லை, மாதங்கள் பதினேழு மாசமாச்சு.''

''அப்போ சீக்கிரம் திரும்ப முடியாது. நான் சொல்றதைக் கேளு. சாயங்காலம் நாலு மணிக்கு உன்னை ஃப்ரீ பண்ணிடறேன். போய்ட்டு, கொஞ்சிட்டு நாளைக்கு வந்தாலும் சரி.''

''நல்ல ஐடியா தான். சாயங்காலமும் போறேனே. ஈவினிங் வர்றேன் இப்பப் போய் சொல்லிட்டு மட்டும் வந்துடறேன். என்ன?''

''ஒழி! ஒன்பது நாப்பத்தஞ்சுக்கு இங்கே இருக்கணும்.''

''தாங்ஸ்டா கண்ணா'' என்று அவன் கன்னத்தில் கிள்ளிவிட்டு பிரிட்டோ புறப்பட்டான். எஸ்கலேட்டரில் இறங்கி சாலைக்கு வந்து டாக்ஸி அமர்த்திக் கொண்டான்.

அந்தப் பெண்கள் விடுதியில் வரவேற்பறையில் நகம் கடித்துக் கொண்டு ஷீலாவுக்காகக் காத்திருந்தான். மூங்கில்களால் அமைக்கப்பட்ட சுவர்களை ரசித்தான். இரைக்கப் பட்டிருந்த மத சம்பந்தப்பட்ட இதழ்களில் வழவழப்பாய் இருந்ததை மேய்ந்தான். அருகில் வேப்பமரத்தை காக்கை சடசடத்துக் கொண்டிருக்க. தோள் வரை வெட்டப்பட்ட கூந்தலை பின்னால் தள்ளிக் கொண்டு. ''ஓ. யு. பிரிட்டோ. என்று ஓட் டமாய் வந்தாள் ஷீலா.

ரத்தத்தில் ஊற வைத்த கவுன் அணிந்திருந்தாள். ஒரு கல் வைத்த சிலுவை மாட்டியிருந்தாள். எண்ணெயால் துடைத்த முகத்தில் ஆழமாய் லிப்ஸ்டிக் போட்டு. அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு, ''ஓ. மேன். நீயே தானா? லெட்டர் இல்லை. போன் இல்லை, திடீர்ன்னு வந்து நிற்கிறே. சாப்ட்டியா?''

''ம். என்று அவளையே பார்த்துப் புன்னகைத்தான்.

''எப்படி மனசு வந்துச்சி பிரிட்டோ? எத்தனை நாள் லீவு?''

''லீவெல்லாம் இல்லை. ஆன் டூட்டி வந்திருக்கேன்.''

''போன தடவை மாதிரியா? முத நாள் வந்துட்டு. மறுநாளே பறந்துட்டியே. இப்ப என்ன, நாளைக்கு காலைல பம்பாயிலே இருக்கணும்பியே. ஏர் டிக்கெட் வச்சிருப்பியே?'' என்று அவன் சட்டைப் பையில் சுதந்திரமாய் கை விட்டுக் காகிதங்களை கலைத்துப் பார்த்தாள்.

"இல்லை ஷீலா. இந்த தடவை ஆறு நாள் தங்கறேன்."

"வாவ்! எங்கே தங்கியிருக்கே?"

சொன்னான்.

"இன்னிக்கு என்ன, ஃப்ரீயா? நான் ஆபீசுக்கு லீவு போட்டுடட்டுமா?"

"வேணாம், நீ போ. ஈவினிங் உன் ஆபீஸ் வாசல்ல பிக்கப் பண்ணிக்கிறேன். இதென்ன கன்னமெல்லாம் பரு... அனானிமௌஸ் படிக்கிறியா

"சீ போ பிரிட்டோ."

"ஒக்கேடா. உன்னைப் பார்த்துடணும்னு வந்ததுமே வேகம். காலைலத்தான் வந்தோம். வந்ததுமே குளிச்சிட்டு புறப்பட்டுட்டேன்."

"வந்தோமா? வேற யாரு?"

"இன்னொரு ஆபீஸர். எனக்காக வெய்ட் பண்ணிக்கிட்டிருப்பான். புறப்படறேன்" என்று எழுந்து கொண்டான்.

"என்ன ஆறு நாள்?"

"ஈவினிங் சொல்றேனே.

விடுதியின் வாசல் வரைக்கும் கூட வந்தாள். டாக்ஸி கிடைக்கும் வரை பிடிவாதமாக கூடவே நின்றாள். ஏறிக்கொண்டதும், "ஈவினிங் ஏமாத்தாம வந்திடு. ஆவலா காத்திருப்பேன்" என்றாள்.

"ஷ்யூர்" என்று கையசைத்தான் பிரிட்டோ."

ஹோட்டலின் வரவேற்பு ஹாலில் தினசரி படித்துக் கொண்டிருந்தான் சுனில். பிரிட்டோ வந்து நின்று, "ரெண்டு நிமிஷம் முன்னாடியே வந்துட்டேன் சுனில். புறப்படலாமா? அப்பாய்ண்மெண்ட்டை உறுதி செஞ்சுட்டியா?

''ம். இப்பதான் செஞ்சேன். எதிர் பார்த்துக்கிட்டிருக்கார் போகலம்.''

''வா. எந்திரி. பேப்பர் அப்புறம் படிக்கலாம்.''

''இல்லை பிரிட்டோ, கார் அனுப்புறேன்னு சொல்லிருக்கார். வெய்ட்டிங் ஹால்ல இருக்கோம்னு சொல்லியிருக்கேன். உக்காரு. பார்த்துட்டியா?''

உட்கார்ந்து ''ம், அவளால, நம்பவே முடியலை''.

''எப்போ கல்யாணம் பண்ணிக்கப் போறே?''

ஒரு வருஷம் கழிச்சு.''

இரண்டு பேரும் மௌனமாக தினசரியின் பக்கங்களை பங்கிட்டுக் கொண்டு படித்துக் கொண்டிருக்க... சற்றைக்கெல்லாம் ஒரு ஏ. எஸ். ஐ. வந்து அவர்களைச் சமீபித்து அறிமுகப் படுத்திக் கொண்டு, ''கார் ரெடியா இருக்கு'' என்றார்.

''யுவர் ஐடெண்டிஃபிகேஷன் கார்ட் ப்ளீஸ்'' என்றான் பிரிட்டோ.

அவர் காட்டியதும் புறப்பட்டார்கள்.

இருபது நிமிடங்களில் அவர்கள் அறையில் இருந்தார்கள். சுனில் ஸ்ட்ரா வழியே கொஞ்சம் கொஞ்சமாக ஆரஞ்சு ஜூஸ் இழுத்தான் ஐ. ஜி. தனக்கு வந்த கம்யூனிகேஷனைக் காட்டினார். டெலிபோன் எண்கள் அச்சிட்ட அட்டையை நீட்டினார்.

''உங்களுக்குத் தேவையான எந்த உதவியும் கிடைக்கும்'' என்றார்.

''முதல்ல எங்களுக்கு தேவை ஒரு ஆரோக்கியமான கார்.''

''மத்தியானம் ஹோட்டலுக்கு அனுப்பறேன். யு கீப் இட் வித் டிரைவர்.''

''வேணாம். டிரைவர் வேணாம்.''

''உங்க இஷ்டம். திருப்பி அனுப்பிடுங்க. டாக்டர் விக்ரத்தோட இந்தப் பயணத்திலே ப்ராப்ளம் எதுவும் உங்க சி. பி. ஐ. எதிர் பார்க்கிறதா?''

''அஃப் கோர்ஸ். . இந்த மாநாட்டுக்குப் பிறகு அவர் சரித்திர முக்கியத்துவம் ஆகப் போறார். இப்பவே பம்பாயிலே அவரோட வீடு, லேப் ரெண்டு இடத்திலேயும் கனமான செக்யூரிட்டி கொடுத்திருக்கோம்.

''ஐ சி. ஸோலார் எனர்ஜிலே ஏதோ புது பிரேக் த்ரூ செஞ்சியிருக்கணும்ங்கறது என்னோட யூகம். சரியா?'' என்றார் ஐ. ஜி.

''இருக்கலாம்'' என்றான் சுனில்.

''ஒத்துக்கமாட்டிங்களே, யு பீப்பிள். என்று சிரித்தார்.

''மாநாட்ல டெலிவரி செய்றார்.''

ஐ. ஜி. சற்று நேரம் கையில் இருந்த காகிதத்தை படித்தார்.

''புல்லட் ப்ரூஃப் கார் ஏற்பாடு செய்ய சொல்லிருப்பீங்களே.

''படிச்சேன். செஞ்சிடலாம். அந்த அளவுக்கா எதையும் எதிர்பார்க்கிறீங்க?''

''ஸேஃபர் சைட்ல விளையாடலாமே. எதுக்குமே சான்ஸ் தர்றதில்லை. ஒக்கே சார். வெரி நைஸ் ஆஃப் யூ. அப்பப்போ தொடர்பு கொள்றோம்,'' என்று எழுந்து கொண்டான் பிரிட்டோ.

புன்னகையுடன் கை குலுக்கினார்.

''உங்களுக்கு செக்யூரிட்டி எதுவும் வேணுமா?''

''அவசியப்பட்டா சொல்றோம் சார்.''

வெளியேறினார்கள்.

அந்த ஏ. எஸ். ஐ பின்னால் வந்தார்.

"நீங்க எங்கே போகணுமோ அங்கே உங்களை ட்ராப் பண்ண ஏற்பாடு செய்யச் சொன்னார்."

"எங்க போறோம்?" என்றான் பிரிட்டோ காரிடாரில் நடந்துகொண்டு.

பாக்கெட் டைரியைப் பிரித்து, "புரொபஸர் திரிவேதி. அடையாறு" என்றான் சுனில் பிரபாகர்.

3

தொடைகளை இறுக்கும் பாண்ட் அணிந்திருந்தாள். மேலே லூசாக ஒரு அலட்சிய பனியன். TOWARDS PROGRESS என்று எழுதி இருந்தது. கத்தரிக்கப்பட்ட புருவங்களில், பொட்டிடாத நெற்றியில், ஈரமான உதடுகளில், சுதந்திரமான கழுத்தின் கீழ் வீடுகளில் இளமை ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருக்க. டைப்படித்துக் கொண்டிருந்த சமீபத்தில் ஷேவ் செய்து கொள்ள துவங்கியிருந்த இளைஞனிடம் தன் விலாச அட்டையை நீட்டினாள்.

மிஸ் ஆஷா சச்தேவ், M.A., Dip. In. Journalism.

"ரிப்போர்ட்டர் மாத இதழ்," என்று வாய்விட்டுப் படித்துவிட்டு நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

"என்ன வேணும் உங்களுக்கு?"

"புரொர்ஃபஸர் திரிவேதியோட அஞ்சே நிமிஷம் அஞ்சே நிமிஷம் அப்பாய்மெண்ட் வேணும்."

"கஷ்டம். பிஸியா இருக்கார். மாநாடு ஏற்பாடுகள்ல இருக்கார்.

"தெரியும். கொஞ்சம் முயற்சி பண்ணுங்க."

"இல்லை மேடம் ஒப்புக்க மாட்டார். முக்கியமான விசிட்டர்களுக்காக காத்துக்கிட்டுருக்கார்."

''ஒரு பத்திரிக்கை நபர் முக்கியமான விசிட்டர் இல்லையா?''

''நீங்க அனாவசியமா வம்புக்கு வர்றீங்க.

''நீங்க இந்த மாதிரி ஃப்ளாஷ் பத்திரிக்கையிலிருந்து வந்திருக்காங்க, அஞ்சே நிமிஷம் வேணும்னு கேட்டு அவர் மறுத்துட்டா நான் போயிடறேன். கேக்காம நீங்களே பதிலை சொன்னா எப்படி?''

''நான் அவர் பி. ஏ. எனக்குத் தெரியும். முந்தா நாள் பிரஸ் கான்ஃபரென்ஸ் வெச்சியிருந்தோமே. அப்போ என்ன பண்ணிங்க? தூங்கினிங்களா?''

''ஆமாம், என் பாய்பிரண்டோட தூங்கிக்கிட்டிருந்தேன். அதெல்லாம் உங்களுக்கென்ன? அன்னிக்கு எங்களுக்கு கொடுக்கப்பட்ட தகவல் பத்தாது. உப்பு சப்பில்லாம இருக்கு. எங்க ரீடர்ஸ்க்கு இன்னும் கொஞ்சம் மொரமொரப்பா தகவல் வேணும். முயற்சி பண்ணுங்களேன் ப்ளீஸ்.

''உதடுகளை மடித்து ஹஸ்கியா சொன்ன 'ப்ளீஸ். . .' அந்த சமீபத்து மீசைக்காரனை கொஞ்சம் நெகிழ்த்தியது.

''வெய்ட்,'' என்று ஒரு டிராயரைத் திறந்து, ஃபைலைப் புரட்டி, ''முந்தா நாள் நிருபர்கள் உள்ள மீட்டிங்கில் உங்கள் பத்திரிக்கையிலிருந்து யஜுர்சிங் கலந்து கொண்டிருக்கின்றார். கையெழுத்துப் போட்டிருக்கின்றார்'' என்றார்.

''யார் மறுத்தது?''

''உங்களுக்கு அதிகப்படியா எதுவும் சொல்லப்போறதில்லை அவர். சொல்லவும் எதுவும் இல்லை.''

''அப்போ மிஸ்டர், இதை புரொபஸர் சொல்லட்டுமே நான் போயிடுறேன்.

"வெல். அப்போ ஒண்ணு செய்யுங்க. போய் அந்த சோபாவிலே உட்காருங்க. புரொபஸர் எதிர்ப்பார்த்திட்டிருக்கிற விசிட்டர்ஸ் வந்து சந்திச்சிட்டுப் போனதும் கேட்டுப் பார்க்கின்றேன்."

"வெரி குட். உங்க பெயரென்ன?"

நிமிர்ந்து அவள் கண்களை அழுத்தமாகப் பார்த்து, "கோபாலகிருஷ்ணன்."

"இந்த அவசரமான உலகத்திலே ஏன் இவ்வளவு நீளமா வச்சிட்டு? கட் இட். கோபி சூட்ஸ். நைஸ் ஆஃப் யு. காத்திருக்கேன்," என்று அவள் சோபாவில் போய் அமர்ந்துக் கொண்டு அவனையே பார்க்க.

அவன் சங்கடமான ஒரு புன்னகையை விழுங்கி விட்டு, ஒலித்த இன்டர்காமில் சன்னமாக பேசிவிட்டு வைத்து, டெலிபோனில் சர்ர்ர்ர்ட், சர்ர்ர்ர்ட் என்று டயல் செய்ய ஆரம்பித்தான்.

ஆஷா கால் மேல் கால் அமர்த்திக்கொண்டு, தோளில் மாட்டியிருந்தா கார்ட்ராய் பையிலிருந்து கையடக்க நாவலை எடுத்து படிக்க ஆரம்பித்தாள். பக்கங்களை திருப்புகையில் எல்லாம் நிமிர்ந்தாள். நிமிரும் போதெல்லாம் கோபியின் பார்வையை உணர்ந்தாள். சிக்கனமாக சிரித்துவிட்டு தொடர்ந்தாள்.

அரை மணி நேரம் கழித்து பூட்ஸ் சரசரக்க அந்த இரண்டு இளைஞர்கள் வந்தார்கள். அவர்களைக் கண்டதும் கோபி எழுந்து போய் வரவேற்றான்.

"ஒரே நிமிஷம், உட்காருங்க புரொபஸர் உங்களுக்காகத்தான் காத்திருக்கார். அவருக்கு தெரிவித்து விட்டு உங்களை உள்ளே அழைத்துப்போறேன்."

கோபி இன்டர்காமில் பேசினான்.

''புரொபஸர், அவங்க வந்துட்டாங்க. சரி, சரி'' என்று வைத்துவிட்டு, ''டிரெஸ் சேஞ்ச் செய்து கொண்டு இருக்கார். ப்ளீஸ் உட்காருங்க.''

பிரிட்டோவும், சுனில் பிரபாகரும் மற்றொரு சோபாவில் அமர்ந்தார்கள்.

ஆஷா அவர்களை ஒரு தரம் பார்த்துவிட்டு புத்தகத்திற்குள் கவிழ்ந்தாள்.

கோட் பாக்கெட்டிலிருந்து சூயிங்கம் எடுத்துப் பிரித்து வாயில் போட்டுக் கொண்டான் சுனில். பிரிட்டோ சுவரில் ஒட்டப்பட்டிருந்த இயற்கை எழிலின் பின்னணியில் எழுதப்பட்டிருந்த ஆங்கில கவிதை வரிகளை படித்துக் கொண்டிருந்தான்.

இன்டர்காம் ஒலித்து, கோபி பேசி வைத்து.

''யெஸ். வாங்க, கூப்பிடறார்,'' என்றான்.

அவர்களை அழைத்துக்கொண்டு உள்ளே போய் பின் இவன் மட்டும் தன் நாற்காலியில் உட்கார்ந்து டைப்ரைட்டரின் காரேஜைத் தள்ளினான்.

''மிஸ்டர் கோபி, யார் இவங்க?'' என்றாள்.

''சி. ஐ. டி. ஆபீஸர்ஸ்.''

''ஓ. என்று புருவம் உயர்த்தினாள்.

புரொபஸர் திரிவேதிக்கு கிட்டதட்ட புருவமே இல்லை. ஒன்றிரண்டு முடிகள் தான் ஒட்டியிருந்தன. முன் நெற்றி பளபளத்தது. கணிசமான மூக்கு, நரை கலந்த மீசை, உதடுகள் சுண்டப்பட்டவையாய் சிவந்திருக்க, தங்க பிரேமில் கண்ணாடி அணிந்திருந்தார். நிதானமாகப் பேசினார்.

''உங்களோட பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு நான் என்ன என்ன உதவிகள் செய்யணுமோ, செய்யறேன்,''என்று சொன்னார் இறுதியாக.

''நல்லது புரொபஸர். இந்த மாநாட்டோட அமைப்பாளர்ங்கிற முறையிலே உங்க கிட்ட எங்க நிலைமையை தெளிவு படுத்த விரும்பறோம். டாக்டர் விக்ரம் சென்னையிலே இருக்கப் போறது ஏழு மணி நேரங்கள். இதிலே ஒவ்வொரு நிமிடமும் அவருக்குப் பாதுகாப்பு தர்றதுக்கு விபரமான திட்டங்கள் போட்டு நடவடிக்கைகள் எடுத்திட்டு வர்றோம். ஏர்போர்ட்டிலே அவர் இறங்கிறதிலேயிருந்து திரும்பி விமானம் ஏர்ற வரைக்கும் அவரோட நடவடிக்கைகள் துல்லியமாகத் திட்டமிடப்பட் டிருக்கிறது. உங்க மாநாட்டில் இரண்டு மணி நேரம் செலவழிக்கிறார். அந்த இரண்டு மணி நேரப் பாதுகாப்புக்குத்தான் உங்க உதவி தேவை. மாநாடு நடக்கப் போற கட்டிடம், ஹால், அவருக்கு அமைக்கப்போற நாற்காலியின் இடம், அவர் வந்து இறங்கற பாதை, நடக்கிற காரிடார் இதை எல்லாம் நாங்க பார்வையிடணும். இதைத் தவிர மாநாடு சம்பந்தமான முழு விபரங்கள், யார் யார் கலந்துக்கிறாங்க, மாநர்ட்டின் அஜெந்தா, இப்படிச் சில விபரங்கள் எங்களுக்கு வேணும்.''

''ஷ்யூர். எல்லாம் தர்றேன்.''

''எதுவும் டின்னர் வச்சிருக்கீங்களா அன்னிக்கி?''

''ஆமா, உண்டு, ஒரு சந்தேகம். உங்க டிபார்ட்மெண்ட் டுக்கு எதுவும் மர்ம கடிதம் வந்திருக்கா? ஏதாவது அசம்பாவிதத்தை எதிர்பார்க்கின்றீர்களா''

''அசம்பாவிதம் எதுவும் நடந்துடக்கூடாதேங்கிறதிலே கருத்தா இருக்கோம். உங்க டாக்டர் விக்ரம் நம்ம தேசச் சொத்தாகப் போறாரே. நம்ம டிஃபன்ஸ் மினிஸ்ட்ரிக்குப் பெரிய சேவை செய்யப் போறாரே. ஆக்சுவலி அவரோட டிவைஸ் என்ன புரொபஸர்?''

"ஸோலார் பாம். பாமரத்தனமாக சொல்லனும்னா வெப்பக் குண்டு. ஸோலார் சக்தியைக் கால்குலேட்டரிலே கணக்குப் போடவும், சமைக்கவும், காரோட்டவும், சின்ன விமானங்களை பறக்க வைக்கவும் ஒரு சக்தி வெளியீடா பல வழிகளிலே பயன்படுத்தக் கண்டு பிடிச்சிட்டே இருக்காங்க. டாக்டர் விக்ரமோட அணுகுமுறை வேற. இவர் பார்வை வெப்பத்து மேல. டெஸ்ட்ரக்டிவ் சைட்ல யோசனை செய்தார். சித்திரை வெயில்லே பல பேர் சுருண்டு விழறாங்களே, ஏன்? ஹீட் ரெசிஸ்டன்ஸ் இல்லாததாலே. 105 டிகிரிக்கே இத்தனை. தாக்குதல்னா, அதை பன்மடங்காக பெருக்கி நினைச்சு பாருங்க. தொழிற்சாலைகளில் வெப்பம் கக்கற தீ நாக்கு கண்ணுக்குத் தெரிகிறது. சூரியன் விஷயத்தில் தெரிவதில்லை. தீப் பிழம்பு தானே அது? ஒரு ஸோலார் பாம் என்ன செய்யும் தெரியுமா? கட்டடங்களை தகர்க்காது, மென்மையா தீ வைக்கும். ஒரு ஸோலார் பாம் போடப்பட்ட இடத்திலிருந்து நாலு கிலோ மீட்டர் சுற்றளவுக்கு அனல் தடவிட்டுப் போகும். அனல் காற்றுன்னா மெட்ராஸ் அனல் இல்லை. ஒரு காட்டை அது கடந்திட்டு திரும்பி பார்த்தா கரி மலையத்தான் அது பார்க்கும். பச்சை பசுமையானது எதுவும் இருக்காது. வேரோட கருகிடும். நம்மைக் கடந்து அந்த காற்ற போனப்புறம் நம் தசையெல்லாம் உருகி ஊத்தி எலும்பு கூடா இருப்போம். அப்படின்னா பாம் ப்ரட்யூஸ் பண்ற ஹீட் வேல்ஸ் சக்தியை இமேஜ் பண்ணிக்கிங்க. டாக்டர் விக்ரம் நாலு வருஷமா இதிலே திவிரமா இருந்தார். இங்கே கான்பரென்ஸ்ல தன்னோட வெற்றியை அறிவிக்கின்றார் விக்ரம். அடுத்த மாசத்திலே சஹாராவிலே சோதனை நடத்துறதுக்கான ஆயத்தங்களைக் கூட அரசாங்கம் செய்ய ஆரம்பிச்சிட்டுது."

''அதனாலேத்தான் அவருக்கு அதிகப்படியான பாதுகாப்பு ஏற்பாடு. புரொபஸர் மாநாட்டுக்குப் பிறகுதான் செய்தி மக்களுக்கு போகுது. அப்படித்தானே?''

''ஆமாம்.''

''இந்த விஞ்ஞான ரகசியத்தை நம்ம அரசாங்கத்துக் கிட்டே ஒப்படைக்கிறார் மாநாட்டில். ஆனால் நம்ம டிஃபன்ஸ் மினிஸ்டரோ அரசாங்க உயர் தலைவர்களோ இந்த மாநாட்டுக்கு அழைக்கப் படலை. ஏன் இப்படி?''

''ஸோலார் எனர்ஜியில் ஆராய்ச்சிகள் நடத்தற அகில இந்திய மாநாடு இது. இந்த முக்கியமான சப்மிஷனுக்காகக் கூட்டப்படுது. இங்கே சம்பிரதாயமா அஸோஸியேஷன் பிரசிடெண்ட் கிட்டே ஒப்படைக்கிறார் டாக்டர் விக்ரம். அவ்வளவு தான் இது ஒரு ஃபார்மலான ஃபங்ஷன். பாராட்டுக் கூட்டம் மாதிரி. டாக்டர் விக்ரம் தன் கண்டுபிடிப்பு ரகசியத்தை அரசாங்கத்துக்கு தெரியப்படுத்தி டிபன்ஸ் மினிஸ்டிரில தீவிரமான ஆராய்ச்சிகளிலே இறங்கிட்டாங்க. பொதுமக்களுக்கும், உலகத்துக்கும் மட்டும்தான் தெரியாது.''

''வெல். நாம் மாநாடு நடக்கிற இடத்துக்கு எப்போ போகலாம்?''

''இப்பவே நான் தயார்.''

''வாங்க, போகலாம்.''

''ஒரு நிமிடம்,'' என்று இன்டர்காமில், ''கோபி, காரை வாசல்லே கொண்டுவந்து நிறுத்தினதும் என்னைக் கூப்பிடு. வெளியில போறோம்.'' என்று சொல்லிட்டு, ''நாளைய பிள்ளைங்க எல்லாம் டாக்டர் விக்ரத்தோட வாழ்க்கை வரலாறு படிக்கப்போறாங்க! அப்பா! என்ன மூளை. பார்த்தா கோமாளி மாதிரி இருப்பார். போட்டோ பார்த்திருக்கீங்களா?''

''பார்த்தோம்.''

''சார். ரெடி,'' என்று கோபி அழைக்க, புறப்பட்டார்கள்.

வெளியே வந்து வாசலில் நின்ற அம்பாசிடர் காரில் ஏறிக் கொண்டு அவர்கள் சென்றதும் கோபி ஆஷா அருகே வந்து நின்று சிரித்தான். ''உங்களுக்கு அதிர்ஷ்டம் இல்லை மேடம்.''

''ச்சே!'' என்றாள் வெறுப்பாக. ''எப்போ திரும்புவார் மிஸ்டர் கோபி?''

''தெரியலை. சொல்லலை.''

''இப்ப என்ன பண்றது?''

''இங்கே உட்கார்ந்து ஆபீஸ் மூடறவரைக்கும் நீங்க நாவல் படிக்கிறதிலே எனக்கு ஒண்ணும் ஆட்சேபனை இல்லை.''

''என்ன சார், எரிச்சல் பண்றீங்க?''

''மேடம், உங்களுக்கு என்ன விபரம் வேணும்?''

''உங்களாலே சொல்ல் முடியுமா?''

''நீங்க கேக்கவே இல்லையே இன்னும். சொல்லக் கூடியதைச் சொல்வேன்.''

''பிரஸ் ரிப்போர்ட்டர்களுக்கு டாக்டர் விக்ரத்தோட ப்ரோக்ராம் டைப் பண்ணிக் கொடுத்திருக்காங்க. அதிலே ஏர்போர்ட்லே இறங்கறது, வர்றது, கவர்னரையும், முதலமைச்சரையும் சந்திக்கறது, மாநாட்டிலே கலந்துக்கிறது இப்படி எல்லா நிகழ்ச்சிகளுக்கும் இடம் எங்கே போட்டிருக்கீங்க? ஒன்ணே. ஒன்ணு. போடலை.''

''என்ன அது?''

''கவர்னரையும், முதலமைச்சரையும் சந்திச்சிட்டு, மாநாட்டுக்கு வர்றதுக்கு முன்னாடி ஒன்றரை மணி நேரம் ஓய்வெடுக்கிறார்னு இருக்கு. எங்கே தங்கி ஓய்வெடுக்கிறார்னு இல்லை. எனக்கு அதான் வேணும்.''

''எதுக்காக?''

''என்ன சார் இது, புரோக்ராம்லே பிரஸ் மீட்டிங்கே இல்லை. கவர்னர் மாளிகை வாசல்லே அவர் காருக்குள்ளே வர்றதுக்கு முன்னே எத்தனை கேள்வி கேட்க முடியும்? என்ன பதில் சொல்வார்? மாநாட்டிலேயும் போலீஸ் நெருங்க விட மாட்டாங்க எக்ஸ்க்லூசிவா ஒரு ரெண்டு கேள்விக்காவது நான் பதில் வாங்கணும்.''

''உங்க ஆர்வம் சுவாரஸ்சியமா இருக்கு. ஆனா இது இம்பாஸிபிள். இந்த மாதிரி நீங்க தொந்தரவு கொடுத்துடக்கூடாதுன்னு தான் அவர் தங்கற ஒட்டல் பெயரைக் குறிப்பிடலை. அவர் தங்கப் போற ஹோட்டலுக்கு மாநாட்டிற்கு மூணு நாள் முன்னாடிலேர்ந்து டைட் செக்யூரிட்டி போடறாங்க, கேட்டுக்குப் பக்கம் கூட நீங்க போக முடியாது.''

அதெல்லாம் உங்களுக்கு ஏன்? புகை நுழைய முடியாத இடத்திலேகூட பத்திரிக்கைக்காரன் நுழைஞ்சிடுவான். எங்க ரீடர்சுக்கு மத்தவங்க தர முடியாததை நான் தந்தே ஆகணும். சொல்லுங்க கோபி, எங்கே தங்கறார்?''

அவள் 'மிஸ்டரை' கழற்றியதில் அவனுக்கு வருத்தத்தை விட லேசான கிறக்கம் மேலோங்கியிருந்தது.

''ஒட்டல் ராயல் மௌண்ட்டன். கோட்டை மாதிரி ஒட்டல். போய் முட்டிக்குங்க. மிஸ் ஆஷா, இந்தத் த்கவலை நான் சொல்லக்கூடாது. உங்க ஆர்வத்துக்காகச் சொன்னேன். பத்திரிக்கையிலே போட்டுடாதீங்க. போட்டீங்க. உங்களைச் சும்மா விடமாட்டேன்.''

''என்ன செய்வீங்க?'' என்றாள் இடுப்பில் கைகளை வைத்துக் கொண்டு.

''எது வேண்டுமானலும் செய்வேன்.''

''எது வேணும்னாலும்னா? கொலையா? ஊஹூம். உங்க மூஞ்சிக்கு அதெல்லாம் பொருந்தவில்லை. எக்ஸார்சிஸ்ட்டே பார்த்திருக்க மாட்டிங்க. பின்னே? ரேப்பா? அதுவும் உங்களாலே முடியாது. ஏன்னா. என்று கண்ணடித்து, ''ஒரு வேளை நான் சம்மதிச்சிட்டா?'' என்று சிரித்து, ''கவலைப்படாதீங்க. மூச்சு விட மாட்டேன். ஒய்வா ஒரு நாள் போன் பண்றேன். சந்திக்கலாம். வர்றேன், கோபி. இன்னொரு சந்தர்ப்பத்திலே தாங்க்ஸ் பண்றேன்,'' என்று ஹீல்ஸ் டக் டக் என்று சப்தமிட, ரிதமிக் குலுங்கலோடு விரைவாய் வெளியேறினாள், ஆஷா.

4

ராவ் காரை நிறுத்தி ஹாரன் அடித்தான்.

மாடியில் ஜன்னல் கதவு திறந்தது. ‘‘இதோ வர்றேன்’’ என்றான் கிரண். இது வரைக்கும் ராவ் அருகாமையில் பைப்பில் தண்ணீருக்குக் காத்திருந்தவர்களைக் குளிர் கண்ணாடி வழியாக பார்வையால் தடவினார்.

காரின் டேப்பை போட்டு, சப்தத்தை உயர்த்தி அவர்களில் சிலரை திரும்பிப் பார்க்க வைத்தான். கிரண் வந்து ஏறிக்கொண்டதும் அணைத்துவிட்டுப் புறப்பட்டான்.

‘‘கிரண், யோசிச்சியா? இன்னிக்கு முடியும் முடியாதுன்னு உறுதியாக பதில் சொல்லியாகணும் நாம்.’’

காரின் அசைவினில் அசைந்த பொம்மைப் பறவையைப் பார்த்துக் கொண்டு, ‘‘ஏற்பாடுகள் பலமா இருக்கு ராவ். பேசலாம். அலெக்ஸ் வர்றானா?’’

‘‘நீ சொன்ன வேலையாத்தான் போயிருக்கான். நேரா என் வீட்டுக்கு வர்றேன்னு சொல்லியிருக்கான். சாப்பிட்டியா?

‘‘இல்லை. எழுந்தது லேட். ராத்திரி ராகுல் கொடுத்த பேப்பர்களை படிச்சிட்டுப் படுக்கப்போறப்போ ஒரு மணியாச்சு.’’

‘‘மொதல்ல ஒரு ரெஸ்டாரண்ட் போய்ச் சாப்பிடலாம். அப்புறம் என் வீட்டுக்குப் போவோம்.’’

ஓசைப் படுத்தாமல் பிளேட்டுகளை வைத்து விட்டுப் போனான் சீருடை சர்வர். யோசனையுடன் சாப்பிட்டான் கிரண். அருகே கண்ணாடி சுவர். அப்புறத்தில் சென்னையின் சுறுசுறுப்புச் சாலையின் காலை இயக்கங்கள். ராவ் சிகரெட் கரைத்துக்கொண்டு கிரண் சாப்பிடும் வரை பாக்கெட்டில் இருந்து எடுத்து எலெக்ட ரானிக் கேம் விளையாடி கோல் போட்டுக் கொண்டிருந்தான்.

மறுபடி காரில் பயணம்.

ராவின் வீட்டில் அலெக்ஸ் காத்திருந்தான். மூவரும் உள் தனியறைக்குள் வந்து கதவை சாத்திக்கொண்டு ஒரு மேஜையைச் சுற்றி அமர்ந்தார்கள்.

''அலெக்ஸ், என்னாச்சு?'' என்றான் கிரண்.

''மொத்தம் அறுபத்திரெண்டு விஞ்ஞானிகள் கலந்துக்கிறாங்க. அனுமதி இல்லை. டாக்டர் விக்ரம் இந்த பயணத்தில் நிருபர்களை சந்திக்கவில்லை. அவர் போனதும் அஸோசியேஷன் பிரசிடெண்ட் தான் நிருபர்களை சந்திக்கின்றார்,'' என்றான் அலெக்ஸ்.

''எந்தக் கட்டத்திலேயும் ஸ்கோப் தெரியலையே.'' என்றான் ராவ்.

''ராவ், இந்த திட்டத்தைக் கைகழுவ எனக்கு மனசு வரலை. அஞ்சு லட்ச ரூபாய் ஆளுக்குக் கிடைக்குது. ஒரு ஆளை கடத்தி இன்னொரு ஆள் கிட்டே ஒப்படைக்கிறோம். அதுக்கு எவ்வளவு பெரிய சம்பளம்!''

''கிரண், வாஸ்தவம். ஆனா அந்த ஆள் சாதாரண ஆள் இல்லையே! அவருக்கு அமைக்கப்பட்டிருக்கிற பாதுகாப்பு சாதாரணம் இல்லையே!''

''சிக்கலுக்குள்ளே நுழைஞ்சு ஜெயிப்பதில்தான் சாமர்த்தியம் இருக்கு.''

''யார் மறுத்தது? எப்படி நுழையலாம்? எப்படி முடிக்கலாம்? சொல்லு.''

''இரு ராவ், மொதல்ல நம் தகவல்களைத் தெளிவு படுத்திக்கலாம்,'' என்று பாக்கெட்டிலிருந்து மடிக்கப் பட்ட காகிதங்களை எடுத்து விரித்தான் கிரண்.

மூன்று கப்களில் அலெக்ஸ் பிளாஸ்க்கிலிருந்து டீ ஊற்றினான் சிதறாமல்.

''லுக். இன்னிக்குத் தேதி பதினைஞ்சு. இருபதாம் தேதி மாநாடு. மாநாடு நடக்கிறது அஸோசியேஷன் கட்டிடத்துக்குள்ளே இருக்கிற ஹால்லே. நம்ம டாக்டரோட துல்லியமான பயணத் திட்டம் நம்ம கையிலே இருக்கு. பம்பாய் சாந்தாகுரூஸ் விமான நிலையத்திலே காலைலே ஆறு முப்பதுக்கு பாஸஞ்சர் விமானத்திலே புறப்படறார் டாக்டர். விமானம் நேரா மெட்ராசுக்கு ஒன்பது நாற்பதிலேர்ந்து ஒன்பது ஐம்பதுக்குள்ளே வந்து இறங்குது. விமான நிலையத்திலே வரவேற்பாடு செய்து புறப்பட்டு புல்லட் புரூஃப் கார்ல நேரா கவர்னர் மாளிகைக்கு வர்றார். அங்கே இரண்டு மணி நேரம் இருந்து பேசி, விருந்திலே கலந்துக்கறார். 12.30க்கு கவர்னர் மாளிகையிலிலேர்ந்து புறப்பட்டு ஓய்வெடுக்கப் போறார். ரெண்டு மணிக்கு மாநாட்டிலே கலந்துக்கறார். நாலரை வரைக்கும் மாநாடு. மாநாடு முடிஞ்சதும் நேரா விமான நிலையம் போய் அஞ்சு மணிக்கு டெல்லி விமானத்திலே ஏறிடறார். இந்தப் பயணம் முழுக்க அவர் கூடவே வர்றது நஸியான்னு அவர் லேடி செக்ரட்டரி மட்டுமே. இந்த ஏழு மணி நேரத்திலே நாம் எங்கே செயல்படறது பெட்டர்?'' என்றான் கிரண்.

அலெக்ஸ் டீயை சப்பிக் கொண்டு, ''எனக்கு நம்பிக்கை இல்லை,'' என்று குறுக்கில் தலையை அசைத்தான்.

''ஏன் அலெக்ஸ்?''

''பாதுகாப்பு ஏற்பாடுகள் அப்படி கிரண். சி. பி. ஐ. ஆபீஸர்கள் மேற்பார்வையில் இன்ச் இன்ச்சா அலசிட்டிருக்காங்க. மாநாட்டிலே டின்னர் சமைக்கப் போற சமையல்காரங்களோட நடவடிக்கைகளைக் கூட இப்பவே கவனிக்க ஆரம்பிச்சிட்டாங்க. ஏர்போட்டிலேயும், மாநாட்டு கட்டிட வாசல்லேயும் போலீசைக் குவிக்கப் போறாங்க. விரதம மந்திரி வருகைக்குச் செய்கிற ஏற்பாட்டிலே முக்கால் வாசி நடந்திட்டிருக்கு, தெரியுமா?''

''ஏன் ராவ், டாக்டரோட பயணத் திட்டத்திலே நம்மைக் கவர்ற மாதிரி ஒரு பாயிண்ட் இருக்கே கவனிச்சியா?''

''எது?''

''ஒன்றரை மணி நேரம் டாக்டர் ஓய்வெடுக்கிறார். எங்கே ஓய்வெடுக்கிறார்? நம் கிட்டே பதில் இருக்கா? அநேகமா ஒரு பிரபலமான தனி ஓட்டலிலே ஓய்வெடுப்பார். இல்லை?''

''கிரண், மை டியர் புத்திசாலிப் பையா, என்னைக் கேளு. என்கிட்டே அதுக்கும் பதில் இருக்கு. ஓட்டல் ராயல் மௌண்ட்டன்ல தங்கறார். அஞ்சு நட்சத்திர ஓட்டல், ஏழு மாடிக் கட்டிடம். பூந்தமல்லி ஹைரோட்லே அமிஞ்சிக்கரை பக்கமா இருக்கு.''

''அலெக்ஸ், எப்படி தெரியும் உனக்கு?''

''இதெல்லாம் சில்லறை ரகசியங்கள், கிரண். சுலபமா கறந்திடலாம். எனக்கு நாலாபுறமும் நண்பர்கள். ஓட்டல்லே 18-ம் தேதியிலேர்ந்து புது புக்கிங் கிடையாது. குறிப்பிட்ட 20-ம் தேதி ஓட்டல்லே இருக்கிறவங்களுக்கு தனி கார்ட் தர்றாங்க. அது இல்லாமல் வெளியே போனா திரும்ப உள்ளே வர முடியாது.''

''அலெக்ஸ், ஓட்டல்லே எந்த சூட்லே தங்கறார் தெரியுமா?''

"ஊகூம். நாள் நெருங்கினா தெரியலாம்."

"டாக்டர் ஒய்வெடுக்கிற இந்தக் கட்டம் எனக்கு கொஞ்சம் நம்பிக்கையா இருக்கு ராவ்," என்றான் கிரண்.

"எப்படி? எப்படி சொல்லு. ஒட்டலைச் சுத்திப் போலீஸ் பாதுகாப்பு இருக்கும். மாட்டினோம்னா, மில்லி மீட்டர் மில்லி மீட்டரா கொலை செய்வாங்க."

கிரண் உறுதியாகச் சொன்னான்.

"ராவ், நீ ராகுல் கிட்டே உறுதியா சொல்லிடலாம் சரி, ஆள் எப்படி?"

"கன் பார்ட்டி. இப்பவே பாதி தொகையை தரட்டுமாங்கறார்."

"வேணாம். தேவைப்பட்டால் கொஞ்சம் அட்வான்ஸ் வாங்கிக்க. அவர் கிட்டேயிருந்து நாம கேக்கற எல்லா உதவியும் கிடைக்கும் இல்லை?"

"தாராளமா, தேவைப்பட்டால் ஹெலிகாப்டர் கூட தர்றேங்கறார்."

"பின்னணியிலே பெரிய கை உட்கார்ந்து இருக்கு இல்லே?"

"கை இல்லை. நாடு. டாக்டர் விக்ரத்தோட மூளைக்கு மதிப்பில்லாத விலை. அவரைப் பத்தி லைப்ரரியிலே நிறைய சேகரிச்சுப் படிச்சேன் கிரண். ஸோலார் எனர்ஜி வச்சி. ஒரு பயங்கரமான போர் ஆயுதம் தயாரிக்க முடியுமும்னு ரெண்டு வருஷம் முன்னாடி பேசியிருக்கார். நாலு வருஷமா அது தொடர்பா ஆராய்ச்சிகள் செய்து இருக்கார். அந்தக் குறிப்பிட்ட ஆயுதத் தயாரிப்பிலே வெற்றி அடைஞ்சிருக்கணும் அவர். இல்லைன்னா லட்சம் லட்சமா கொட்டி அவரைக் கவ்விக்கிட்டுப் போக ஒரு குரூப் முன்வருமா?"

"கரெக்ட் ராகுலோட நோக்கம் என்ன? டாக்டர் தன்னோடு ஃபார்முலா எதுவும் கொண்டு வர்றார், அதுதான் நோக்கமா?"

''சேச்சே! நீ நினைக்கற மாதிரி நேரடியா அப்படியே காகிதங்களிலே எதுவும் இருக்காது. அப்படியே இருந்தாலும் கோட் முறையிலே இருக்கும். அதை டிகோட் பண்றது சம்ந்தப்பட்டவர்களாலேதான் முடியும். ராகுலுக்கு இதிலே நேரடி சம்பந்தம் இல்லை. குறிப்பிட்ட ஒரு நாடு டாக்டர் விக்ரத்தை அள்ளிக்கிட்டுப் போய் பிரெய்ன் வாஷ் மாதிரி செஞ்சி தனக்கு ரகசியங்களை அடைய நினைக்குது. இதையெல்லாம் எதிர்பார்த்துதானே அரசாங்கமும் தீவிரமா அவரைப் பாதுகாக்க நினைக்குது. கடந்த ஒரு வருடமாகவே பம்பாய்லே டாக்டர் விக்ரத்துக்குப் பிரமாதமான பாதுகாப்பாம் எப்போதும்.''

கிரண் அமைதியாக காலி பீங்கான் கோப்பையைத் தட்டினான்.

''கிரண், ஒட்டல்லே வச்சி அவரைக் கடத்திட முடியும்னு நம்பறியா?''

''ஒட்டலோட அமைப்பைப் பார்த்ததும்தான் அதை முடிவு செய்ய முடியும்.''

''நமக்கும் சாதகமா இல்லைன்னா? சாரி சார், நாங்க சின்ன குரூப். சிலை, பிஸ்கட் இதுமாதிரி ஏதாச்சும் கை மாத்தணும்னா சொல்லுங்க. இவ்வளவு பெரிய வேலையெல்லாம் வேணாம்னு சொல்லிடலாமா?''

''ராவ், நீ ஆரம்பத்திலேர்ந்து நம்பிக்கையில்லாமல் பேசறே.''

''முதல்லே நம்பிக்கையாகத்தான் இருந்தேன். போலீசோட ஏற்பாடுகளைத் தெரிஞ்சிக்கிட்டதுக்கப்புறம் தான் என் சந்தோஷம் குறைஞ்சிடுச்சி. அவங்களை நாம் எப்பவும் குறைவா எடை போடக்கூடாது, கிரண் நாம் தனி நபர்கள். அவங்க படை. அவர்களுடைய சாதனங்களும், அதிகாரங்களும் பிரம்மாண்டமானவை.''

''அதனால. அவங்களுக்குத் தெரியாம இந்த காரியத்தை செய்யிறது கஷ்டம்னு சொல்றியா?'' என்று ஆழமாகப் பார்த்தான் கிரண்.

ஆமாம் என்பதற்கு தலையசைத்தான் ராவ்.

''பார்க்கலாம். முயற்சிக்கலாம். வேற வழி இல்லையின்னா அவங்களுக்கு தெரிஞ்சே காரியத்தைச் செய்யலாம்,'' என்று சிரித்தான் கிரண்.

''விளையாடறியா? தெரிஞ்சேன்னா?''

''தெரிஞ்சேன்னா... சொல்லிட்டு செய்வோம்கறேன்.''

''புரியலை.''

''மதிப்பிற்குரிய ஐயா, நீங்கள் பயங்கரமாகப் பாதுகாப்பு தரப் போகிற டாக்டர் விக்ரம் அவர்களை இதே சென்னையில் உங்கள் கண்ணெதிரே கடத்திச் செல்லப் போகிறோம்--- அப்படின்னு தகவல் தெரிவிச்சுட்டு செய்யலாம்.''

''எரிச்சலைக் கிளப்பாதே. திட்டமே அமையலை, கற்பனை சுகமா?''

''கற்பனை இல்லை அலெக்ஸ். இந்த ப்ராஜெக்டை என் கிட்டே விடு. ஒரு சவாலா நிகழ்த்திக் காட்டுகிறேன். நான் சொன்ன மாதிரியே தகவல் கொடுத்திட்டு செஞ்சிக்காட்டுறேன். நான் சொல்ற ஒவ்வொரு கட்டளையும் ராகுல் செஞ்சு தந்தால் போதும்.''

''அவர் காத்திட்டிருக்கார். உன் திட்டம் என்ன கிரண்?''

''வாங்க, முதல்லே ஒட்டலைப் பார்த்துடலாம். அதுக்கப்புறம் சொல்றேன்.''

அவர்கள் புறப்பட்டார்கள்.

5

குதிரை வாலாக இரண்டு முத்துக்கள் கொண்ட ரப்பரால் கட்டியிருந்தாள். நடக்கும்போது இடம், வலமாக அசைந்தது. பஸ் ஸ்டாப்பிலிருந்து நடந்து சாலையைக் கடந்து பிரம்மாண்டமான ஓட்டல் ராயல் மௌண்ட்டன் முகப்புப் பகுதிக்கு வந்தாள்.

விதவிதமான கார்கள் உள்ளே போய்க் கொண்டும், வெளியேறிக் கொண்டும் இருக்க, காம்பௌண்டிலிருந்து உள் கட்டிடத்திற்கு மைல் கல் கணக்கில் நடக்கவேண்டும் போல் இருந்தது. எங்கு பார்த்தாலும் நீல நிறத்தில் யூனிபார்ம் அணிந்த, ஓட்டலின் பாட்ச் அணிந்த ஊழியர்கள்.

சுதந்திரமாக உள்ளே நடந்தாள். இருபுறமும் கான்க்ரீட் வினோதங்கள். நீர்ப் பீய்ச்சும் குட்டிக் குழாய்கள். பசேல் என்று வெல்வெட் மிருதுத் தன்மையுடன் புல்வெளிகள். பிரதான வாசலுக்கு அருகில் இருப்புக் கம்பங்கள் நட்டு எல்லா நிறங்களிலும் நீளமான கொடிகள் கையசைத்துக் கொண்டிருந்தன.

இந்த மாதிரி ஓட்டல்களில் ஒரு சௌகர்யம், கொஞ்சம் டீசண்டாய் டிரஸ் செய்து கொண்டிருந்தால் போதும். ஏன் வந்தாய், யார் நீ என்று கேள்விகள் கிடையாது. ஆனால் எந்த மூளையிலிருந்தோ சில பாதுகாப்புக் கண்கள் தொடர்ந்துக் கொண்டே இருக்கும். சந்தேகம் ஏற்படுகின்ற மாதிரி இருக்கும் பட்சத்தில் தனி வழி முறைகள்.

ஆஷாவுக்கு முன்னாடி பிரம்மாண்டமான கதவுகள். உள் பக்கம் அதைத் திறந்து மூடுவதற்காகவே மற்றொரு நீல ஊழியனால் திறக்கப்பட, உள்ளே வந்து காற்றில் மிதந்த வாசனையையும், குளிரையும் ஒரே நேரம் உணர்ந்தாள்.

ஒரு விமானத்தையே நிற்கவைக்கலாம் போல விசாலமான ஹால். வொய்ட்சிடார் என்கிற மரவகையினால் செய்யப்பட்ட கலைத்தனமான வேலைப்பாடுகள் கொண்ட சுவர்கள். கொத்து கொத்தாய், கிட்டத்தட்ட பதினைந்து சோலோ செட்டுகள். இடையே இடையே நீரை புஷ்பிக்கும் ஃபவுண்டன்கள்.

இரண்டு ரயில் கம்பார்ட்மெண்ட்டுகளில் ஒட்டு மொத்த நீளத்தில் வரவேற்பு மேஜை. அதன் அந்தப் பக்கத்தில் யாரை அழகி என்று சொல்வது என்பதில் திணறல் ஏற்படக்கூடிய பத்துக்கும் மேலான புஷ்பவதிகளின் நளினமான இயக்கங்கள்.

ஆஷா நேராக ரிசப்ஷன் மேஜைக்கு வந்தாள்.

“எக்ஸ்க்யூஸ் மீ மேடம்.”

“எஸ்!” என்றாள் ஒருத்தி.

“மிஸ் கரோலினைச் சந்திக்க வேண்டும். இன்றைக்கு அவளுக்கு டூட்டி எந்தப் பிரிவில் என்று சொல்ல முடியுமா?”

“ஒன் மினிட்,” என்று ஃபைலைப் புரட்டி அட்டவணை மாதிரி இருந்ததைப் பார்த்து, “ஷாப்பிங் செக்ஷனில் இருக்கிறாள்,” என்றாள்.

“தாங்க் யூ. எப்படிப் போவது அங்கே?”

“மூன்றாவது எண் போட்ட லிஃப்ட் அறைக்குச் சென்று நான்காவது ஃப்ளோரில் வெளியேறி இடப் பக்கம் வந்தால் ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் காண்பீர்கள். அதனுள்ளே அதன் அலுவலகப் பகுதியை அடையாளம் காண்பது சுலபம்.”

''மறுபடி நன்றி.''

அவள் சொன்னபடி செயல்பட்டு ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் வந்தாள். அதிகக் கூட்டம் இல்லை. பட்டு, வெள்ளி, கலைப் பொருள்கள் என்று குறிப்பிட்ட பொருட்களின் அலங்கரிக்கப்பட்ட அங்காடிகளில் பேரம் இல்லாமல் வியாபாரம் நடந்து கொண்டிருக்க. கரோலினைச் சுலபமாகச் சந்தித்தாள் ஆஷா.

இவளை சந்தித்ததில் மிக உற்சாகப்பட்டாள் அவள். மற்றொரு பெண்ணிடம் சொல்லிவிட்டுத் தன் மேஜையை விட்டு எழுந்து வந்து ஓர் ஒய்வான தனியறைக்கு அழைத்துப் போனாள். அமர்ந்தார்கள்.

''என்ன ஆஷா? மறுபடி பேட்டியா?''

''இல்லை, சும்மா, உன்னைப் பார்க்கலாம்னு.

''யெஸ். காரியம் இல்லாம வர மாட்டியே?''

''ஆமாம். கரோ, ஒரு உதவி செய்யணும்.''

''சொல்லு.

''வர்ற இருபதாம் தேதி உங்க ஓட்டலில் ஒரு முக்கியமான பிரமுகர் தங்கப் போறார் தெரியுமா?''

''தெரியும்.''

''அன்னிக்கு நான் ஓட்டல் உள்ளே வர முடியுமா?''

''ஊகூம். அவர் வந்துட்டுப்போனதும் வரலாம். சில ஏற்பாடுகள் செய்திருக்காங்க. இருபதாம் தேதி காலைலேர்ந்து டாக்டர் விக்ரம் ஓட்டலுக்கு வந்துட்டு புறப்பட்டுப் போற வரைக்கும் புது விசிட்டர்ஸ் யாரும் கிடையாது. ஓட்டல்லே தங்கி இருக்கிறவங்களுக்கு ஸ்பெஷல் கார்ட் கொடுத்து அது உள்ளவங்கதான் உள்ளே வரணும்.''

''நீங்கள்ளாம்?''

''எங்களுக்குத்தான் ஸ்டாஃப் அடையாளக் கார்டு இருக்கே?''

"கரோ, இந்த ஓட்டல்லே உன்னை மாதிரி லேடி ஸ்டாஃப்ஸ் எவ்வளவு பேர் வேலை பார்க்கிறாங்க?"

"எண்பது பேருக்கு மேலே இருக்கோம்."

"எல்லோருக்கும் எல்லாரையும் அறிமுகம் உண்டா?"

"சொல்ல முடியாது. தினம் புதுசா நாலு பேர் காலையிலே வேலையில வந்து சேர்றாங்க. ஒரே மாசத்திலே வேலை பிடிக்காமல் நின்னுடறாங்க. எனக்கே பாதி பேருக்கு மேலே பேர் கூடத் தெரியாது."

"வெரிகுட். அப்போ நீ என்ன செய்யறே. வர்ற இருபதாம் தேதி லீவு போடறே. உனக்காக நான் ரீசர்வ் பண்ணி தர்ற இரண்டு இங்கிலீஷ் சினிமாவுக்குப் போறே. இல்லைன்னா உன்னோட பாய் ஃபிரெண்ட் தாம்ஸனோட சுத்தறே."

"என்னம்மா இது? ஏன்?"

"உன்னோட ஸ்டாஃப் அடையாள கார்டு எனக்கு வேணும். என் கிட்டே கொடுத்திட்டு நீ சுத்து."

"என்ன ஆஷா, வம்பிலே இழுத்து விடறே."

"எதுவும் வம்பு இல்லே இதிலே."

"மானேஜ்மெண்ட்டுக்குத் தெரிந்தால் என் வேலை போயிடும்."

"பயப்படாதே, நான் ஜாக்கிரதையா நடந்துப்பேன். என்னை மீறி ஏதாவது நடந்து உன் வேலை போயிட்டா எங்க பத்திரிக்கை ஆபீஸ்லே சர்க்குலேஷன் செக்ஷன்லே ரெண்டு போஸ்ட் காலி இருக்கு. உன்னை உட்கார்த்தி வச்சிடறேன். கவலையே வேணாம், சரிதானே?"

"எதுக்காக ஆஷா இதெல்லாம்?"

"டாக்டர் விக்ரமை ரெண்டே இரண்டு தனிக்கேள்விகள் கேட்டுப் பதில் வாங்கணும். இந்தப் பயணத்தில் அவர் நிருபர்களைச் சந்திக்கவில்லை."

''ரொம்பக் கஷ்டம் ஆஷா. அவர் தங்கற சூட் பக்கமாகக் கூட உன்னை போக விட மாட்டாங்க.''

''நீ ஏன் அதைப் பத்திக் கவலைப் படறே. இப்போ உன் உதவியாலே ஒட்டலுக்கு உள்ளே வரப் போறேன் இல்லையா? அவர் ரூமுக்கு எப்படிப் போறது, எப்படி பேசறதுங்கறதுக்கெல்லாம் தனித் தனியா பிளான் வச்சிருக்கேன்.''

''என்னமோ செய். அனாவசியமாக ரிஸ்க் எடுத்துக்கறேன்னு தோணுது.''

''வாழ்க்கையே ஒரு பெரிய ரிஸ்க்தானே கரோ, இந்த நிமிடம் எனக்கு ஹார்ட் அட்டாக் வந்துட்டா... நாளைக்குக் காலைல ஆபிச்சுவரி. என்று சிரித்துக் கொண்ட ஆஷாவை கவலையாகப் பார்த்தாள் கரோலின்.

''ஓ. கே. கரோ, நான் புறப்படறேன். பத்தொன்பதாம் தேதி ராத்திரி உன் வீட்டுக்கு வந்து அடையாள கார்டை வாங்கிக்கறேன். ஹேய். அதிலே போட்டோ இருக்குமா?''

''இல்லை.''

''நல்ல வேளை, வரட்டுமா?''

''இரேன். ஜூஸ் வரவழைக்கிறேன்.''

''இல்லை கரோ, இந்தப் புது நாவலை இன்னிக்குள்ளே படிச்சு முடிச்சிட்டுத்தான் அடுத்த வேலை. நானூறு பக்கம் இருக்கே.''

''இரு ஆஷா, இதுக்கு எதுக்காக லைப்ரரிக்குப் போறே? ஒட்டல்லேயே மினி பார்க் ஒண்ணு இருக்கு. இப்போ யாரும் இருக்க மாட்டாங்க. சுத்தி அழகான பூச்செடிகள். வாட்டர் ஃபவுண்டன்ஸ். உனக்குப் படிக்க சுகமான இடம். வா, காட்டறேன். படி, மத்தியானம் என்னோடு லஞ்ச் முடிச்சிட்டு போகலாம். என்ன?''

"வெரி குட் ஐடியா. எனக்குத் தேவை அமைதியான ஓர் இடம். வா."

ஒட்டலின் ஒரு பக்கப் பகுதியில் அமீபா மாதிரி வளைந்த வடிவத்தில் இருந்து நீச்சல் குளத்தின் துல்லியமான நீர்ப்பரப்பின் மேல் சூரியன் வைரங்களைச் சிந்திக் கொண்டிருக்க. கடந்து அழைத்துச் சென்றாள்.

சுற்றிலும் சவுக்கு மரங்கள் வளர்க்கப்பட்டு அவற்றில் இலைகளின் வளர்ச்சியைக் கத்திரிக்கோல் கலையால் யானையாக, பூனையாக, கோபுரமாக, பெண்ணின் அவுட் லைனாக கட்டுப் படுத்திருக்க. ஆயிரம் நிறங்களில் மலர்களைத் தாங்கிய செடிகளின் அரவணைப்பில் அந்த சின்னப் பூங்கா இதமாய், குளிர்ச்சியாய் இருந்தது. அங்கங்கே பிளாஸ்டிக்கில், சிமெண்ட்டில் நாற்காலிகளும், பெஞ்சுகளும், தரையெல்லாம் நுரை மெத்தையின் மென்மையுடன் சவால் விடும் ஒழுங்கு படுத்தப்பட்ட வெல்வெட் புல்வெளி.

ஓட்டல் ராயல் மௌண்ட்டன் தன் வால் பகுதியில் வைத்திருந்த 'சியர்ஸ்' என்கிற பாரில் கண்ணாடிக் கதவைத் தள்ளிக் கொண்டு நுழைந்து இருட்டடிப்பு செய்யப்பட்டிருந்த விஸ்தீரணமான ஹாலின் சன்ன வெளிச்சத்திற்கு கண்களைப் பழகிக் கொண்டதும் கோடியில் இருந்த மேஜையை நாடி கிரணும், ராவும் நடந்து சென்று எதிர்ப்பு காட்டாத சோபாக்களில் அமர்ந்தார்கள். தூரம் தூரமாக இரண்டு மூன்று மேஜைகள் மட்டும் கஸ்டமர்கள் இருந்தனர். அந்தப் பிரெஞ்சு தம்பதியினர் மற்றவர் கண்களை பொருட்படுத்தாது ஒரு முறை பளிச்சென்று முத்தமிட்டுக் கொண்டு கையில் இருந்த திரவத்தைப் பருகினர்.

கிரணின் மேஜைக்கு டை கட்டின இளைஞன் வந்து தங்கத்தில் அச்சடித்த நீள அட்டையை சுவாமிப் படம் போல் பக்தியுடன் வைத்துவிட்டுக் காத்திருக்க.

ராவ் அதை அலட்சியமாய் புரட்டி "இந்திய அயிட்டங்கள் மட்டும் தானா?" என்றான். அந்த இளைஞன் புன் சிரிப்புடன், "மன்னிக்க வேண்டும். எங்களுக்கு அதுக்கு மட்டும் தான் அனுமதி இருக்கின்றது," என்றான்.

"புல்ஷிட்! கிரண், எனக்கு வேண்டாம். உனக்கும் அவனுக்கும் மட்டும் சொல்லிக்கோ," என்றான் ராவ்.

"பாக் பைப்பர் ட்ராவலர்ஸ் விஸ்கி ரெண்டு லார்ஜ்," என்று அவனை விலக்கி விட்டு, "ராவ், பொது இடத்திலே கவனம் விழற மாதிரி என்னைக்கும் நடந்துக்காதே. உன்னோட முகச் சுளிப்பு அந்த பேரர் மனசிலே அப்படியே பதிஞ்சிருக்கும் தெரியுமா? அலெக்ஸ் எங்கே இன்னும் காணோம்?"

"மஸாஜ் கிளப்புக்குள்ளே நுழைஞ்சி ஹலோ சொல்லிட்டு வர்றேன், நீங்க போங்கன்னான். கூட வர்றப்பவே திடீர் திடீர்னு காணாமப் போயிடறான்."

"காரணமாகத்தான்," என்று வந்து அமர்ந்தான் அலெக்ஸ்.

"என்ன காரணம்?"

"மஸாஜ் கிளப்ல ரீட்டான்னு என் ஃப்ரண்ட் வேலை பாக்கிறா. அவளை பார்த்து ரெண்டு நிமிஷம் பேசினதிலே ஒரு தகவல் கிடைச்சது எனக்கு."

"என்ன?"

"இந்த ஒட்டலை நாம ரெண்டு மணி நேரமா சுத்திச் சுத்தி அலைஞ்சும் நாம் தெரிஞ்சிக்க முடியாத ஒரு விஷயம்."

"என்னடா சொல்லேன்."

பேரர் ட்ரேயில் மதுக் கிண்ணங்களையும், கொறிப்பதற்கு சிப்ஸ் மற்றும் கடலைகளையும் கொண்டு வந்து மௌன இயக்கத்தில் வைக்க, அவன் போகும் வரை அமைதி காத்தார்கள்.

"சொல்லு, அலெக்ஸ்."

“இந்த ஒட்டலுக்கு ஒரே ஒரு வாசல்தான்னு நாம அனுமானத்திற்கு வந்தது தப்பு. ஒட்டல்லே வேலை பார்க்கிறவங்களும், தங்கறவங்களும், பார்வையாளர்களும் பிரதான என்ட்ரன்ஸ் வழியாத்தான் வர்றாங்க. ஒட்டலுக்குத் தேவையான மளிகை, காய்கறி, எக்சட்ரா.
எக்சட்ரா எல்லாம் லாரியிலே உள்ளே வர்றதுக்கும் வேற வழி இருக்கு. இந்த மாதிரியான வழி ஒட்டல்லே பின் பக்கம் வால் பகுதியிலே இருக்கும். ஆனா இந்த ஒட்டல்லே சைடிலே நீச்சல் குளம் தாண்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கே ஒரு மினி சோலைக்குப் பக்கத்திலே இருக்கு அந்த கேட். பொருள்கள் உள்ளே வரவும், கழிவுகள் வெளியே போகவும் மட்டுமே இந்த வழியைப் பயன்படுத்தறாங்க. ஒரு நாளைக்கு அதிகமா உபயோகிச்சா இரண்டு தடவைக்கூட உபயோகிக்கிறதில்லே.”

“வாவ்! நாம எப்படி இந்தப் பகுதியை மிஸ் பண்ணினோம்?”

“வரவேற்பு பகுதி, அட்மினிஸ்ட்ரேஷன் பகுதி, ரெஸ்ட்டாரண்ட்ஸ், சமையல் பகுதி, சூட்ஸ் இருக்கிற பகுதி, காபரே ஹால் இப்படியே பார்த்திட்டு இதை விட்டுட்டோம்.”

“சரி, முடிங்க. போய்ப் பார்க்கலாம்,” என்றான் ராவ்.

இருவரும் கோப்பைகளைக் காலி செய்துவிட்டு சிகரெட்டுகளைக் கொளுத்திக் கொண்டு மௌனமாகப் பார்த்துக் கொண்டார்கள்.

“சந்தேகம் வர்ற மாதிரி விசாரிச்சியா, அலெக்ஸ்?”

“சேச்சே! தானா வந்த தகவல் இது.”

பில்லுக்கு பணம் கொடுத்திட்டு அவர்கள் வெளியேறினார்கள்.

எல்லோரும் வாட்சைப் பார்த்துக் கொண்டு அவசரகதியில் இருந்தார்கள். காரிடாரில் யாரோ

பெரியதாய் சிரித்தார்கள். கையில் 'பொக்கே' தாங்கிய ஒரு பஞ்சாபிப் பெண் தோள்களில் கூந்தல் வழிய டக் டக்கென்று நடந்து கொண்டிருந்தாள். பைப் சகிதம், கோல்ட் பட்டன் சகிதம், கோட் சூட்டில் மூன்று நரைத் தலைகள் கை குலுக்கி. ஒருவரிடம் மற்றவர்கள் நாட்டையே பேரம் பேசிக்கொண்டு.

அவர்கள் அந்த ஓட்டலுக்கு புதியவர்களாய் காட்டிக் கொள்ள வில்லை. சன்னமாக சினிமா பேசிக்கொண்டு நீச்சல் குளத்தினை அடைய. . . டைவிங் போர்டில் குதிக்க தயாராய் இருந்தவள் ஒரு வினாடி தயங்கி விட்டு குதித்து... ஸ்ப்ளாஷ் என்று நீரைக் கிழித்து நீந்திக் கொண்டிருக்க, கரையில் நிக்கருடன், கரும்புதர் மார்புடன் அவன் கை தட்டிக் கொண்டிருந்தான்.

அந்தக் குட்டிச் சோலையைக் கடக்க முற்பட்டார்கள். புல்வெளியில் படுத்திருந்த கம்பி சுற்றின கறுப்பு ஹோஸ் பைப்புகளை மிதித்து விடாமல் நடந்து.

''அதோ பார்ரு, உன் பக்கத்திலே ஸ்டூல் போட்டு ஒரு நீலன் உட்கார்ந்திருக்கிறான். அந்த கேட்டுதான். இந்த கேட்டுக்கு கேட்கீப்பர் இருக்க மாட்டான்னு நினைச்சேன். இருக்கான்,'' என்றான் அலெக்ஸ்.

வழியில் பிடுங்கின புல்லால் பல்லைக் குத்திக் கொண்டு ''ஆள் பலசாலி இல்லை,'' என்றான் ராவ்.

''உளறாதே, காம்பௌண்ட்டோட உயரத்தைப் பாரு. நாம இருக்கப் போவது வெளிப்பக்கம். இவன் பலசாலியா இருந்தா என்ன? சோனியா இருந்தா என்ன? கேட் பலமானது, என்றான் கிரண்.

''நீங்க ரெண்டு பேரும் இங்கேயே உட்கார்ந்து பேசிட்டிருங்க. நான் இதோ வர்றேன்,'' என்று அலெக்ஸ் தன் பையிலிருந்த தீப்பெட்டியை எடுத்துக் கீழே போட்டுவிட்டு, ஒரு கையால் வயிற்றைப் பிடித்துக் கொண்டு, மெல்ல அந்தக் காவலாளியை நோக்கி நடந்தான்.

கிரணும், ராவும் புல் தரையில் அமர்ந்தார்கள். கிரண் தலைக்கடியில் கைகளைக் கொடுத்து கொண்டு, கால்களை நீட்டிக் கொண்டு இதமான வெய்யிலை அனுபவித்துக் கொண்டே நேர் மேலே ஆகாயத்தில் கடந்து சென்ற இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத்தைப் பார்த்தான்.

இறங்கப் போகிற விமானத்தின் சத்தத்தால் புத்தகத்திலிருந்து கவனம் கலைந்து தூரமாய்க் கரைந்து போய்க் கொண்டிருந்த அந்த அலுமினியப் பறவையை உற்சாகத்தோடு பார்த்த ஆஷா, திடீரென்று காற்றில் சிகரெட்டின் வாசனையை உணர்ந்தாள். திரும்பிப் பார்த்தாள்.

அவள் அமர்ந்திருந்த சிமெண்ட் பெஞ்சுக்குப் நேர் பின்னால் மதில்போல அகலமாய் நின்றிருந்த அந்த மரம் அந்தப் பக்கத்துக் காட்சியை மறைத்தது. படிப்பின் சுவாரசியத்தில் யாரோ வந்து தூரமாக அந்தப் பக்கத்தில் அமர்ந்ததைக் கண்டு கொள்ளவில்லை என்பதை உணர்ந்தாள்.

மறுபடி விட்ட இடத்திலிருந்து நாவலைத் தொடர்ந்தாள்.

சிகரெட் குடித்து கொண்டே நடந்து வந்து அவர்கள் இருவரின் அருகில் அமர்ந்தான் அலெக்ஸ்.

''என்னடா கேட்டே?'' என்றான் ராவ்.

''ஸ். ஏன் கத்தறே? மெதுவா பேசு,'' என்றான் கிரண்.

''இந்த ஏரியாவிலேயே நம்மைத் தவிர அதோ அந்தக் காவல்காரன்தான். வேறு யாரு இருக்கா?'' என்றான் ராவ்.

அவர்கள் அமர்ந்திருந்த இடத்திலிருந்து முப்பதடி தள்ளி இருந்த மரத்திற்குப் பின்னால் அமர்ந்திருந்த ஆஷாவால் இரண்டு ஆண் குரல்களைக் கேட்க முடிந்தது-தெளிவில்லாமல்.

''எதுக்கும் சன்னமாக பேசறதுதான் நல்லது,'' என்றான் கிரண்.

''நான் நேரா அவன் கிட்டே போய், ரொம்ப அவசரம், பக்கத்திலே லெட்ரின் எங்கே இருக்குதுன்னு கேட்டேன். இங்கே இல்லை சார். குக்கிங் பகுதிக்குப் பக்கத்திலே இருக்குன்னான். எனக்கு காம்பௌண்ட்டுக்கு அந்த பக்கம் உள்ள ரோடு பரிச்சயமானது. கிட்டத்தட்ட இந்தக் கேட்டுக்குப் பக்கத்திலே அந்தப் பக்கம் ஒரு பொதுக் கழிப்பறை உள்ளது. கேட்டைத் திறப்பா, வெளியிலே இருக்கிற டாய்லெட்டுக்கு போயிட்டு வந்துடறேன்னு சொன்னேன். பொம்பளை சாவி போடுற கறுப்பு பூட்டு, உடனே திறந்து விட்டான். நான் வெளியில் போய் இரண்டு நிமிஷம் இருந்துட்டு மறுபடியும் கதவைத் தட்டி திறக்கச் சொல்லி உள்ளே வந்துட்டேன். நெருப்பு பெட்டி வாங்கி பத்தவச்சிட்டு பொதுவா பேச்சி கொடுத்தேன். சாயங்காலம் ஆறு மணி வரைக்கும் மட்டும் தான் இருப்பானாம். அப்புறம் போய்விடுவானாம். வேற யாரும் இருக்க மாட்டாங்க. வேலைல சேர்ந்து ஒரு மாசமாச்சாம். காலைல ஆறு மணியிலேந்து சாயங்காலம் ஆறு மணி வரைக்கும் இருப்பானாம். நடுநடுவிலே காலை டிபனுக்கும், மத்தியானம் சாப்பாட்டுக்கு, டீ குடிக்க சாவி எடுத்துக்கிட்டு போய்ட்டு வந்துடுவான். அப்போ மாத்து ஆளு இல்லை அங்கே. இவன் பேரு வரதராஜன். இவனுக்கு உடம்பு சரியில்லைன்னா ராஜப்பான்னு ஒருத்தன் வருவான் இந்த இடத்துக்கு. வண்டி, வேன், லாரி, வறப்போ, போறப்போ கதவைத் திறக்கணும், மூடணும் அவ்வளவு தான். ஒரு நோட்டுல என்ன வண்டி வந்திச்சி, எது போச்சின்னு குறிச்சிக்குவான். அதைத் தவிர பீடி குடிக்கிறதும், காது குடையறதும்தான் முழு நேர வேலை. ஒரு பொண்ணும், மீசை முளைக்காத ஒரு உருப்படாத பிள்ளையும் இவனுக்கு. எப்படி, விவரம் போதுமா?'' என்றான் அலெக்ஸ்.

''கில்லாடிடா நீ,'' என்றான் கிரண்.

அவர்கள் சன்னமாக பேசியது கிசுகிசுப்புக் குரலாக ஆஷாவுக்கு கேட்டது. எரிச்சலுற்றாள். கவனமாய் படிக்க முடியாமல் போனது. இந்த மத்தியானம் பன்னிரெண்டு மணிக்கு இந்தத் தனிமைப் பகுதியில் யார் இவர்கள்? யாராக வேண்டுமானால் இருக்கட்டும். அதென்ன கிசுகிசுப்பாக பேசுவது? பெண் குரலும் இல்லை. வளையல் சப்தமும் இல்லை. பேசிக் கொண்டிருப்பது ஆண்கள். இவர்களுக்குள் என்ன ரகசியம்? அட! எதையோ பேசட்டும். என் தனிமையைக் கெடுக்கிறார்கள்.

ஆஷா அந்த இடத்தைவிட்டு அகன்றுவிட முடிவு செய்த போது.

''எனக்கென்னமோ நம்ம திட்டத்துக்கு இந்த ஒட்டல் சரிபட்டு வரும்னு எனக்குப் படலை.'' என்றான் ராவ் சற்று சத்தமாக.

இது ஆஷாவுக்குத் தெளிவாகவே கேட்க. . . . புருவம் சுருக்கினாள்.

''மெதுவாய்ப் பேசுன்னா ஏன் கத்தறே ராவ்? உன்னை வெச்சிட்டு இங்கேயெல்லாம் பேசுறது தப்பு. எழுந்துரு போகலாம் நம்ம இடத்திலே போய் விரிவா பேசிக்கலாம்.,'' என்றான் கிரண் மெதுவாக.

இது ஆஷாவுக்குக் கேட்கவில்லை.

அவர்கள் மூவரும் எழுந்திருக்கின்ற ஷூக்களின் ஒலிகள் தெளிவாகக் கேட்டன. இவளுக்கு முதுகைக் காட்டிக் கொண்டு அவர்கள் மூவரும் மரத்தின் மறைவிலிருந்து வெளிப்பட்டு நடப்பதைப் பார்க்க முடிந்தது இப்போது. ஒரு முதுகில் 'Post Box Needed' என்று கொட்டை எழுத்துக்கள் இருந்ததை இவளால் படிக்க முடிந்தது.

'நாளைக்கு நான் அம்பேல். செங்கல்பட்டுக்கு ஒரு கல்யாணத்துக்குப் போகணும்,'' என்றான் ராவ் ஒரு புல்லைக் குனிந்து பிடுங்கிக் கொண்டு நடந்து.

நோ ராவ், நீ போகலை. தலைக்கு மேல ஆயிரம் வேலை இருக்கு. நீ தேவை எனக்கு, என்றான் கிரண்.''

''முக்கியமான பிரண்டோட கல்யாணம்டா.''

''கல்யாணம் நமக்கு முக்கியமில்லை.''

''சரி, நான் போகலை.''

இதற்கு மேல் அவர்கள் பேசிக் கொண்டே நடந்ததில், வாக்கியங்களை காற்று சாப்பிட்டு விட. . . ஆஷா கொஞ்ச நேரம் சின்ன உருவங்களாக ஒட்டலின் வாசல் பகுதியை நோக்கி நடந்து கொண்டிருந்த அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

என்ன பேசினார்கள்?

என்னவோ இவர்களின் திட்டத்திற்கு இந்த ஒட்டல் ஒத்து வராது என்றார்கள். என்ன திட்டம்?

எவளையாவது இங்கே பிக்கப் செய்து கொண்டு வருவதற்காக இருக்கும். திமிர் பிடித்த கழுதைகள். நடையும், உடையும் பணத்தையும், திமிரையும் காட்டுகின்றன.

இல்லை, ஒரு வேளை. சேச்சே.

ஆஷா நாவலைத் தொடர்ந்தாள்.

டைரக்டர் வெர்னன் தனது லைம் திறந்து டொயாட் டோவில் இருந்து இறங்கி, இல்லத்திற்குள் நுழைந்து, தன்னறையில் கட்டிலில் கனத்த போர்வைக்கு அடியில் உறங்கிக் கொண்டிருந்த மிஸ். நீஜாவுடன் பைஜாமாவுக்கு மாறித் தன்னை அணைத்துக் கொள்ள. அவர் இவள் பக்கமாக திரும்பிய பின்பு தான் இவர் அவள் ஆடைகள் எதுவும் அணிந்திருக்கவில்லை என்பதை உணர்ந்தார். அவளின் கைகள்.

ட்ரூட், ட்ரூட் என்று அந்த பறவை அழைத்துக் கொண்டே இருக்க. புத்தகத்தை மூடிவிட்டு எழுந்தாள். ஆஷா. நான்கடி நடந்தவள் அவனைப் பார்த்தாள்.

முதலில் போன மூன்று பேர்களில் ஒருவன். வசனமெழுதிய டீ சர்ட் அணிந்திருந்தவன். அவர்கள் மூவரும் பேசிக்கொண்டிருந்த புல் தரையில் எதையோ குனிந்து தேடிக் கொண்டிருந்தான்.

மார்புக்கு குறுக்காகக் கைகளைக் கட்டிக்கொண்டு, அவன் தேடுவதையே இங்கிருந்து பார்த்துக் கொண்டிருந்தாள் ஆஷா.

அலெக்ஸ் மோட்டார் பைக்கின் சாவிக் கொத்தை கண்டுபிடித்து விட்டான். எழுந்து பாக்கெட்டுக்குள் வைத்துக் கொண்டு நிமிரும் போது, துாரத்திலிருந்து ஒருத்தி இவனையே பார்த்துக் கொண்டிருப்பதை பார்த்து மெல்லியதாக அதிர்ந்தான்.

ஆஷா சட்டென்று பார்வையை மாற்றி, நின்ற நிலையிலேயே புத்தகத்தை தலைகீழாக விரித்துப் படித்து பார்த்துக் கொண்டிருக்க.

அலெக்ஸ் அவளை நெருங்கினான்.

‘‘மேடம், உங்க டைம் ரேடியோ டைமா?’’

‘‘ஆ. ஆமாம்,’’ என்றாள் தயக்கமாய்.

கழுத்தை வளைத்து அவள் கையில் நேரத்தைப் பார்த்துக் தன் கடிகாரத்தைக் கழற்றி முள்களைச் சரிப்படுத்திக் கொண்டே, காத்திலே கர்சீப் எதுவும் இந்தப் பக்கத்திலே பறந்து வந்ததா? தவற விட்டுட்டேன்,’’ என்றான்.

‘‘இல்லை, நான் பார்க்கலை.’’

‘‘தாங்ஸ், என்று நடந்தான் அலெக்ஸ்.

ராவின் வீட்டில் தனியறையில் வெடித்தான்.

"ராவ், அவ ரொம்ப நேரமா அங்கே இருந்திருக்கா. நம்மைக் கவனிச்சிருக்கா. நான் அவகிட்டே பேசினதும் லேசா நடுங்கிட்டா. புத்தகத்தை தலைக் கீழா வச்சிருந்தா."

"சரி, விடு, அலெக்ஸ். எத்தனை பேர் நம்மை பார்க்கிறாங்க. நாம் என்ன பேசிட்டோம் என்றான் கிரண்.

"அதுக்கில்லை. அவளை நான் எங்கேயோ பார்த்திருக்கேன்.

"வீணா குழப்பிக்காதே. நீ சொல்லறபடி பார்த்தாலும் இருந்த தூரத்துக்கு நாம கத்திப் பேசினாக் கூட கேட்டிருக்காது,"

"ராவ்தான் கத்திப் பேசினான்."

"எதுவும் பேசிடலை. நமக்குள்ளே பிரச்சனை வேணாம். விடு அலெக்ஸ். இனிமே இங்கே ராவ்வீட்டை தவிர வேற எந்த பொது இடத்திலேயும் நாம எதைப்பத்தியும் சன்னமாகக் கூடப் பேச வேண்டாம். சரிதானே?" என்றான் கிரண்.

"சரி, சொல்லு. என்ன நம்ம திட்டம். கிரண், பேசு," என்றான் ராவ்.

கிரண் யோசனையாக மேஜையின் பேப்பர் வெய்ட்டை உருட்டினான். மெதுவாக, தன் எண்ணங்களைச் சொல்ல ஆரம்பித்தான்.

6

ஐ.ஜி. அலுவலகத்தில் அவரின் உதவியாளர், இன்ஸ்பெக்டர் அர்ஜுன் மேஜைக்கு எதிரே நாற்காலியில் அமர்ந்திருந்தார். ஆஷா காலாட்டலில் ஹீல்ஸ் ஆடியது.

டைரியை புரட்டி பார்த்துவிட்டு. "யெஸ், உங்க பத்திரிகைக்கு இன்னிக்கு காலையில பத்து நிமிடம் அப்பாயிண்ட்மெண்ட் கொடுத்திருக்கார். வாஸ்தவம் தான். ஆனால் 12 லிருந்து 12.10 வரைக்கும். உங்க நேரம் முடிஞ்சதும், இப்படிப் பன்னிரண்டரைக்கு வந்து நின்னா எப்படி? ஸாரி மேடம், உங்க அப்பாயிண்ட்மெண்ட் கேன்சல்ட்," என்றார்.

அரக்கு கலர் லிப்ஸ்டிக் தடவின அவளின் உதடுகள் மினுமினுப்புடன் கெஞ்சின. "ஸாரி சார். தப்பு என் பேர்ல இல்லை. வழியில் நான் வந்த பல்லவன் ஒரு ரிக்ஷா மேல மோதி. அதிலே நேரமாகி.

"மேடம் உங்க விளக்கங்களைக் கேட்கிறதுக்கு எனக்கு நேரமில்லை," என்று அவர் எழுந்து நடந்து ஐ.ஜி.யின் அறைக்குள் சென்றார்.

ச்சே! என்று கழுத்தின் க்ரிஸ்டல் பிட்சை வெறுப்பாகக் கடித்துக் கொண்டு காத்திருந்தாள் ஆஷா.

சில நிமிடங்களில் வெளிவந்த இன்ஸ்பெக்டர், "நீங்க இன்னும் போகலையா?" என்று தன் நாற்காலியில் அமர்ந்தார்.

''சார், எவ்வளவு நேரம் வேணும்னாலும் காத்திருக்கேன். பத்து நிமிடம் கூட வேணாம். எனக்கு, ஒரு அஞ்சு நிமிஷம் கூடப் போதும்.''

''மேடம், உங்களுக்கெல்லாம் நேரத்தோட அருமையே தெரியறதில்லை. அப்படி அவசரமா சந்திச்சு என்ன கேப்பீங்க? ஒரு புதிர் சொல்லிப் பதில் கேட்பீங்க. ரொம்ப முக்கியமா எங்களுக்கு? திங்க். ஆயிரம் எரியும் பிரச்சனைகளை தினம் சந்திக்க வேண்டியதாயிருக்கு? ப்ளீஸ், போயிட்டு வாங்க.

''நான் புதிர் போட வரலை. ஒரு பத்திரிக்கையாளனை வம்புக்கு இழுத்துப் பேசறது நல்லதில்லை சார். இருபதாம் தேதி நடக்கப்போற ஸோலர் சயன்டிஸ்ட்ஸ் மாநாட்டுக்குப் போலீஸ் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி விசாரிக்கத்தான் வந்தேன். எங்க பப்ளிகேஷன் மானேஜிங் டைரக்டர் மூலமா சுலபமா அப்பாயிண்ட்மெண்ட் வாங்க முடியும் என்னால். நேர் வழியிலே வந்தா. விரட்டாதீங்க. என் தனி வேலைக்கு வரலை நான். பத்திரிக்கைங்கறது மக்கள் மீடியம். நீங்க சொல்ற அத்தனை பிரச்சனைகளும் மக்களுடையது. நான் ரிக்வெஸ்ட் பண்ணித்தான் கேட்கிறேன். ஒரு அஞ்சு நிமிஷம் சந்திக்கிறதுக்கு ஏற்பாடு பண்ணித்தாங்க.

இன்ஸ்பெக்டர் அவளை அமைதியாக பார்த்தார்.

''வெயிட் பண்ணுங்க. முக்கியமான நபர்களோடு பேசிட்டு இருக்கார். அவங்க போனதும் கேட்டுப் பார்க்கிறேன்.''

''தாங்க்ஸ்!'' என்று பால்பாயிண்ட் பேனா எடுத்து தனது நீளமான டைரியில் எதையோ எழுத ஆரம்பித்தாள் ஆஷா.

இன்ஸ்பெக்டர் தொலைபேசிகள் மும்முரமாய் இருக்க. ஐ. ஜி. அறையின் கதவு திறந்து கொண்டு

இரண்டு இளைஞர்கள் அவசரமின்றி வெளியே வர. ஆஷா திரும்பி பார்த்து. அட! இவர்களை புரொபஸர் அலுவலகத்திலே பார்த்தேன். சி. பி. ஐ. அதிகாரிகள். வேறு எந்தப் பத்திரிகைக்கும் கிடைக்காத ஏதாவது தகவலை இவர்களிடமிருந்து பெற முடிந்தால். எடிட்டர் வாவ்! என்பார்.

அவசரமாக எழுந்து அவர்களை அடைந்து அவர்களோடு இணையாக நடந்துகொண்டே ஆங்கிலத்தில் பேசினாள்.

''தொந்தரவுக்கு மன்னிக்கணும். நான் ஒரு பத்திரிக்கை காரி. உங்களை புரொபஸர் திரிவேதி அவர்களின் அலுவலகத்தில் சந்தித்தேன். நீங்கள் சி. பி. ஐ. என்பதும், டாக்டர் விக்ரமின் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு வந்திருக்கின்றீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். நீங்கள், எங்கள் பத்திரிக்கைக்காக ஒரு சிறிய பேட்டி தர இயலுமா? உங்கள் சௌகரியம் போல் நேரம் ஒதுக்கி இடத்தைச் சொன்னால் நான் வருகிறேன். என்றாள் படபடப்பாக.

இப்போது அவர்கள் காரிடாரில் ந்டந்து கொண்டிருக்க. பிரபாகர் நின்றான். "ஓ, உங்களுக்கு இவ்வளவு தகவல்கள் தெரியுமா?''

"சொன்னேனே. பத்திரிக்கை நபர் என்று.''

"ஸாரி மேடம். உங்கள் ஆர்வம் புரிகிறது. ஆனால் எங்களுக்கு பேட்டி தருவதற்கெல்லாம் நேரமும் இல்லை முக்கியமாக. அதற்கு அனுமதியும் இல்லை.''

தோள்களை ஒரு தரம் சிலிர்த்துக் கொண்டாள்.

''பரவாயில்லை. சந்தித்ததில் மகிழ்ச்சி. சிறு பிள்ளைத்தனமாகச் சொல்லுகின்றாளே என்று நீங்கள் நினைக்காவிட்டால் நான் ஒன்றைச் சொல்கிறேன்.''

''சொல்லுங்கள் சீக்கிரம்,'' என்றான் பிரிட்டோ மணி பார்த்துக் கொண்டு.

''நாம் நடந்து கொண்டே பேசலாம்'' என்றாள்.

அலுவலகத்தின் வாசலில் நின்ற அவர்களின் காரை நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள்.

''சார் டாக்டர் விக்ரம் ஓய்வெடுக்கப் போகிற ஓட்டலுக்கு சிறப்பான பாதுகாப்பு செய்யுங்கள்.''

''மேடம், நீங்கள் எங்களை ஆச்சிரியப் படுத்துகின்றீர்கள். அவர் ஹோட்டலில் தங்கப் போவதாக தகவல் கொடுத்தவர் யார்?''

''இதற்கெல்லாம் நிறைய நபர்கள் இருக்கிறார்கள் சார். அதுவல்ல முக்கியம். நேற்று அந்த ஓட்டலில் மூன்று நபர்களை சந்தித்தேன். அவர்களின் பேச்சை யதேச்சையாகக் கேட்க நேர்ந்தது. ரகசியமாக நிறைய பேசினார்கள். நமது திட்டத்திற்கு இந்த ஓட்டல் சரியாய் வராது என்று ஒருவன் சொன்னது தெளிவாய் காதில் விழுந்தது.''

பிரிட்டோ உடனே சிரிக்க ஆரம்பித்தான். அவர்கள் காரை அடைந்தார்கள்.

''இதற்காகத்தான் முன்கூட்டியே சிரிக்க வேண்டாம்னு சென்னேன். அவர்கள் எதையோ பேசியிருக்கலாம். ஆனால் உங்களைச் சந்தித்ததால் சொல்ல வேண்டும் என்று தோன்றியது.''

''சுனில், வண்டியில் ஏறு. நேரத்தை வீணாக்காதே. போலீஸ்காரனுக்கும், பத்திரிக்கைகாரனுக்கும் எப்போதும் எதுவும் சந்தேகமாகவே படும். மேடம், தகவலுக்கு நன்றி. சுனில்., வா, என்று டிரைவிங் சீட்டில் அமர்ந்து கொண்டான் பிரிட்டோ.

'நான் சொன்னது பெரிய தகவல் இல்லைத்தான். அது நத்திங் என்று எனக்கேப்படுகிறது. இருந்தாலும்.

''இருந்தாலும். கவலையில்லை மேடம். ஏனென்றால், இந்த ஒட்டல் திட்டத்திற்கு லாயக்கில்லை என்றுதானே பேசினதாகச் சொன்னீர்கள். லாயக்கு என்றால் தானே கவலை? சுனில் என்ன யோசனை? ஏறு...''

''ஒக்கே,'' என்று சற்று தயக்கமாய் முன் சீட்டில் ஏறிக்கொண்டு கதவை அறைந்து சாத்தினான் சுனில் பிரபாகர்.

கார் புறப்பட்டதும் மறுபடி கட்டிடத்திற்குள் நுழைய திரும்பின ஆஷா வெளிப்பட்ட ஜீப்பில் ஐ, ஜி. கூலிங்கிளாஸ் அணிந்து செல்வதைக் கண்டு பெருமூச்சு விட்டு பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்தாள்.

''பிரிட்டோ, எவ்வளவு தகவல்கள் சுலபமா கசிஞ்சிடுது பார்,'' என்றான் சுனில்.

அந்தப் பொண்ணு சொன்னதை சொல்றியா?'' என்றான் பிரிட்டோ,

''ஆமாம்!''

''அவ சொன்னதெல்லாம் உண்மைன்னு நினைச்சியா?

''பின்னே? கண்ல பொய் இல்லை பிரிட்டோ.''

''என்ன சுனில், இத்தனை வருஷங்கள்ல உனக்கு இன்னும் ஒரு பத்திரிக்கைகாரங்களோட சைக்காலஜி தெரியலையே. அவ நம்ம கூட பேசினது பேட்டிக்காக. நாம அதெல்லாம் முடியாதுன்னு சொன்னதும் நம்ம வாய்லேர்ந்து ஏதாவது தகவல்கள் பிடுங்கறதுக்காக ரீல் சுத்தறா. கொஞ்சம் தகவல்களை வச்சிகிட்டு, டாக்டர் விக்ரம் தங்கற ஒட்டலுன்னு சொன்னாளே ஒழிய ஒட்டல் பேர் சொல்லலை பார்த்தியா? அது அவளுக்குத் தெரியாது.''

''அப்படியா நினைக்கிற நீ?''

''நிச்சயமா, நம்கிட்டேர்ந்து தகவல் பிடுங்கற முயற்சி. மூணு பேர் ஒரு பொது இடத்திலே பேசினாங்களாம். அதுவும் கிசுகிசுப்பாக. இவ காதுக்கு நம்ம திட்டத்துக்கு ஒட்டல் லாயக்கு இல்லையனேன்னு சொன்ன ஒரு வரி மட்டும் தெளிவா கேட்டதாம். அவ பேசின ஒரு பாராவிலேயே எத்தனை முரண்பாடு பாரு.

''மே பி, யூ ஆர் ரைட்.''

''மே பி என்ன, ஐ யாம் ரைட். அவளை மறந்துடு. இப்போ எங்கே போறோம்?''

''ஏர்போர்ட் போறோம்.''

''போய்ட்டு வந்து?''

''ஹோட்டல் ராயல் மௌண்ட்டன் போறோம்,''

''பாவி! இன்னிக்கு ப்ரோக்ராமில் ஷீலா இல்லையா? மூணு நாளாச்சு பார்த்து,''

''பிரிட்டோ, கடமையில் காதலை நுழைக்காதே.''

''காதல் ஒரு கடமை இல்லையா?''

''யெஸ். டாக்டர் விக்ரம் வந்துட்டுப் போனதும். ஒரு வாரம் லீவு போட்டுட்டு அந்தக் கடமையைச் செய். இப்போ மனசை தாவ விடாதே.''

''சுனில், எவ்ரிதிங் கோஸ் பர்ஃபெக்ட். எல்லா ஏற்பாடுகளும் நம்ம திட்டப்படியே நடந்துக்கிட்டு இருக்கு. தமிழ்நாடு போலீஸ் நாம எதிர்பார்த்ததை விட ரொம்ப கோ---ஆப்ரேட் செய்யறாங்க. வெரி ஷார்ப். எந்த அசம்பாவிதத்துக்கும் அதற்கான வாசனை எதையும் நான் உணரலை. நீ என்ன நினைக்கிறே?''

''நம் உணர்வுபடியா ஏற்பாடுகள் நடக்குது? இல்லை, நிகழ்ச்சிகள் தான் நடக்குதா? நல்லதையே எதிர்பார்ப்போம். அதிலே சிக்கல் வர்றப்ப சந்திக்கவும் தயாரா இருப்போம். பிரிட்டோ, உன்னை மாதிரியேத் தான் நானும்

நினைக்கிறேன். டாக்டர் விக்ரத்தோட இந்தப் பயணத்திலே எந்த பிரச்சனையும் இருக்கிறதா நான் நினைக்கலை. ஆனா பம்பாயில அவருக்கு எதிரா சில நடவடிக்கைகள் நடந்திருக்கு. ஆறு மாசம் முன்னாடி அவரோட் கார் மேல ஒரு வேன் செயற்கையா வந்து மோதினது. தவிர, அவர் இப்போ நம்ம தேசத்துச் சொத்து. இப்போதெல்லாம் நம்ம நாட்டுல அந்நிய சக்தி நிறைய ஊடுருவிக் கிளை விட்டுக்கிட்டிருக்கு. அந்தச் சக்திகளுக்கு ஒரு சின்ன சந்தர்ப்பத்தைக் கூட கொடுக்க வேணாம்ங்கிறது தான் நம் அரசாங்கத்தின் நோக்கம். இல்லைன்னா ஒரு தனி நபரோட பாதுகாப்பு பொறுப்பை சி. பி. ஐ. மாதிரியான யானை ஸ்தாபனத்துக்கிட்டே ஒப்படைப்பாங்களா? அதனால அலட்சிய மில்லாம நம் பொறுப்பை நாம முழு அளவில் செஞ்சிடலாம்.''

''ஓ எஸ். எதுக்கு இவ்வளவு நீளமா பேசறே. நாம எதை அலட்சியப்படுத்திட்டோம்?''

''நாம் இல்லை. நீ அடிக்கடி ஷீலா பத்தி பேசறே. அப்போ உன் மூளையின் முழு சக்தி கடமையில் இல்லை.''

''சேச்சே. இதெல்லாம் சும்மா தமாஷ்க்கு சுனில். ஏன் இவ்வளவு சீரியஸா எடுத்துக்கறே? டாக்டர் விக்ரம் வந்து போற வரைக்கும் அவளை நான் சந்திக்கலை போதுமா?''

''நோ, நோ, நான் அப்படி சொல்லலை. உன் பர்ஸனல் விஷயம் அது. அந்தப் பொண்ணை இன்னும் கொஞ்சம் விசாரிச்சியிருக்கலாம்னு நினைக்கிறேன்.''

''யார்? ஓ! அந்த பத்திரிக்கை கேர்ளா? அவ சொன்னதைக் கேட்டு சந்தேகம் வந்துடிச்சா? மூணு பேர்... திட்டம். ஓட்டல். ஓ. யா. எல்லாம் அவ கற்பனைப்பா. என்ன நீ, இதைக் கூட புரிஞ்சிக்கலை?''

''சரி, கற்பனையா இருக்கட்டும். டாக்டர் விக்ரம் ஒரு ஹோட்டலில ஓய்வு எடுக்கப் போறார்ங்கிற விஷயம்

பத்திரிக்கைக்கோ, பொதுமக்களுக்கோ தரப்படவில்லை. அவளுக்கு எப்படி தெரிஞ்சது?''

''ஈஸி பிரபாகர். . . ரொம்ப ஈஸி. இதெல்லாம் சின்ன தகவல். அவள் சொன்ன மாதிரி பத்திரிகை நபருக்குச் சுலபமா கிடைக்கக் கூடிய தகவல். விடு பிரபா. அவ விஷயத்திலே டைம் வேஸ்ட் பண்ணாதே.''

அமைதியாக இருந்தான் சுனில் பிரபாகர்.

''ஹேய். இப்ப என்ன? அவளை விசாரிக்கணுங்கறியா?''

''சரி, வேணாம்.''

கார் விமான நிலையத்தின் வாயிலில் மெல்ல நுழைந்தது. நின்று இளைப்பாற இடம் தேட சுனில் பிரபாகர் சிந்தனையில் இருந்தான்.

7

“ரொம்ப அபாயகரமான திட்டமா இருக்கே. என்றார் ராகுல் தனது டையின் பின்னைத் தடவிக் கொண்டே

கிரண் சற்று சிரித்துவிட்டு, “செய்யப் போறது கிரிமினல் குற்றம். துணிஞ்ச பிறகு அபாயத்தைப் பார்த்தா முடியுமா?” என்றான். கழுத்தில் போட்டிருந்த ஸ்கார்ஃப்பை மார்புக்கருகே முடிச்சிப் போட்டுக்கொண்டான்.

எரிகின்ற டியூப்லைட்டைப் பார்த்துக் கொண்டு, கையில் பீர்பாட்டிலுடன்· அமைதியாக இருந்தான் ராவ். அலெக்ஸ் சுறுசுறுப்பாக நகம் கடித்துத் துப்பி விட்டு, “கிரண், எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. காயம் படாம சைக்கிள் கத்துக்க முடியாது. ரிஸ்க் எடுக்காம தப்பு காரியம் செய்ய முடியாது. இந்த மாதிரி அரசாங்கத்திற்கு எதிரா சதிதிட்டம் தயாரிக்கறது கூட அபாயகரமானது தானே? என்றான்.

“என்ன ராவ் நீங்க சொல்றீங்க?” என்றார் ராகுல்.

“கிரண் ரொம்ப யோசிச்சு திட்டம் சொல்றான். அவன் மேல எனக்கு எப்பவும் தனி நம்பிக்கை. திட்டத்திலே எந்த குறையும் எனக்குப் படலை.”

ராகுல் யோசித்தார்.

“டிக்கெட்டுகளை ஏற்பாடு செய்ய முடியாதுன்னு தயங்கறிங்களா?”

''சேச்சே! அதென்ன பிரமாதமான வேலை. இப்பவே எஸ். டி. டி. போட்டு பேசி அரேஞ்ச் பண்ணிவிடுவேன். என் கவலை அது இல்லை.''

''பின்னே?''

''ரகசியமா நடத்த முடியாதுன்னு யோசிக்கிறேன்.''

''அவர் ரெண்டு நாள் சென்னையிலே தங்கி பல நிகழ்ச்சிகள்ல கலந்துக்கிறதா இருந்தா. நிச்சயமா அப்படியே செய்யலாம். ஆனா டாக்டர் விக்ரம் ஏழு மணி நேரம் தான் இங்கே இருக்கார். அதனால்தான் எனக்கு வேற வழி தெரியலை.''

''எனக்கு ஒரு உறுதியை நீங்கக் கொடுத்தா. மேற்கொண்டு இந்த திட்டத்தைப் பத்தி ஒரு முடிவுக்கு வந்து அதுக்கான முடிவுகளை நான் செஞ்சித் தர்றேன்.''

''என்ன உறுதி?'' என்றான் கிரண்.

''திட்டத்திலே எந்தக் கட்டத்திலேயாவது சிக்கல் ஏற்பட்டு உங்கள்ல யார் மாட்டினாலும் என்னைக் காட்டிக் கொடுக்கக் கூடாது.''

''ராகுல் சார், எங்களைப் பற்றி உங்களுக்குப் புரியலை. நாங்கல்லாம் மனசளவிலே என்னைக்கோ செத்துப் போனவங்க. ஊர் மேல காதல் கிடையாது எங்களுக்கு. ஒவ்வொரு நிமிஷமும் மரணத்தை எதிர் பார்க்கிற தொழிலை செய்றவங்க. சத்தியமா உங்க பேர் வெளியிலே வராது. அந்த மாதிரி தர்ம சங்கடங்களுக்கு சந்தர்ப்பமே இல்லை. என் திட்டத்துக்கு நான் கேக்கற ஒவ்வொரு வசதிகளையும் நீங்க கரெக்ட்டா செஞ்சுத்தாங்க போதும் நான் பார்த்துக்கறேன்,'' என்றான் கிரண்.

ராகுல் உற்சாகமாகத் தலையசைத்தார்.

''ஒக்கே. இந்த திட்டத்துக்கு நான் ஒப்புக்கிறேன். இப்போ சில கேள்விகள். போலீஸோட கவனத்தை திருப்பித்தான் ஆகணுமா?''

''நல்லா கேட்டிங்க. அடிப்படையான விஷயமே அதுத்தான். போலீஸ் ரொம்ப ஆர்வமா மாற்றுத் திட்டம் தயாரிச்சு. எங்களைக் கவ்வறதுக்கு முயற்சிகள் செய்வாங்க. அதிலே தீவிரமா இருக்கிறப்போ. நான் சொன்ன செக்ஷன்ல அவங்க கவனம் சுத்தமா இருக்காது. சுலபமா நம்பவாருங்க.''

''சரி, இதிலே சம்மந்தமில்லாம ஒரு கொலை எதுக்காக?''

''திட்டத்துக்குப் பலி மாதிரி. . . பின்னே எப்படி நாங்க தீவிரமானவங்கன்னு நம்புவாங்க? ஆழ்ந்து யோசிங்க. கொலை அவசியமுன்னு ஒப்புக்குவிங்க.''

''அநாவசியமா ஒரு உயிரை.

''அதெல்லாம் கவலைப்பட்டா நடக்காது.''

''சரி, யாரை?''

''அது அந்த நிமிஷத்திலேத்தான் முடிவாகும்.''

''நீங்க மூணு பேருமே போனா என்ன?''

''நோ. ராவ் காரோட நான் சொன்ன இடத்திலே காத்திருக்கணும். ரெண்டு பேர் போதும்.''

''டாக்டர் விக்ரத்தோட மயக்கம் கலையாம பார்த்துக்கணும்.''

''அதெல்லாம் பார்த்துக்குவோம். இப்ப என் கேள்விக்கு பதில் சொல்லுங்க.''

''என்ன?''

''டாக்டர் விக்ரமோடு நேரா இங்கே ராவ் வீட்டுக்கு வந்துடறோம். அப்புறம்? உங்க பொறுப்பிலே எப்பபோ ஏத்துக்குவிங்க?''

''அது எனக்கு இந்தக் வேலையைக் கொடுத்திருக்கிறவங்களோட தனித்திட்டம், களேபரம்

எல்லாம் அடங்கிறவரைக்கும் மூணு அல்லது நாலு நாள் இங்கே இதே வீட்ல மயக்கத்திலேயே அவரை வச்சிக்கறம்.''

இங்கேயேவா?'' என்றான் ராவ்.

''ஏன்? என்ன சிக்கல் இங்கே? தனிமையான ஏரியா. தனிமையான வீடு உங்களைத் தவிர வீட்டில் வேறு யாரும் இல்லை. கார் டிரைவர் மட்டும்தான். அவனை நாளையிலிருந்து எதாச்சும் காரணம் சொல்லி வேலையை விட்டு நிப்பாட்டிருங்க.''

''ஒக்கே'' என்றான் தயக்கமாய்.

''ராவ், காரை வித்துட்டதா சொல்லி ராகுல் சார் வீட்ல கொண்டு போய் விட்டுட்டு டிரைவரை வேலையிலிருந்து நிறுத்து. அப்போதுதான் அவனுக்கு சந்தேகம் வராது.''

''யு ஆர் கரெக்ட் கிரண். நிஜமாவே நான் வாங்கிக்கறேன். உங்களுக்கு பத்து நாள் கழிச்சு வேற வண்டி வாங்கித் தர்றேன்,'' என்றார் ராகுல்.

''சரி'' என்றான் ராவ்.

''அலெக்ஸ், என்ன மௌனமாவே இருக்கே? என்றான் கிரண்.

ஏக், சக் என்று உள்ளங்கைகளில் மாறி மாறிக் குதித்திக் கொண்டு, ''எனக்கு இப்பவே பரபரன்னு இருக்கு. இருபதாம் தேதி மூணு நாள் தள்ளி இருக்கிறதை நினைச்சா எரிச்சலா இருக்கு,'' என்றான் அலெக்ஸ்.

''எனக்கு ஆறுதலா இருக்கு. ஏற்பாடுகள் செய்ய வேணாமா'' என்று சிரித்தார் ராகுல், ''அலெக்சும், கிரணும் எப்போ புறப்படறிங்க?''

''நாளைக்கு. அலெக்சுக்கு மட்டும் ஒரு பிஸ்டல் வேணும். நானும், ராவும் சொந்தமா வச்சிருக்கோம்'' என்றான் கிரண்.

''நாளைக்கு உங்களை வழியனுப்பறப்போ தர்றேன் வேற என்ன வேணும்?''

''தைரியம்'' என்றான் ராவ்.

''அது நிறையவே இருக்கு'' என்றான் அலெக்ஸ்.''

''நான் கேட்ட கெமிக்கல்ஸ் வேணும். அகல அகலமா பிலாஸ்த்திரிகள் வேணும். துண்டு துண்டா கயிறுகள் வேணும். இதெல்லாம் நாங்களே ஏற்பாடு செஞ்சிக்கறோம்,'' என்றான் கிரண்.

''இருபதாம் தேதி மத்தியானத்துக்குள்ளே டாக்டர் விக்ரம் இப்ப நாம பேசிக்கிட்டிருக்கிற இதே ரூம்லே சுகமா படுத்திருப்பார்'' என்றான் அலெக்ஸ்.

''குட், அதுதான் வேணும் எனக்கு'' என்று எழுந்தார் ராகுல். கிரணின் கைகளைப் பிடித்து அழுத்தமாக குலுக்கினார். ''ரொம்ப பிரில்லியண்ட் மூளை உங்களுடையது,'' என்றார்.

''திட்டம் வெற்றியடைந்ததும் சொல்லுங்க,'' என்றான் ராவ்.

''அதிலே சந்தேகம் வேற இருக்கா உனக்கு?'' என்றான் கிரண்.

8

"**18**-ம் தேதி."

ராவ் அண்ணா சாலையில் நடந்தான்.

தபால் நிலயத்தை அடைந்தான்.

கிரண் தந்துவிட்டுப் போன கடிதத்தைப் போட்டான்.

9

"**19**-ம் தேதி காலை.

டைரக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ் திரு. லெனின் அவர்களின் உதவியாளர் கடிதங்கள் எல்லாவற்றையும் கத்திரிக்கோலால் வெட்டி உடைத்து உள் காகிதங்களை எடுத்து, கவரை அத்துடன் பின் செய்து அடுக்கிக் கொண்டிருக்க.

அந்த வெள்ளைக் கவரின் மேல் சிகப்பு ஸ்கெச் பேனாவால் 'அபாயம் அவசரம்' என்று எழுதப் பட்டிருப்பதைப் பார்த்து அவசரமாகக் கட் செய்தார். கவரில் பர்சனல் என்று இல்லை.

உள்ளே அரை ஸ்கேலின் நீள, அகலத்திற்கு ஒரே ஒரு துண்டுக் காகிதம் மட்டுமே இருக்க. அதில். அதே சிகப்பு வர்ணத்தில்.

''நாளைக்கு டாக்டர் விக்ரத்தைக் கடத்தப் போகிறோம். இது உங்களுக்கு சவால். முடிந்தால் தவிருங்கள்.''

படித்ததும் முதலில் அவருக்கு சிரிப்புத்தான் வந்தது.

இது போன்ற அபாய எச்சரிக்கைகள், மிரட்டல்கள் எல்லாம் சகஜமான ஒன்று. பொழுது போகாத எவனோ பேப்பரில் செய்தி படித்துவிட்டு விளையாட்டாய் கிறுக்கிப் போட்டு விடுவான். மண்டையை பிய்த்துக் கொள்ளட்டும் என்று. பொய்யாக ஃபயர் சர்வீசை அழைத்து அலைக்கழிப்பதைப் போல.

அதே போலத்தான் இதுவும்.

கடத்துகின்ற எவனாவது தகவல் தந்து விட்டு கடத்துவானா? அதுவும் பிரதமருக்கு அமைக்கப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகள் போல பக்காவான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கும் நிலையில்?

அவர் எழுந்து டி. ஜி. பி. யின் அறைக் கதவைத் தட்டி அனுமதி பெற்றுக் கொண்டு வந்தார்.

''யெஸ். என்று நிமிர்ந்தார் லெனின்.

''இந்த லெட்டர்'' என்று நீட்டினார்.

மேஜை மேல் வைத்திருந்த கண்ணாடியை அணிந்து கொண்டு வாங்கிப் பார்த்தார்.

''மறுபடி ஒரு தலைவலியா? போன வாரம்தான் லைட் ஹவுஸ்ல பாம் வச்சியிருக்கோம்னு போன் வந்திச்சி. அரை நாள் தேடினாங்க. எவ்வளவு பேரோட நேரம் விரயம்! அலட்சியப்படுத்த முடியாது. மீனம்பாக்கம் உதாரணமா வந்து மனசில நிக்கிது. பொறுப்பில்லாத இடியட்ஸ். நாமெல்லாம் இங்கே எந்த வேலையுமே இல்லாம

அடுத்தவன் தலைக்குப் பேன் பார்த்துகிட்டிருக்கோம்னு நினைப்பு. ஸ்கவுண்ட்ரல்ஸ்! கண்டு பிடிக்கணும்யா. நச்சு நச்சுன்னு மூஞ்சிலே மிதிக்கணும் ராஸ்கல்ஸ். இப்ப என்ன? இந்த லெட்டரை வச்சிட்டு மாரடிச்சுக்கணுமா நாம? எங்கே போஸ்ட் பண்ணிருக்கான்?''

''அண்ணா சாலைல சார். கைரேகை கிடைக்கலாம் சார்.''

''கிடைச்சு? மெட்ராஸ்ல போறவன் வர்றவன் கையிலே எல்லாம் ரேகை எடுத்து ஒப்பிட்டுப் பார்க்கச் சொல்றியா? வேஸ்ட் அட்டர் வேஸ்ட், இதெல்லாம் எக்ஸ் கிரிமினல்ஸ் செய்ற வேலை, எதுவுமே இல்லாத பொறிக்கிங்க செய்ற வேலை இது. அபாயம்--அவசரம். அதெல்லம் பிரமாதமா எழுதிடுவான்.''

''பேசாம இதை அலட்சியப் படுத்திடலாமா சார்?''

டி. ஐ. பி. ஒரு நிமிஷம்தான் யோசித்தார்.

''நோ. இது பெரிய தப்பு. இது பொய்ச் செய்தின்னு நல்லாத் தெரியுது. தெரிஞ்சும் நாம தோண்டித் துருவியாகணும். புலி வருது கதை மாதிரி ஆகிடக் கூடாது. கமிஷனர் ஊர்ல இருக்காரா?''

''இருக்கார் சார்.''

''கூப்பிட்டு இங்கே உடனே வரச்சொல்லு. ராகவானந்தத்தை வரச் சொல்லு ரெண்டு இன்ஸ்பெக்டர்களை அண்ணா சாலை போஸ்ட் ஆபீசுக்கு அனுப்பி நேத்து சந்தேகப்படும்படியா எவனாச்சும் வந்து போஸ்ட் பண்ணினான்னு பக்கத்துக் கடைகளிலே விசாரிக்கச் சொல்லு. ஒண்ணும் பேராது. முக்கியமா சிகப்பு ஸ்கெச் பேனா வாங்கினானா எவனாவதுன்னு அந்த கடைகள்ல கேக்கச் சொல்லணும்.''

டி. ஜி. பி. சொல்லிக் கொண்டே இருக்க. உதவியாளரின் விரல்கள் சுறுசுறுப்பாக டெலிபோனின் டயலைச் சுழற்றிக் கொண்டிருந்தன.

அதே 19-ம் தேதி. காலை 10.30.

ராவ் அந்தப் பப்ளிக் பூத்திற்குள் நுழைந்தான்.

''ஹலோ, 100? அவசர போலீஸா? ஒரு முக்கியமான தகவல். நாளைக்குச் சென்னைக்கு வரப் போற சயன்டிஸ்ட் டாக்டர் விக்ரத்தை அவர் ஒய்வெடுக்கப் போற ஹோட்டல் ராயல் மௌண்ட்டன்ல வச்சி கடத்தப்போறாங்க. நடவடிக்கை எடுங்க. என் பேரா? ஸாரி, சொல்ல விரும்பவில்லை. போலீஸோட வம்புகள்ல மாட்டிக்க நான் தயாரா இல்லை.''

ராவ் டெலிபோனை வைத்துவிட்டு வெளியேறி காலைக் காட்சி சினிமாவுக்குப் போய் டிக்கெட் வாங்கிக் கொண்டு ஐஸ்கிரீம் சாப்பிட்டான்.

டி. ஜி. பி.யின் அறையில் அவர்கள் கூடியிருந்தனர். ஐ. ஜி. கமிஷனர், இரண்டு சி. ஐ. டி. பிரிவு அதிகாரிகள் மற்றும் பிரிட்டோ, சுனில் பிரபாகர்.

சாம்வெல், என்ன நினைக்கிறீங்க? கடத்தப் போறோம்னு ஒரு லெட்டர் வருது. பின்னாலேயே இந்த இடத்திலே கடத்தப் போறாங்கன்னு ஒரு போன் கால் கன்ட்ரோல் ரூமுக்கு வருது. ரெண்டும் உண்மையா? பொய்யா? விளையாட்டா? அண்ணா சாலை போஸ்ட் ஆபீஸ் சுற்றி துல்லியமா விசாரிச்சாச்சி. ஒரு க்ளூவும் இல்லை. கண்ட்ரோல் ரூமுக்கு வந்த கால் எந்த ஏரியாவிலேர்ந்துன்னு கண்டு பிடிக்க முயல்றதுக்கு முன்னாடி லைனைக் கட் பண்ணிட்டான். இப்போ நாம விஷயத்தை வெளில லீக் பண்ணாம நடவடிக்கை எடுத்தாகணும். அலட்சியப் படுத்துறது சரியில்லை. முறையான சீரியஸான நடவடிக்கைகள் தேவை. லெட்டர்

எழுதினவனையும், போன்ல பேசினவனையும் கண்டுபிடிக்கணும். ஆனா. அது சுலபமான காரியமில்லை. இன்னிக்கு ராத்திரிக்குள்ளே நடக்கிற விஷயமில்லை. என்ன செய்யலாம். சொல்லுங்க,'' என்றார் டி. ஜி. பி.

''எத்தனையோ பிரமுகர்கள் பல மாநாடுகள்ல கலந்துக்கிறத்துக்கு வர்றாங்க. அரசியல் தலைவர்களைத் தவிர மற்ற தனி நபர்களுக்கு. பொதுவா நமக்கு இந்த மாதிரி மிரட்டல்கள், எச்சரிக்கைகள் நிறைய வர்றதில்லை. இந்தக் கடிதத்தையும், போனையும் நிச்சயம் அலட்சியப் படுத்தக்கூடாது. டாக்டர் விக்ரம் 'பயணத்தைப் பொறுத்தவரை. அவருக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட வாய்ப்பு இருக்கும்ன்னு ஓரளவு எதிர்பார்த்துத்தான் சி. பி. ஐ. தன் அதிகாரிகளை மேற்பார்வைக்கு அனுப்பியிருக்கு. ஆகையால். எச்சரிக்கையிலே ஒரு உண்மை இருக்கிறதாத்தான் நாம எடுத்துக்கணும்'' என்றார் ஐ. ஜி. சாம்வெல்.

பிரிட்டோவும், பிரபாகரும் அமைதியாகக் கன்னத்தில் முட்டுக் கொடுத்துக் கொண்டு கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

''சரி, என்ன ஏற்பாடுகள், நடவடிக்கைகள் செய்யலாம்?''

''புரொபஸர் திரிவேதியைத் தொடர்பு கொண்டு மாநாட்டு தேதியைத் தள்ளிப் போட வாய்ப்பிருக்கான்னு முதல்ல கேட்டுக்கலாம்,'' என்றார் ஒரு டி. ஐ. ஜி.

''நோ! நோ! அப்போ நம்ம டிபார்ட்மெண்ட்டோட பலத்திலே நமக்கே நம்பிக்கையில்லையின்னு ஆயிடுது. ஒரு போன் எச்சரிக்கை, ஒரு இரண்டு வரிக் காகிதம் இதை வச்சிட்டு ஒரு மாநாட்டையே தள்ளிப் போடச் சொல்றது சரியில்லை. என்ன விளக்கம் தருவிங்க? டாக்டர்

விக்ரத்துக்கு எங்களால பாதுகாப்பு தரமுடியாதுன்னு சொல்லியா? ஷேம்! தள்ளிப் போடுறதினால் பிரச்சனை தீர்ந்திடுமா? இன்னொரு தேதி மாற்றி அமைச்சாங்கன்னா.... கடத்தணும்னு தீர்மானம் செஞ்சவன் அந்தத் தேதியிலே செய்ய மாட்டானா? ஹலோ சி. பி. ஐ. ஆபீஸர்ஸ், பேசுங்க. ஏன் மௌனமா இருக்கீங்க என்றார் லெனின்.

''உங்களோட எண்ணத்தைத் தெரிஞ்சுக்கிட்டுப் பேசலாம்னு காத்திருந்தோம். நீங்க சொல்றா மாதிரி தேதியைத் தள்ளிப் போடறதனால பிரச்சனை தீராது. அதே சமயம் எதிரிக்கு ஒரு இம்மியளவுக்குக் கூட சான்ஸ் தராம நடவடிக்கை எடுக்கறது நல்லது,'' என்றான் பிரிட்டோ.

''வெரிகுட். மாநாடு சம்மந்தப்பட்டவங்க யாரையும் இப்போ நாம பயமுறுத்த வேண்டாம். பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவரப் படுத்திடலாம், மிஸ்டர் சுனில், எல்லா ஏற்பாடுகளும் உங்களுக்குத் தெரியும். எந்த இடத்திலேயாவது எதிரிக்கு வாய்ப்புத் தரமாதிரி, பலவீனமாக ஏற்பாடு இருக்கிறதா நீங்கள் உணர்றிங்களா?''

''இல்லை சார், பர்ஃபெக்ட், எங்க ஆலோசனைகள் எல்லாத்துக்கும் உடனே அழகா செயல் வடிவம் கொடுத்திருக்கிங்க. டாக்டர் வந்து இறங்கற ஏர்போர்ட் லேர்ந்து கவர்னர் மாளிகை, ஹோட்டல் ராயல் மௌண்ட் டன், கான்ஃபரன்ஸ் ஹால் இப்படி எல்லா இடத்திலேயும் ரொம்ப பிரமாதமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட் டிருக்கு. இப்போ நமக்கு வந்திருக்கின்ற தகவல் ஹோட் டலை மட்டும் குறிப்பிடுகிறது. அதனால ஹோட்டலை மட் டும் இன்னும் விசேஷமான ஏற்பாடுகளை செயதுட்டாப் போதும்னு நாம சும்மா இருக்கிறது சரியில்லை. டாக்டர் விக்ரம் கடக்கிற எந்த ஒரு கட்டத்திலேயும் தொய்வான ஏற்பாடுகள் இருக்கக் கூடாது. அதனால் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் தவிர மாஸ்டர் பிளான் ஒண்ணையும் நாம உருவாக்கியாகணும்,'' என்றான் சுனில் பிரபாகர்.

''மாஸ்டர் பிளான்?'' நீங்க என்ன சொல்றிங்க? விரிவா சொல்லுங்க.''

''சார், கடிதத்திலே இது ஒரு சவால்ன்னு சொல்லியிருக்கான் அந்த முகம் தெரியாதவன். இது விளையாட்டுக் கடிதம்ன்னு மனதிலே ஓரமா, ஓரளவு உறுதியாவேப் பட்டாலும் சந்தேகத்திற்கு இடம் கொடுக்க வேணாம்ங்கிறது நம் எல்லோரோட அபிப்ராயம். அதனால கடிதம் சீரியஸ்னு வச்சிக்கிறோம். அப்போ சவாலைச் சந்திக்கிறோம். சவால்னு வந்த பிறகு இவ்வளவு பெரிய டிபார்ட்மெண்டோட சாமர்த்தியத்தை நிரூபிக்கணும் நாம்.''

''யெஸ். நிச்சயமா மேலே சொல்லுங்க.''

''டாக்டர் விக்ரம் பற்றின முழு தகவல்களும், புகைப்படங்களும் நம்மக் கிட்டே இருக்கு. அவர் உயரம், உடலமைப்பு, கிட்டதட்ட அதே முகச்சாயல் கொண்ட ஒரு போலீஸ் அதிகாரியைத் தேர்ந்தெடுப்போம். வெள்ளை நிறத்திலே கதர் குர்தா உடைதான் டாக்டர் விக்ரம் எப்பவும் அணிவார். அதே மாதிரி உடையைப் போட்டுவிட்டு, தூரத்திலேர்ந்து பார்த்தா வித்தியாசம் தெரியாதபடி முடிஞ்சவரை முயற்சி பண்ணி ஒரு டூப்ளிக் கேட் டாக்டர் விக்ரமை தயார் செய்றோம் நாம்.''

''இன்ட்ரஸ்டிங். ம் ? அப்புறம்?''

''ஏர்போர்ட்ல ரெஸ்ட் ரூம்ல அஞ்சி நிமிஷம் இருந்திட்டுத்தான் கவர்னர் மாளிகைக்கு புறப்படுகின்றார் டாக்டர் விக்ரம். அந்த ரெஸ்ட் ரூம்ல ஏற்கனவே நம் தயாரிப்பு மனிதரை காத்திருக்க வைக்கிறோம். அவர் வந்த பிறகு அவர் கிட்டே இந்த பாதுகாப்பு நடவடிக்கையைச் சொல்றோம். கவர்னர் மாளிகைக்கு புல்லட் புரூஃப் கார்ல நம்ம செட்டப் டாக்டர் புறப்பட்டுப்போவார். பத்து நிமிஷம்

கழிச்சி ஒரிஜினல் டாக்டர் வேறு வழியிலே, வேறு வண்டியிலே பயணம் செஞ்சி கவனர் மாளிகைக்கு வருவார். கவர்னர் மாளிகைக்கு உள்ளே ரெண்டு பேரும் வந்ததும். ஒரிஜினல் டாக்டர் கவர்னரை ·சந்திப்பார். அவர் புரோகிராமைத் தொடங்குவார். அதே மாதிரி அங்கிருந்து நம்ம செட்டப் டாக்டர் புறப்பட்டு ஹோட்டல் ராயல் மௌண்ட்டன்ல தங்குவார். ஒரிஜினல் டாக்டரை வேறு ஒரு இடத்திலே தங்க வைக்கிறோம். மாநாட்டு ஹாலுக்குப் போறப்பவும் அதே மாதிரி, திரும்பவும் ஏர்போர்ட் போறப்பவும் அதே மாதிரி, இந்த சீக்ரெட் நம்மைத் தவிர வேறு யாருக்கும் தெரிய வேண்டாம். கவர்னர் மாளிகையிலேயும் கான்பரன்ஸ் ஹால்லேயும் குறிப்பிட்ட அந்த நேரத்திலே நம்ம ஏற்பாட்டைத் தெரியப்படுத்தினா போதும்.''

''வெரிகுட் ஐடியா. ஆனா நமக்கு இதை ஏற்பாடு செய்ய நேரம் இருக்கா?''

''வொய் நாட்?'' என்றான் பிரிட்டோ, ''கிட்டத்தட்ட அதே சாயல் இருக்கிற ஒரு அதிகாரியை தேர்ந்தெடுத்துட்டா மத்ததெல்லாம் ரெண்டு மணி நேரத்திலே செட்டப் செஞ்சிடலாம்.''

போலியாய் ஒருவரை செட்டப் செய்யும் அந்த ஐடியாவைக் குறித்து மேலும் அவர்கள் விவாதித்தார்கள். தீவிரமாக அந்த வேலையில் இறங்கினார்கள். அந்தப் பொறுப்பை பிரிட்டோ உற்சாகமாக ஏற்றுக் கொண்டான். போலீஸ் அதிகாரிகளின் புகைப்படங்களை வைத்துக் கொண்டு, டாக்டர் விக்ரமின் புகைப்படத்தோடு ஒப்பிட்டு, பின் உயரம் அகலம் விபரங்களைப் பார்த்து. இறுதியாக சீதாராமன் என்கிற சப்--இன்ஸ்பெக்டர் தேர்ந்தெடுக்கப்பட, இரண்டு மணி நேரங்கள் ஆகின.

''சீதாராமன் வரவழைக்கப்பட்டு, திட்டம் சொல்லப்பட்டு, சீதாராமனுக்கு டாக்டர் விக்ரமின் மீசைப்

போலவே மீசை செப்பனிடப்பட்டு.. சற்று உள்ளடங்கின கன்னத்திற்கு வாய்க்குள் அடக்கிக்கொள்ளும் பிளாஸ்டிக் தடுப்பு கொடுக்கப் பட்டு. அவரைப் போலவே கண்ணாடி மாட்டப்பட்டு. தலையின் பக்க மயில் கற்றைகளில் நரை பூசப்பட்டு. தாடையில் ஒரு முத்து போன்று ஒட்டப்பட்டு

80 சதவீதம். சீதாராமன். டாக்டர் விக்ரமாகவே மாறிவிட. அளவெடுத்து அவசரமாகக் குர்தா தைக்கப் பட்டது.

மாலை ஐந்து மணிக்கு பிரிட்டோவும் பிரபாகரும் தங்கள் அறைக்கு வந்தார்கள். தொப் என்று கட்டிலில் விழுந்தான் பிரிட்டோ.

''பிரபா, ஒரு மணிக்குத்தானே ஹோட்டல் ராயல் மௌண்ட்டன் போறோம்?''

''ஆமாம்.''

''ஆறரை மணிக்கு எழுப்பேன். அதுவரை தூங்கறேன்.''

இவன் சரி என்பதற்குள் அவன் தூங்கிப்போனான்.

சுனில் பிரபாகர் சிந்தனையோடு சற்று நேரம் உலாத்தினான். பின்னர் டெலிபோனை எடுத்து ஐ. ஜி.யின் எண்ணை முயன்றான்.

அவரின் பி. ஏ. தன்னை அறிமுகப் படுத்திக்கொள்ள...

''யெஸ், எனக்கு நீங்க தான் வேணும். ஐயம் சுனில் பிரபாகர். சி. பி. ஐ. மூணு நாள் முன்னாடி நாங்க ஆபிசுக்கு வந்த போது ஒரு பத்திரிக்கைப் பொண்ணு எங்ககிட்ட பேசினது, நினைவிருக்கா?''

''யெஸ் சார்.''

"அவங்க பேர், பத்திரிக்கை பேர் தெரியுமா?"

"வெய்ட்," என்று அவர் பக்கம் புரட்டுகின்ற சப்தம் கேட்டு, "சார், மிஸ். ஆஷாசச்தேவ் மன்த்லி," என்றார்.

உள்ளங்கையில் எழுதிக் கொண்டே, "பத்திரிக்கை போன் நம்பர் அப்படியே சொல்லுங்க. "என்றான் சுனில்.

சொல்லப்பட. குறித்துக் கொண்டு, அந்த பொண்ணுவீட்டு முகவரி தெரியுமா?

"ஸாரி, தெரியாது. பத்திரிக்கை ஆபீஸ்ல கேட்டு உங்களுக்கு தெரிவிக்கட்டுமா?"

"தாங்ஸ், நான் பார்த்துக்கறேன்," என்று வைத்துவிட்டான்."

உடனே அந்தப் பத்திரிக்கையை அழைத்தான்.

"மிஸ் ஆஷா இருக்காங்களா? நான் அவங்க கூட பேசமுடியுமா?"

"காலையிலே வந்துப்போயிட்டாங்க சார்."

"ஒக்கே. அவங்க வீட்டு விலாசம் தாங்க, நான் போலீஸ் டிபார்ட்மெண்ட், முக்கியமா சந்திக்கணும்,"

"ஒ. கே. குறிச்சுக்குங்க."

"தாங்ஸ்" என்று வைத்துவிட்டு முகவரியில் இருந்த எண்ணை முயன்றான்.

"ஹலோ" என்றது ஒரு மென்மையான ஆண் குரல்.

"மிஸ் ஆஷா கூடப் பேசணும் சார்."

"நான் அவ அப்பா பேசறேன். சினிமா போறதா சொல்லிட்டு அரை மணி முன்னாடி புறப்பட்டுப் போய்ட்டாளே.

"ஒ. நான் அவங்களை ரொம்ப அவசரமா சந்திக்கணும். எந்தத் தியேட்டர் போயிருக்காங்க?"

''நாகேஷ்''

''தாங்க் யு. அவங்க மட்டும் தான் போயிருக்காங்களா?''

''அவளோடு பிரண்டு கூடப் போறதா பிளான். இவ முன்னாடியே போய்ட்டா இன்னொரு டிக்கெட்டை என்கிட்டே கொடுத்திட்டு, அவ பிரண்டு வந்து வாங்கிகிட்டு போய் ஜாய்ன் பண்ணிக்குவா. நீங்க பத்திரிக்கையா?''

''போலீஸ் டிபார்ட்மெண்ட், தாங்க் காட். உங்க கிட்டே உள்ள டிக்கெட்டோட சீட் நம்பரைச் சொல்லுங்க ப்ளீஸ்.''

''ஒன் மினிட்''. ''சாரதா, அந்த டிக்கெட்டை எடுடி''... ''ஹலோ, E 11 சார்''

''ஒக்கே தாங்க் யு.''

போனை வைத்துவிட்டு, பாத்ரூம் போய் அவசரமாக முகம் கழுவிக் கொண்டு, உடை மாற்றிக் கொண்டு புறப்படத் தயாராகி. . . கட்டிலைப் பார்த்தான். பிரிட்டோ அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்க.

அலாரம் டைம்பீஸ் ஆறரை மணிக்கு செட் செய்து வைத்து, அதன் அடியில், ''ஹோட்டல் ராயல் மௌண்ட் டனின் வரவேற்பு பகுதியில் காத்திருக்கிறேன். வந்து என்னுடன் சேர்ந்து கொள்ளவும்'' என்று எழுதி வைத்துவிட்டுப் புறப்பட்டுப் காரை எடுத்தான் சுனில் பிரபாகர்.

தியேட்டருக்கு வந்தபோது, உள்ளே பயிர்களில் ஊடுருவும் பூச்சிகளை ஒழிக்க வழி சொல்லிக் கொண்டிருக்க. மானேஜரின் அறையில் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு ஊழியன் ஒருவனை அழைத்துக்.

''சீட் நம்பர் E-12 அல்லது E-10ல் மிஸ் ஆஷான்னு ஒரு பெண் இருப்பாங்க. ரொம்ப அவசரமா உங்களை சந்திக்கணும்னு சொல்லி இங்கே அழைச்சிட்டு வாங்க'' என்றான்.

பத்து நிமிடத்தில் சுனில் ஹோட்டல் ராயல் மௌண்ட்டனை நோக்கித் திறமையாகக் காரைச் செலுத்திக் கொண்டிருக்க. அருகில் ஆஷா.

''அன்னிக்கு நான் சொன்னப்போ அலட்சியப்படுத்தினீங்க. இப்போ என்னைத் தேடி வந்து தீவிரமா விசாரிக்கிறிங்க. என்ன ஆச்சு? எதுவும் சிக்கலா?''

''பெரிய சிக்கல் இல்லை. ஒரு சின்ன உறுத்தல். எங்க திட்டத்திலே முளைச்சிருக்கு. அதை வேரோடு பிடுங்கி எறிய ஏற்பாடுகள் செஞ்சாச்சு. ஆனா அதை விதைச்சவனைத் தேடி ஒரு தனி முயற்சி. அன்னிக்கு நீங்க ஓவர்ஹியர் பண்ணச் சொன்ன தகவலை அவ்வளவு தீவிரமா அப்போ எடுத்துக்கலை. இப்போ எந்தச் சின்னத் தகவலையும் தீவிரமா ஆராய்ஞ்சிடலாம்னு தீர்மானம். அதனாலதான் உங்களைத் தேடி வந்தேன். நீங்க சொன்ன செய்தியை வச்சி கொஞ்சம் விசாரணை செஞ்சி அதைக் கிளியர் செஞ்சிக்கிட்டா நல்லதுன்னு தோணுது. உங்க ஒத்துழைப்பு வேணும் அதுக்கு.''

''ஷ்யூர். நான் என்ன செய்யணும் சொல்லுங்க?''

''நீங்க உக்காந்திருந்த இடத்தை அவங்க இருந்த இடத்தை நீங்க பார்த்ததை உணர்ந்ததை இன்னும் துல்லியமா --எதையும் விடாம சரியா நினைவுப் படுத்திக்கிட்டுச் சொல்லுங்க. இப்போ ஹோட்டல் ராயல் மௌண்ட்டன் போறோம் நாம்.''

ஸோடியம் வேப்பர் வெளிச்சம் அங்கங்கே அந்தக் குட்டிப்பார்க் முழுதும் சிதறியிருக்க. கறுப்பை நோக்கிச்

சென்று கொண்டிருந்த வானில் முழுமையை நோக்கிச் சென்றுக் கொண்டிருக்கும் நிலா பூத்திருக்க.

"இந்த இடம்தான்," என்றாள் ஆஷா. வரிவரியாய் வர்ணித்தாள்.

"இதுதான் பார்த்தது, உணர்ந்தது" என்றாள்-- கூந்தலைப் பின்னால் தள்ளிக் கொண்டு.

"ஐ சி. . . " என்று அமைதியாக அந்த மூவர் பேசின இடத்தில் மெல்ல நடந்தான். "மூணு பேர்ல இரண்டு பேரோட முகத்தை நீங்க பார்க்கலை. ஒருத்தனைத்தானே பார்த்தீங்க அதுவும் அவன் ஒரு கொத்தை தேடி எடுத்துக்கத் திரும்பி வந்ததாலே. அப்படியா?"

"ஆமாம் சார். நான் அவனையே பார்த்துக்கிட்டிருந்ததை அவன் உணர்ந்துட்டான். அதனாலே என் கிட்டே நெருங்கி வந்து உங்க நேரம் கரெக்டான நேரமான்னு கேட்டு அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டுப் போனான். அவன் முகம் நல்லா ஞாபகமிருக்கு. அவன் போட்டிருந்த சட்டையிலே வசனம் எழுதியிருந்ததாலே அதுவும் ஞாபகமிருக்கு."

"என்ன அது?"

"Post Box Needed".

"வெல். நாட் எ ஹெல்தி க்ளூ. அந்த பனியனை மறுபடி அவன் உபயோக்கப்படுத்தற வரைக்கும் நாம காத்திருக்க முடியாது. வித்தியாசமா வேறு எதாவது பார்த்தீங்களா?"

"கிட்டே வந்தப்போ கழுத்திலே இருந்த செயின்ல கிராஸ் இருந்தது. முகம். . . ஒட்டிப் போன கன்னம். கறுத்துப் போன உதடு. கோரை மயிர். அடர்த்தியான புருவம். கீழே வளைஞ்ச மீசை."

"வெரிகுட். அவங்க கிசுகிசுப்பா பேசினதிலே நம்ம திட்டத்துக்கு இந்த ஒட்டல் லாயக்குப் படாதுங்கறதைத் தவிர, வேற ஒன்னு ரெண்டு வார்த்தைகள் கூடப் புரியலையா?"

"இல்லை சார்."

"அவங்க எழுந்திரிச்சி போனப்போ சாதாரணமா பேசிட்டுப் போனாங்கன்னு சொன்னிங்களே, என்ன பேசினாங்க?"

"அவங்கள்ல ஒருத்தன் ஏதோ ஒரு கல்யாணத்துக்குப் போகணும்னான். இன்னொருத்தன் போகக் கூடாது. நிறைய வேலை இருக்கு நமக்குன்னான். சரி நான் போகலைன்னுட்டான் அவன். அப்புறம் அவங்க தூரமா போயிட்டாங்க."

"வேற டாக்டர், விக்ரம் இந்த மாதிரி வார்த்தைகள் எதுவும் கேட்ட மாதிரி நினைவிருக்கா?"

"இல்லை, கேட்கலை அப்படி."

சுனில் சற்று நேரம் அங்கேயே நின்று சுற்றிலும் பார்த்தான். தூரத்தில் இருந்த பின்பக்க கேட்டும், அதனருகே இருந்த ஸ்டூலில் அமர்ந்திருந்த காவல்காரனும் தெரிய.
"ஒன் மினிட் மேடம்," என்று விரைவாக அவனிடம் வந்தான்.

தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டபின், அவனுடைய கோணலான சல்யூட்டை ஏற்றுக் கொண்ட பின், விசாரித்தான் பதினைந்து நிமிடம்.

"நீ துண்டு துண்டா சொன்னதை நான் தொகுத்துச் சொல்றேன். சரியான்னு சொல்லு. டாய்லெட் போகணும்னு வந்த அவன் கதவைத் திறக்கச் சொல்லி, காம்பௌண்ட்டுக்கு அந்தப் பக்கம் போய்ட்டு, மறுபடி திரும்பி வந்து சிகரெட்டுக்கு நெருப்பு வாங்கிக்கிட்டு உன்னோட டூட்டி பத்தி முழுக்க நிதானமா விசாரிச்சு

தெரிஞ்சுக் கிட்டுத்தான் நகர்ந்தான். அவனை உனக்கு முன்னே பின்னே அறிமுகம் இல்லை. முகம் லேசாத்தான் ஞாபகம் இருக்கு. அவனைப் பத்தி திருப்பி நீ எதுவுமே கேக்கலை சரியா?''

''ஆமாம் சார்''

''அவன் நெருப்புப் பெட்டி வாங்கறப்போ, கொடுக்கறப்போ கையை கவனிச்சியிருப்பே, பார்த்து சொல்லு. மோதிரம் எதுவும் போட்டிருந்தானா?''

''ஞாபகமில்லைங்க. சரியா சொல்ல வரலை.''

''சரி, உனக்கு பணம் எதுவும் தந்தானா? சும்மா மறைக்காம சொல்லு.''

''சத்தியமா இல்லை சார்.''

''மறுபடி உன்னை சந்திச்சானா எங்கேயாவது?''

''இல்லை சார்.''

''அவனை எங்கே பார்த்தாலும் உன்னால அடையாளம் காட்ட முடியுமா ?''

''முடியும்னு நினைக்கிறேன்.''

''சரி,'' என்று திரும்பி ஆஷாவிடம் வந்தபோது, ''சார், இன்னும் ஒரு தகவல் நினைவுக்கு வருது,'' என்றாள்.

''என்ன?''

''கல்யாணத்துக்குப் போகக் கூடாதுன்னு சொன்னவன் அவனை ராவ்னு சொல்லிக் கூப்பிட்ட ஞாபகம் இருக்கு.''

''சபாஷ்! ராவ்? என்ன ராவ்?''

''மொட்டையா வெறும் ராவ்தான்.''

''ஓ.கே. வாங்க ரிஸப்ஷன் பகுதிக்குப் போவோம்.''

அங்கே மஃப்டி உடையில் ஒரு டி. ஐ. ஜி. யும் இரண்டு சி. ஐ. டி. அதிகாரிகளும் மற்றும் பிரிட்டோவும் ஒரு சோபாவில் அமர்ந்து பேசிக் கொண்டிருக்க.

''ஸாரி, உங்களோட சினிமா ப்ரோக்ராமை கெடுத்துட்டேன். உங்களுக்கு நேரம் இருந்தாலும் இல்லைன்னாலும் மறுபடியும் நீங்க எனக்கு உதவணும் மிஸ் ஆஷா.''

''ஷ்யூர். என்ன சொல்லுங்க.''

''ஒரு சி. ஐ. டி. ஆபீஸரோட நீங்க ஐ. ஜி. ஆபீஸ் போகணும். நீங்க சொன்ன அடையாளங்களை வச்சி நம்ம கம்ப்யூட்டர் வரைஞ்சு தர்ற முகங்களைப் பாருங்க. எக்ஸ் கிரிமினல்ஸ்லே கொஞ்சம் போட்டோக்கள் காண்பிக்கச் சொல்றேன். அதையும் பாருங்க. அவன் முகம் கிடைச்சா எனக்கு ரொம்ப உதவியா இருக்கும்,'' என்று சுனில் அவர்களை நோக்கி நடந்து விஷ் செய்து விட்டு, டி. ஐ. ஜி. யின் காதுக்குச் சுருக்கமாக விவரங்களைச் சொல்ல.

அவர் உடனிருந்த ஒரு ஆபீஸரிடம் விபரம் சொல்லி ஆஷாவை அழைத்துச் செல்லச் சொன்னார். க்ளூ கிடைத்தால் உடன் போன் செய்யச் சொன்னார்.

அந்த ஆஃபீஸரும் ஆஷாவும் புறப்பட்டுப் போனதும், சுனில் மற்றவர்களுக்கு விளக்க.

பிரிட்டோ, ''இதுக்குதான் பறந்து வந்தியா?'' நீ செத்த பாம்பை அடிக்கிறேன்னுதான் நான் நினைக்கிறேன். இருந்தாலும் நல்ல அப்ரோச்-- நீ செய்திருக்கிறது'' என்றான்.

டி. ஐ. ஜி. மீசையைத் தடவிக்கொண்டு சொன்னார். ''மிஸ்டர் சுனில், உங்க அபிப்பிராயப்படி ஹோட்டல்ல செக்யூரிட்டியை அதிகப்படுத்தியாச்சு. சுற்றிலும் பல மாடி கட்டிடங்களிலே இன்னிக்கு ராத்திரிலேர்ந்தே மஃப்டி போலீஸ் இருக்க வெச்சாச்சு. க்ளீன் வயர்லெஸ் நெட் வொர்க் ஏற்பாடு செஞ்சிருக்கு. இந்த ஹோட்டல்லோட பின்பக்க வழிக்கும் ஸ்ட்ராங் பாதுகாப்பு கொடுத்தாச்சு. எதுவும் மாற்றம் வேணுமா?''

''யெஸ் சார். ஒரே ஒரு சின்ன மாற்றம். ஹோட்டலோட பின்பக்க வழிக்கு நாம கொடுத்திருக்கிற பாதுகாப்பை சுத்தமா வாபஸ் வாங்கிடலாம். யார் வேணும்னாலும் அதன் வழியா உள்ளே வர முடிகிற மாதிரி அந்த வழி ஃப்ரியா இருக்கட்டும். அதே சமயம் ஹோட்டலோட உள்பக்கம்-- அந்தப் பாதுகாப்பை அமைச்சுக்கலாம். எதிரிகளை உள்ளே நுழையவிட்டுக் காட்சிப் பண்ணணும். அதுக்கு இப்படி செஞ்சாதான் சரியா இருக்கும்.''

''நல்ல ஐடியா, அதே மாதிரி செஞ்சிடுங்க குலோத்துங்கன்'' என்று அவர் அருகில் இருப்பவரிடம் தெரிவிக்க, ''சரி சார்'' என்று அவர் உடனே புறப்பட்டுச் சென்றார்.

டி. ஐ. ஜி. எழுந்தார்.

''வாங்க. ஏர்போர்ட் போய் எல்லா ஏற்பாடுகளும் சரியா இருக்கான்னு செக் பண்ணிட்டு ஆபீஸ் போகலாம். டாகடர் விக்ரமுக்கு இன்னும் சில குறிப்புகள் சொல்ல வேண்டியிருக்கு. ஐ மீன்--- அவர் மேன்.''

சிரித்துக் கொண்டே அவர்கள் புறப்பட்டார்கள்.

காரில் பிரிட்டோ சுனில் பக்கம் திரும்பி, உதட்டில் கொளுத்தப்படாத சிகரெட் அசையாமல் கேட்டான்.

''மிஸ் ஆஷா குறிப்பிடற அந்த மூணு நபர்களை நீ சந்தேகப்படுறியா?''

''ஏன் கூடாது?''

''லாஜிக் இடிக்கலையா சுனில்? கடத்தல் திட்டத்திலே ஈடுபட்டிருக்கிறது அவங்கன்னே வச்சிக்குவோம். ஏன் கடத்தணும்னு சொல்லு.''

டோண்ட் பி சில்லி. டாக்டர் விக்ரத்தை விலைக்கு வாங்க எத்தனையோ ரகசிய நாடுகள் தயாரா இருக்கு.

உயிரோடு கிடைச்சா போதும் ப்ரெய்ன் வாஷ் பண்ணி ரகசியங்களை அடைஞ்சுடலாம். கடத்தறவனுக்கு எத்தனையோ லட்சங்கள் கிடைக்குமே.''

''அப்போ இது ரொம்ப ரிஸ்க்கான பெரிய ஸ்கீம். இல்லையா? அப்படிப்பட்ட ஒரு பிரமாண்ட திட்டத்தை எவனாவது கடத்தப் போறோம்னு போலீசுக்கு தகவல் தந்துட்டுச் செய்வானா? போலீசுக்கு தவகல் தர வேண்டிய அவசியமென்ன?''

''ஒரு சவாலா சாதிச்சுக் காட்டலாம்ங்கிற திமிர்லே...''

''நோ. நோ. சுனில் இங்கே நீ தப்பு பண்றே. லெட்டர் எழுதினதும் போன்ல மூணாம் மனுஷன் மாதிரி தகவல் சொன்னதும் ஒரே நபர்தாங்கிறது என்னனோட கணிப்பு. அதுக்கான காரணங்களை இரண்டு விதத்திலே'' யோசிக்கிறேன். ஒண்ணு இது முழுக்க முழுக்க விளையட்டு. கொஞ்சமும் உண்மை இல்லை. இரண்டாவது படு சீரியஸ்ங்கிறது. படு சீரியஸ்ங்கிறது உண்மைன்னா சத்தியமா அவங்களோட கடத்தல் முயற்சி ஹோட்டல் ராயல் மௌண்ட்டனில் கிடையவே கிடையாது. நம்ம பார்வையைத் திசை திருப்பறத்துக்கான முயற்சி. அந்த முயற்சிக்குப் பூச்சி காட்ற மாதிரி இப்போ நாம பிளான் பண்ணியாச்சு. பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகரிச்சதோட நீ சொன்ன மாஸ்டர் பிளான் பிரமாதமா நமக்கு உதவப் போகுது.''

''சரி பிரிட்டோ, ஆஷா சொன்ன மூணு பேர் இந்த சீரியஸ் திட்டத்தை வகுத்திருக்கக் கூடாதா?''

''மே.பி. வாய்ப்புக்கள் குறைவு. இவ்வளவு பெரிய திட்டத்தைப் பொது இடத்திலே பேசற மடையர்களா நான் அவங்களை நினைக்கலை. எனிவே, இந்த மூணு பேரைப் பத்தி கிளியர் பண்ணிடறது நல்லதுதான். எவ்வளவு தகவல் வச்சிருக்கே நீ?''

''மூவர் பேர்ல ஒருவர் பேரு ராவ். மூணு பேர்ல ஒருத்தன் முகம் ஆஷா, ஒரு காவல்காரன் இரண்டுபேருக்கும் நல்லாத் தெரியும். அவங்க கிட்டக் கூட கார் எதுவோ ஒண்ணு இருக்குது. மூணு பேர்ல முக அடையாளம் தெரிஞ்சவன் ஒரு கிறிஸ்தவன்.''

''விபரங்கள் போதுமா? இதை வச்சிக்கிட்டு இன்னிக்கு ராத்திரிக்குள்ளே அவங்களைக் கண்டுபிடிக்கிறது. இம்பாஸிபிள். பார்க்கலாம்,'' என்று பிரிட்டோ சிகரெட் கொளுத்திக்கொள்ள. சுனில் கதவு வழியே ஓடுகிற நட்சத்திரங்களைப் பார்த்தான்.

10

சம்பவங்கள் நிறைந்த இருபதாம் தேதி -- கோழிகளின் கூவல்களுக்காகவும் சமுத்திர விளிம்பில் சிகப்புச் சூரியனின் தலைகாட்டலுக்காகவும் காத்திருக்க. . . பம்பாய்.

பந்த்ரா.

மார்ட்டின் ரோடு.

அர்ஜுன் ஆத்ரேயா என்று முகப்பில் பொறிக்கப் பட்ட வீட்டின் மாடியில் தனியறையில் 4.30 மணிக்கு வைக்கப்பட்டிருந்த அலாரம் முழித்துக்கொள்ள. . . புரண்டு அதன் காதைத் திருகி "ஷ்! சத்தம்" என்று அதட்டிவிட்டு, எழுந்து நின்று கைகளை உதறினாள் மெல்லிய நைட்டியில் இருந்த மிஸ் அனிதா ஆத்ரேயா. உதறலில் சன்னமாய் குலுங்கின.

பாத்ரூம் போய் வெளி வந்து உடை மாற்றி-- லிப்ஸ்டிக் மேல் க்ளாஸ் தடவி இறுதி இறுதியாகக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டு, ஹீல்ஸ் மேல் ஏறிக்கொண்டு, டக்டக் என்று வெளிப்பட்டு அடுத்த அறையின் கதவைத் தட்டி, "டாடி, நான் ஏரோட்ரோம் போறேன்," என்றாள்.

கதவைத் திறந்து பைஜாமாவின் இடுப்பின் முகப்பைப் போட்டுக் கொண்டே ஒரு கொட்டாவியின் மத்தியில் "எந்த ஃபிளைட்டில் டூட்டி?" என்றார்.

"மெட்ராஸ் பிளைட்ல. இன்னிக்கு அங்கே நான் ஹால்ட். நாளைக்கு ராத்திரி திரும்பிடுவேன்."

'அனி, நானும் சொல்லிச் சொல்லிப் பார்த்துட்டேன். நிச்சயம் ஆன பொண்ணு. கல்யாணத்திற்குப் பிறகு ரிசைன் பண்றதுன்னு தீர்மானிச்சாச்சு. அப்புறம் ஏன் டிலே? இப்பவே பண்ணினா என்னம்மா? பாரு-- நேரங்கெட்ட நேரத்திலே எழுந்து--- அலைஞ்சி.

"போங்க டாட். பறக்கிறலே எவ்வளவு கிக்!"

"ஒக்கே பேபி. கன்சிடர் பண்ணு. இதுவே உன்னோட கடைசி டிரிப்பா இருந்தா நான் சந்தோஷப் படுவேன். ரமேஷ் சோப்ராவும் அப்ஜெக்ட் பண்ணிட் டான். பின்னே என்ன?"

"காலைல போரடிக்காதீங்க டாட். 'வாவ்! மணி அஞ்சே கால் என் ஃபிளைட் ஆறரை மணிக்கு. வர்றேன் டாட்," என்று சின்ன கையடக்கப் பையைத் தோளில் விசிறிக் கொண்டு படிகளில் இறங்கி வாசலுக்கு வந்து தனது மொபெட் வண்டியை ஸ்டார்ட் செய்து புறப்பட்டுப் போனாள் அனிதா.

ஆறு மணிக்கெல்லாம் டூட்டிக்கு ரிப்போர்ட்டிங் கொடுத்து விட்டு சூடாய் டீ சாப்பிட்டுக் கொண்டு, காண்டீனில் இருந்து டயல் சுழற்றினாள்.

"ஹ. லோ. ரமேஷ் சோப்ரா ஹியர்" என்றது கொட்டாவிக் குரல்.

"ஹாய் தூங்குமூஞ்சி. எந்திரி மேன். ரத்திரி பூரா லூட் டியா?"

"ஹாய் அனி நீ இல்லாம எப்படி லூட்டி? என்ன காலையிலேயே போன்? காரெடுத்துட்டு வரட்டா? ஒரு பத்து மணி நேர பிக்னிக் போலாமா?"

"ஏரோட்ராமிலேர்ந்து பேசறேன் ரமேஷ்."

"வாட்? இன்னும் ரிசைன் பண்ணலையா?"

"ம்கூம்."

"என்ன திமிர்?"

''நோ. திமிர் இல்லை. ஆர்வம். கல்யாணத்திற்குப் பிறகுதான் விட்டுடறேன்னு சொல்லிட்டேனே ரமேஷ்.''

''இதயங்களின் பரிமாற்றம்தான் அனிதா உண்மையான கல்யாணம். மற்ற எல்லாமே வெளி உலகத்துக்கான வெறும் சடங்குகள். நீ என்னவள். மை கர்ள். கண்ட பசங்களையும் பார்த்து சிரிக்கிறது அவுங்களுக்கு சர்வ் பண்றது எனக்குப் பிடிக்கலை அனி.''

''ஒக்கே, ஒக்கே. இதுதான் என் லாஸ்ட் ட்ரிப் சரியா?''

''ஷ்யூர்?''

''ஷ்யூர். ஒக்கே. நேரமாச்சு. பிளைட்டுக்குப் போறேன். நாளன்னைக்குப் கூப்பிடறேன். இந்த ட்ரிப் போய்ட்டு வந்து நிச்சயமா ரிசைன் செஞ்சிடறேன். சரிதானே? வச்சிடட்டுமா?''

''பின் குறிப்போட போனை வை,''

''கான்டீன்லேர்ந்து பேசறேன். நிறைய ஸ்டாஃப்ஸ் பார்த்துக்கிட்டு இருக்காங்க. போய்ட்டு வந்து-- போன் மூலமா எதுக்கு; நேரடியாகவே தர்றேன். ஒக்கே?'' என்று ரிசீவரை வைத்து விட்டு. மேக்கப் பெட்டியோடு. சென்னைக்குச் செல்லக் காத்து நிற்கும் போயிங் விமானத்தை நோக்கிப் பறவையின் உற்சாகத்தோடு நடந்தாள் அனிதா.

11

அதே காலை. சென்னை.

ஐ. ஜி. அலுவலகத்தில் சப்--இன்ஸ்பெக்டர் சீதாராமன் டாக்டர் விக்ரமாகக் கண்ணாடி முன் அமர்ந்து மாறிக் கொண்டிருந்தார்.

பிரிட்டோ கவர்னர் மாளிகைக்கு வந்து அங்கிருந்த போலீஸ் அதிகாரிகளுடன் அவசர ஆலோசனைகள் நடத்திக் கொண்டிருக்க. சுனில் பிரபாகர் புரொபஸர் திரிவேதியுடன் கான்பரன்ஸ் ஹாலில் துவங்கியிருந்த டெக்கரேஷன் வேலைகளுக்கு நடுவில் சன்னமாய் பேசிக் கொண்டிருந்தான்.

ஜாகிங் செய்து கொண்டிருந்த ஆஷா, கூட ஓடவந்த தோழியிடம் பேசிக் கொண்டே ஓடினாள்.

''ம். அப்புறம்?''

''ராத்திரி பத்து மணி வரைக்கும் என்னைக் கேள்வி மேல கேள்வி கேட்டு துளைச்சுட்டாங்க. ஆபீஸர் மாத்தி ஆபீஸர் ஒரே கேள்வியை வேற வேற விதத்திலே கேக்கறாரு. கத்தை கத்தையா போட்டோஸ் விபரங்களை வச்சி கம்ப்யூட்டரால சரியா வரைய முடியலை. விட்டுட்டாங்க என்னை ஒருவழியா.''

''நல்ல படம் ஆஷா. இன்னிக்காச்சும் போ.''

''இன்னிக்கா? இன்னிக்கு எனக்கு எவ்வளவு வேலை இருக்கு தெரியுமா? ஏர்போர்ட்ல டாக்டர் விக்ரம் வந்து

இறங்கறப்போ நான் அங்கே இருக்கணும். அப்புறம் ஸ்டாம்ப் கார்டை வச்சி ஹோட்டல் ராயல் மௌண்ட்டன் உள்ளே நுழைஞ்சு ஜேம்ஸ்பாண்ட் வேலையெல்லாம் செய்யப் போறேன் ஒரு அஞ்சி நிமிஷ பேட்டிக்காக.''

மடக்கிக் கட்டின இரட்டைப் பின்னல் தோள்களில். ஆடை-- நனைந்திருந்த வெள்ளைச் சட்டை பளிச்சென்று உள்ளாடையின் ஸ்ட்ரார்ப்பை காட்ட. . . பெண்கள் இருவரும் ஓடிக் கொண்டிருந்தார்கள் -- அந்த ஆறு மணிக் காலையில்.

ராவ் தனது பிஸ்டலைத் திறந்து கரட், கரட் என்று அதன் ஆறு சேம்பர்களிலும் குண்டுகளைத் திணித்து, ஸேஃப்டி காட்சை விடுவிக்காமல் பனியனுக்குள் நடு வயிற்றில் வைத்துக் கொண்டான்.

போன் எடுத்துச் சுழற்றினான்.

''ஹலோ.

''நான்தான் ராவ் பேசறேன். எல்லாம் கரெக்டா போய்கிட்டிருக்கா மிஸ்டர் ராகுல்?''

''பர்ஃபெக்ட். கால் வந்தது. டிக்கெட்ஸ் கன்ஃபர்ம் ஆகிடுச்சி. நீங்க தயார் தானே?''

''மணி ஆறு தானே ஆகுது? ஒன்பதரைக்கு மேலேத்தானே வேலை. ஆனால். . . நான் இப்பவே தயார். ஒரு மணி நேரம் கழிச்சி கூப்பிடுறேன்.'' என்று வைத்துவிட்டு, ராவ் மேஜையின் மேல் இருந்த காக்கி பாண்ட்டையும், காக்கி சட்டையையும் அயர்ன் செய்ய ஆரம்பித்தான்.

12

பம்பாய்.

சயானியில் புறப்பட்ட இரண்டு கார்களும் தாரவி சில்க் மில்களைக் கடந்து பந்த்ரா -- சயான் லின்க் ரோடில் மிதந்து பத்து நிமிடத்தில் நீளமான வெஸ்டர்ன் எக்ஸ் பிரஸ் ஹைவேயில் நுழைந்து துரிதமாக சர்நதா குரூஸ் விமான நிலையத்தை நோக்கி விரைந்தது.

முன்னால் போன காரில் செக்யூரிட்டி அதிகாரிகள்.

பின்னால் வந்ததில் டாக்டர் விக்ரம், அவரின் லேடி செகரட்டரி நஸியா, மற்றும் ஒரு செக்யூரிட்டி ஆபீஸர்.

டாக்டர் விக்ரம் வெள்ளை நிற கதர் குர்தாவில் இருந்தார். நஸியா ஆங்கில நாளிதழைப் படித்துக் கொண்டிருந்தாள். முக்கியமான செய்திகளைச் சுருக்கமாக அவருக்குச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

தனது பைப்பை சுத்தம் செய்து கொண்டே, ''சென்னையைத் தொடர்பு கொண்டு எல்லாம் சரியாக இருக்கிறதா என்று உறுதி செய்து கொள்ளச் சொன்னேனே நஸியா?'' என்றார்.

''அதற்கு அவசியம் இல்லாமல் அங்கிருந்து புரொபஃஸர் திரிவேதி காலையில் அழைத்து எல்லா ஏற்பாடுகளும் சரியாக இருக்கிறது வரவுக்காக விமான நிலையத்தில் காத்திருக்கிறோம் என்று பேசிவிட்டார். தவிர

சென்னை டி. ஐ. ஜி. போலீஸ் அதிகாரி விமான நிலையத்தில் ஐந்து நிமிடம் ஓய்வெடுக்கும் போது பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஒரு சில விபரங்கள் பேச விருப்பம் தெரிவித்துள்ளார்.''

''நல்லது'' என்ற டாகடர் விக்ரம் தனது கண்ணாடியைக் கழற்றி தன் கைக்குட்டையால் துடைத்து மாட்டிக் கொண்டார்.

விமான நிலையத்தை அடைந்து கார்கள் நின்றன.

சாந்தா குரூஸ் விமான நிலயத்தின் வயிற்றில் சென்னைக்குப் புறப்படத் தயாராய் 6.25-க்கு அந்த போயிங் விமானம் சமர்த்தாய் காத்திருந்தது.

அனேகமாக எல்லா பயணிகளும் ஏறி விட்டார்கள். ஒரு கடைசி நேர அவசரப் பயணியைப் படிகளின் உச்சியில் புன்சிரித்து வரவேற்ற அனிதாவை அவன் அவசரப் பார்வையில் தடவி விட்டு, உள்ளே தன் இருக்கை எண்ணைத் தேடினான்.

டிராஃபிக் அஸிஸ்டண்ட் பிரயாணிகள் லிஸ்ட்டைக் கையில் வைத்துக் கொண்டு தலைகளை எண்ணிவிட்டு, இருக்கை மாறி அமர்ந்திருந்தவனை திருத்திவிட்டு, விலகிக் கொண்ட போது, அனிதாவை நோக்கி உபரியாகச் சிரித்தான்.

காக்பிட்டில் காப்டன், கோ-பைலட் மற்றும் என்ஜினியர் தயாராக இருந்தார்கள். விமானப் புறப்பாட்டின் ஆரம்ப காரியங்களை நடத்திக் கொண்டிருக்க.

கோ-பைலட் மைக்ரபோன் வழியா கண்ட்ரோல்டவரில் நகர்வதற்கான கிளியரன்ஸ் கேட்டுக் கொண்டிருந்தான்.

''எனி வி. ஐ பி இன் த லிஸ்ட்?'' என்றார் என்ஜினியர்.

''ஆமாம். ஒரு சயன்டிஸ்ட்.'' என்றான் கோ-பைலட்.

''மொத்தம் எத்தனை பேர்?''

''நூற்றிப் பதினேழு.''

கண்ட்ரோல் டவரிலிருந்து கிளியரன்ஸ் கிடைத்ததும்-- காப்டன் கனைத்துக் கொண்டார், ''டிஸ் எங்கேஜ் தி ஆட்டோ பைலட்.''

''டன் சார்.

''ஓபன் த ஆக்ஸிஜன் வால்வ்.''

''டன் சார்.''

விமானத்திற்கு எதிராக வெள்ளை உடையில் டிராஃபிக் என்ஜினியர் இதுவரை கீழ் நோக்கி விரலைக் காட்டிக் கொண்டிருந்துவிட்டு இப்போது விரலை உயர்த்தினார்.

இரண்டு என்ஜின்களின் உறுமல்களோடு. விமானம் ரன்வேயை நோக்கி அபாரப் பசியோடு விரையத் துவங்கியது. ரன்வே முழுக்க சாப்பிட்டு முடித்து, சுகமாக மிதக்கத் தொடங்கி, சற்றைக்கெல்லாம் மேகங்களைத் தொட்டுத் தடவிக் கொண்டு, இருபத்தெட்டாயிரம் அடி உயரத்தில் சீராய் மிதக்கத் துவங்கியது இதுவரை எட்டாயிரத்து முன்னூறு மணி நேரம் பறந்திருக்கிற அந்த போயிங் 737 விமானம்.

டி.ஐ.ஜி விமான நிலையத்தைத் தொடர்பு கொண்டார்.

மேஜைக்கு எதிரில் விக்ரமான சீதாராமனும்-- சுனில் பிரபாகரும்.

'ஓ. தாங்க் யு. இதே கரெக்ட் ஷெட்யூலில் விமானம் வந்தால் மெட்ராஸ் விமான நிலையத்திற்கு எத்தனை மணிக்கு எதிர் பார்க்கிறோம்?''

''ஒன்பது--முப்பத்தைந்திலிருந்து ஒன்பது நாற்பதுக்குள் எதிர் பார்க்கிறோம்.''

''நன்றி'' என்று போனை வைத்துவிட்டு, ''நமக்கு நிறைய நேரம் இருக்கிறது. இங்கிருந்து எட்டரை மணிக்குப் புறப்பட்டால் போதும்,'' என்றார்.

சுனில் பிரபாகர் எழுந்து கொண்டான், ''ஒக்கே சார். ஆனால் நான் சற்று முன்னதாகவே அங்கே இருக்க விரும்புகிறேன். ஒரு ஃபைனல் மேற்பார்வைக்காக'' என்று புறப்பட்டான்.

13

'உங்கள் பெல்ட்டுகளைக் கழற்றிக் கொள்ளலாம், என்று சிகப்பாய்ச் செய்தி வர.

பயணிகள் கழற்றிக் கொண்டனர்.

அனிதா ட்ரேயில் பேப்பர் பிளேட்டுகளில் டோஃபிகளும், சின்னச் சின்னக் கொறிப்புப் பதார்த்தங்களின் பாக்கெட்டுகளும் ஏந்தி இருக்கை இருக்கையாக வந்து கொண்டிருந்தாள்.

டாக்டர் தனது சீட்டில் சௌகரியமாகச் சாய்ந்து கொண்டு முன் சீட்டின் முதுகில் ஒளித்திருந்த எழுதுகிற வசதிக்கான நீட்டலை இழுத்து. கோட் பாக்கெட்டில் இருந்து மெமோ பேட் போல எடுத்து பேனாவால் முக்கோணம்--சதுரம் என்று கிறுக்க ஆரம்பித்தார்.

அவரைக் கவனித்த நஸியா சிந்தனையில் இருக்கிறார் என்பதை உணர்ந்து முட்டைக் கண்ணாடி வழியாக எல்லையற்ற நீலவானத்தைப் பார்த்தாள்.

அவர்களின் இருக்கைக்கு ஏழு வரிசை பின்னால் இரண்டு பேர் ஜோடி இருக்கைகளில் அவர்கள் அமர்ந்திருந்தார்கள்.

கிரண்--அலெக்ஸ்.

அலெக்ஸ் சாக்லேட்டின் ஆடையைக் கழற்றி வாயில் போட்டுக் கொண்டான். கிரண் முன் சீட்டின் முதுகில் செருகியிருந்த அட்டையை எடுத்து விரித்துக் கொண்டு.

விமானத்தில் பறக்கும்போது ஆபத்து காலங்களில் பயணிகள் எப்படிச் செயல்பட வேண்டும் என்கிற விளக்கப் படங்களுடன் கூடிய குறிப்புகளை அசுவாரசியமாக படித்துக் கொண்டிருந்தான்.

அலெக்ஸ் அவன் காது பக்கமாக சாய்ந்தான்.

''டாக்டர் விக்ரத்தோட அந்த லேடி செகரட்டரி மட்டும் தான் ஏறியிருக்கா. வேற எந்த செக்யூரிட்டி நபரும் வரலை கவனிச்சியா?'' என்றான் கிசுகிசுப்பாய்.

''கவனிச்சேன். ஆனா பயணிகளோட பயணியா கலந்து யாராவது வரலாம். எத்தனை பேர் வந்தாலும் நமக்கு கவலையில்லை. நம்ம திட்டம் துல்லியமானது அலெக்ஸ்.''

''கிரண் யு ஆர் கிரேட். நம்ம திட்டத்துக்கு நீ தேர்ந்தெடுத்த பகுதி யாராலயும் சிந்திக்க முடியாதது. போலீஸ்சுக்கு நாம கொடுத்த டைவர்ஷன் ரொம்ப சரியா வேலை செஞ்சியிருக்கு. நேத்து ராவ் கொடுத்த தகவல் படி மெட்ராஸ்ல போலீஸோட பாதுகாப்பு ஏற்பாடு ரொம்ப ரொம்ப ஸ்ட்ராங் ஆக்கப்பட்டிருக்காம். எந்த அசம்பா விதத்தையும் போலீஸ் மெட்ராஸ்லதான் எதிர் பார்க்குது.''

''நாம நம்ம திட்டத்தை அதனால்தான் ஆகாயத்திலே--அந்தரத்திலே ஆரம்பிக்கிறோம். சாந்தா குரூஸ் விமான நிலையத்திலே வழியனுப்பற வரைக்கும் டாக்டருக்கு பிரமாதமான பாதுகாப்பு. மெட்ராஸ்ல இறங்கினதிலேர்ந்து பிரமாதமான பாதுகாப்பு. ஆனா நடுவிலே ஆகாயத்திலே மிதக்கறப்போ? இப்போ என்ன பாதுகாப்பு அவருக்கு? இந்தக் கட்டத்தை அவங்க அதிக கவனத்திலே வைக்கலை. நாம பயன்படுத்தியிருக்கிறோம்.''

''கிரண், அப்படி சொல்ல முடியாது. பம்பாய்ல ஒவ்வெரு பயணியையும் கொஞ்சம் ஆழமாத்தான் செக் பண்ணிணாங்க. மெட்டல் டிடெக்டரை ஏமாத்தற வித்தை

நமக்குத் தெரியும்னு அவங்களுக்குத் தெரியதே. முக்கியமானதை விட்டுட்டான். ஹாண்ட் லெதர் பேகைத் திறந்து எதுக்கு இவ்வளவு பெரிய பிளாஸ்த்திரின்னு கேட்டான். எங்க கம்பெனி புராடெக்ட் சாம்பிள்ன்னு சொன்னதும் வேகமா தலையாட்டிட்டான் மடையன்.''

''சரி, நாம குசுகுசுப்பாய் பேச வேணாம். அமைதியா இரு.''

''ராவ் தயாரா இருப்பானா? சோம்பேறி அவன்.''

''ராவ் நம்ம பிளான்படி. நிச்சயமா சொன்னபடி இருப்பான்.''

''திட்டத்தோட மிச்சப்பகுதி சரியா நடக்கணுமேன்னு எனக்கு கவலையா இருக்கு.''

''கரெக்டா நடக்கும்.''

''நாம சொல்லப்போற கதையை அவங்க நம்புவாங்களா?''

''நம்பியாகணும். நம்ப வைக்கத்தான் ஒரு உயிரை உருவி உடலை அவங்களுக்கு காட்டப் போறோம். தவிர... எவ்வளவு உண்மையான தகவல்களை சேகரிச்சிருக்கேன் தெரியுமா?''

''வயத்தைக் கலக்குது கிரண். இது எனக்குப் புதுசு.''

''எதுக்குமே ஒரு ஆரம்பம் வேணாமா?''

அவர்கள் அமைதியானார்கள்.

மணி பார்த்தான் கிரண், 8.00.

இன்னும் ஒன்றரை மணி நேரம் பயணம் இருக்கிறது.

சென்னை விமான நிலையத்தில் இறங்கினதும்.

கிரண் பரபரப்பாய்க் காத்திருந்தான்.

அந்த விமானம் இப்போது ஆட்டோ பைலட்டில் சீராக இயங்கிக் கொண்டிருக்க. என்ஜினியர் இன்டர் காமில் அனிதாவை தவிர மற்றொரு ஹோஸ்டஸை அழைத்துக் கேக்கும் ஜூசும் வரவழைத்துச் சாப்பிட்டார்.

''வி. ஐ. பி. என்ன செய்கிறார்?''

''என்ஜயிங் த ட்ரிப். பேப்பர்ல கோடு கோடா கிறுக்கறார்.''

''இன்னிக்கு ட்ரிப்பில லேடீஸ் கம்மி. இல்லையா?''

''ஆமாம். ஏழு பேர் தான் இருக்காங்க.''

காலி கப்பைத் திருப்பித் தந்து அவளை அனுப்பி விட்டு காக்பிட் கதவையும் சாத்தினார் என்ஜினியர்.

கோ-பைலட் தன் எதிரே இருந்த எண்ணற்ற மீட்டர்களில் நடனமாடும் முள்களையும் கண் சிமிட்டும் வர்ண விளக்குகளையும் அக்கறையாகப் பார்துக் கொண்டே. . ''நாம புறப்படறப்போ மெட்ராஸ்ல லேசான ஃபாக் இருந்ததா வெதர் ரிப்போர்ட்,'' என்றார் காப்டன்.

போர்டில் இருந்த எலெக்ட்ரானிக் கெடிகாரம் 901 என்றது.

''இன்னும் அரை மணி நேரமிருக்கு கிரண் நாம செயல்பட'' என்றான் அலெக்ஸ் பதட்டமாக நகத்தைக் கடித்துக் கொண்டு.

''அலெக்ஸ், நீ முதல்ல பதட்டப்படாம இரு. முழுக்க நான் ஹாண்டல் பண்றேன். நீ எனக்கு சப்போர்ட்டிங்கா இரு--போதும். மைக்ரபோன் பொறுப்பை நீ எடுத்துக்கறே. நான் சொல்ற தகவலை அப்பப்போ சொல்லு-- போதும். நீ ஃப்ளையிங் கிளப்பிலே சேர்ந்து குட்டி விமானம் ஒட்டக் கத்துக்கிட்டது இப்போ நம்ம திட்டத்துக்கு ரொம்ப உதவியா இருக்கு.''

''கிரண்?''

''ம்?''

''நாம யாரைக் கொலை செய்யப் போறோம்?''

''இன்னும் தீர்மானமாகலை.''

கிரண் தன் தலைக்கு மேல் இருந்த லக்கேஜ் கேரியரிலிருந்து தனது சிறிய சூட்கேஸை எடுத்துத் தனது மேல் வைத்துக் கொள்ள. ஐந்து நிமிடம் இடைவெளி விட்டு அலெக்சும் அவ்வாறு செய்தான்.

இவர்களுக்குப் பின்னால் தள்ளி நான்கு பேர் ரக்கச் சிரித்துப் பேசிக் கொண்டிருக்க. ஒரு குண்டு மனிதரி தடுமாற்றத்துடன் நடந்து டாய்லட் பகுதிக்குப் போய் வர... ஒரு பெண், ஹோஸ்டஸை அழைத்து தலைவலிக்கு மாத்திரை கேட்டு-- அவள் முதலுதவி சேம்பரிலிருந்து கொண்டு வந்ததைக் கொடுக்க. அனிதா காலியான பேப்பர் பிளேட்டுகளை நளினமாகச் சேகரித்துக் கொண்டிருக்க.

விமானம் ஒரு ராட்சச அம்பாய்ச் சென்னையை நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்தது.

சென்னை விமான நிலையம்.

பிரத்தியேகமான வாயிலில் அரசாங்கத்துக்குச் சொந்தமான புல்லட் புரூஃப் கார் தயாராக, பளபளப்பாகக் காத்திருந்தது. இரும்பு போஸ்ட் நடப்பட்டு, சங்கிலிகள் பிணைக்கப்பட்டு, ஒரு தனிப்பாதை அந்த கார் வரைக்கும் அமைக்கப்பட்டிருந்தது. அங்கங்கே டெலிவிஷன் கேமிராக்களும்--வீடியோ காமிராக்களும் தாங்கிய தோள்களும் காமிரா அணிந்த கழுத்துக்களுமாய் எல்லோரும் அடையாள கார்டுகளை மார்பில் குத்தியிருந்தார்கள்.

ரெஸ்ட் ரூமில் உள் பகுதியில் ஒரு தற்காலிக போலீஸ் கண்ட்ரோல் செட்டப் அமைக்கப்பட்டு. ஒரு சி. ஐ. டி. அதிகாரி எதிரே பொறுத்தப்பட்டிருந்த டெலிவிஷனில் லைவ் டெலிகாஸ்ட்டாக விமான நிலையத்தில் ஒவ்வொரு

பகுதியையும்-- மக்களையும் கவனித்துக் கொண்டிருந்தார், தலையில் மைக்ரபோன் அணிந்து, வயர்லெஸ் மூலமாக சின்னச் சின்னக் கட்டளைகள் தந்து கொண்டு--பெற்றுக் கொண்டும் இருந்தார்.

தனி நாற்காலியில் ஐ. ஜி அமர்ந்திருக்க. . . டூப்ளிகேட் விக்ரம் சற்றுத் தள்ளி நின்றுகொண்டிருந்தார்.

கண்ணாடித் தடுப்புகளுக்கு இந்தப் புறம் கைகளை பின்புறம் கட்டிக்கொண்டு சுனில் பிரபாகர் மக்கள் கூட் டத்திற்கு மத்தியில் உலவிக் கொண்டிருந்தார்.

காமிராக்களுக்கும் நிருபர்களுக்கும் ஒதுக்கப்பட்ட பகுதியில் ஒரு அதிகாரி அனைவரின் அடையாள அட் டைகளையும் சரி பார்த்துக் கொண்டிருந்தார். அந்தக் கூட் டத்தில் ஆஷாவும் உற்சாகமாக காத்திருந்தாள் காமிராவுடன்.

இன்னொரு பகுதியில் பிரமாண்டமான மாலை ஒரு குச்சியில் மாட்டப்பட்டுப் காத்திருக்க. புரொஃபஸர் திரிவேதி மற்ற இரண்டு பேர்களுடன் பேசிக் கொண்டிருந்தார்.

''அரசாங்கம் சார்பா டி. ஜி. பி,யும் -- நிதியமைச்சரும் டாக்டர் விக்ரமை வரவேற்கறதுக்காக வந்துகிட் டிருக்காங்க'' என்றார் திரிவேதி மற்றவர்களிடம்.

ரெஸ்ட் ரூமுக்குள் இருந்த ஐ. ஜி. மணிக்கட்டைப் பார்த்துக் கொண்டு. அந்த ஸ்பெஷல் கண்ட்ரோல் ஆபீஸரை, ''ஏர்ப்போர்ட் கண்ட்ரோலை தொடர்பு கொண்டு, இன்னும் அஞ்சி நிமிஷத்திலே சிக்கலில்லாம விமானம் லேண்ட் ஆகுதான்னு கேட்டுகுங்க'' என்றார்.

''யெஸ் சார்'' என்று அவர் உடனே செயல்பட்டார்.

விமானம் இப்பொழுது பதினைந்தாயிரம் அடி உயரத்தில் பறந்துக் கொண்டிருக்க. கோ-பைலட்

சென்னை விமான நிலையத்தின் கண்ட்ரோல் டவரைத் தொடர்பு கொண்டார். ரன்வேயைத் தொடுவதற்கான அனுமதியைக் கேட்டான்.

கிரண் அலெக்ஸ் பக்கம் திரும்பினான்.

''பி ரெடி அலெக்ஸ். இன்னும் ஒரு அல்லது ரெண்டு நிமிஷத்திலே விமானம் மெட்ராஸ் ரன்வேயைத் தொடப்போகுது. அதோட சக்கரம் ரன்வேயை தொட்டதுமே நாம எழுந்திருக்கிறோம்.''

''கிரண், ஐ யாம் லிட்டில் பிட் நெர்வஸ்.''

''ஸ்டுப்பிட்'' என்று திட்டிவிட்டுப் பாண்ட் பைக்குள் கையை நுழைத்துப் பிஸ்டலைத் தொட்டு உணர்ந்தான் கிரண்.

விமானத்தின் கேப்டன் பேசினார்.

''அன்புக்குரிய பிரயாணிகளே. இப்போது இந்த விமானம் சென்னை விமான நிலையத்தில் இறங்க இருக்கிறது. இந்தப் பயணத்தை நீங்கள் அனுபவித்திருப்பீர்கள் என்று நம்புகிறோம். நன்றி.''

எல்லா இருக்கைகளின் எதிரிலும் 'உங்கள் பெல்ட்டுகளை அணிந்து கொள்ளுங்கள் தயவு செய்து' என்று ஆங்கில எழுத்துக்கள் சொல்ல. உலோகத்தின் சத்தங்கள் ஒலிக்க. பிரயாணிகள் எல்லோரும் அணிந்து கொண்டார்கள்.

--கிரண், அலெக்ஸைத் தவிர.

விமான நிலையத்தில்.

டி. ஜி. பி. வந்து காத்திருந்தார்.

நிதியமைச்சர்--சந்தன மாலையை உதவியாளர் வைத்திருக்க. வந்து நிழலில் அமர்ந்து காத்திருந்தார்.

14

குறிப்பிட்ட அந்த ரன்வேயின் முடிவில் விமானம் வந்து நிற்கப் போகிற இடத்திற்குச் சமீபத்தில் விமானத்தின் படிக்கெட்டுகளைத் தள்ளிச் சென்று பொருத்துவதற்காக ஊழியர்கள் காத்திருந்தார்கள். விமானத்தின் ரன்வே ஓட்டத்தில் அதை ரெகுலேட் செய்வதற்காக டேபிள் டென்னிஸ் போன்ற வர்ண சிக்னல் பேட்டைக் கையில் தாங்கித் தயாராய் இருந்தார் டிராபிக் என்ஜினியர்.

விமானத்தின் உள்ளே காக்பிட்டிற்கு அருகில் பயணிகளை வழியனுப்பத் தயாராய் நின்று கொண்டிருந்தாள் அனிதா. மற்றொரு ஹோஸ்டஸ் வேறு ஒரு பகுதியில் இருக்க. காக்பிட்டுக்குள் கேப்டன்--கோ--பைலட்--இன்ஜினியர் மூவரும் விமானத்தை இறக்குகிற பணியில் தீவிரமாக இருக்க.

சென்னையின் கட்டிடங்கள். எறும்பு எறும்பாய்க் கார்கள், இப்பொழுது மூட்டைப் பூச்சி சைசாகத் தெரிந்து... வண்டு சைசில் தெரிந்து. கரப்பான் பூச்சி சைசில் தெரிந்து. குறுமுயல் சைசில் தெரிந்து. கரடி சைசில் தெரிந்து.

விமானம் அதற்கு ஒதுக்கப்பட்ட ரன்வேயின் முனையில் தனது சக்கரங்களைக் கொண்டு முத்தமிட்ட வினாடி---

சட்டென்று எழுந்தார்கள் கிரணும்--அலெக்சும். சட்டென்று ஆளுக்கொரு முகமூடியை அணிந்தார்கள். இருவர்

கையிலும் பிஸ்டல்கள். வேகமாய் விரைந்து முன் பகுதியில் காக்பிட் மற்றும் இறங்குகிற வாயிலுக்கு அருகில் கிட்டத்தட்ட ஓடி நின்று--கிரண் அருகில் நின்றிருந்த அனிதாவை வளைத்துப் பிடித்து அவள் நெற்றியில் பிஸ்டல் முனையை வைத்து--

எல்லாம் வினாடிகளில் நடக்க.

பாதிப் பயணிகள் இறங்கப் போகிற அவசரத்தில் இவர்களைக் கவனிக்கக் கூட இல்லை. பின்னர் கவனித்து அனைவரும் உறைந்தனர்.

''வாட் ஈஸ் திஸ்?'' என்றார் டாக்டர் விக்ரம்.

''ஹேய்! என்ன?'' என்று வியர்த்தாள் அனிதா.

மறுகோடியில் இருந்த மற்றொரு ஹோஸ்டஸ் இவர்களை நோக்கி நகர முற்பட்டபோது.

''டோண்ட் மூவ்! சுடுவேன்'' என்று கத்தினான் அலெக்ஸ்.

அப்படியே பிரமிப்பில் நின்றாள் அவள். பயணிகள் யாவரும் பெல்ட்டுகள் இன்னும் கழற்றிக் கொள்ளாத நிலையில் பரபரப்பாகப் பயந்தார்கள். சத்தமிட்டார்கள்.

''லுக்!'' என்று கத்தினான், ''சைலன்ஸ். நான் சொல்றதைக் கேளுங்க'' என்று கிரண் கத்தியதும் அமைதியாகி அவனின் பேச்சைக் கேட்கக் காத்திருந்தார்கள். நிதானமாக ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்தான்.

விமானம் ரன்வேயில் நிதானமாக, கொஞ்சம் கொஞ்சமாக வேகம் குறைத்துக் கொண்டு ஓடிக் கொண்டிருக்க.

''உங்கள்ல யார் சீட்டை விட்டு எழுந்தாலும் தயங்காம நாங்க ஷூட் பண்ணுவோம். இப்போ இந்த விமானமும்--நீங்க அத்தனை பேரும் எங்க பொறுப்பில்

இருக்கிங்க. உங்களைப் பணயமா வச்சி அரசாங்கத்துக்கிட்டே சில கோரிக்கைகளை நாங்க நிறைவேற்றியாகணும். அதுவரைக்கும் நீங்க எங்ககூட ஒத்துழைக்கணும். யாரும் சீட் பெல்ட்டை கழற்றக் கூடாது. அலெக்ஸ் லுக் ஆஃப்டர் தெம்'' என்றான் கிரண்.

கண்களும், சுவாசத்திற்காக மூக்கருகே துவாரங்கள் அருகிலும் ஒட்டைகள் உள்ள மற்றபடி முகம் முழுக்க மறைக்கும் வுல்லனில் பின்னிய முகமூடிகளை அவர்கள் அணிந்திருந்தார்கள்.

அலெக்ஸ் நீட்டிய துப்பாக்கியுடன் உறுதியாக நின்றான்.

பயணிகள் கப்சிப்.

டாக்டர் விக்ரம் தன் செகரெட்டரி பக்கம் சாய்ந்து, ''சம்திங் ராங்'' என்று முணுமுணுத்தார். நான் அபாயத்தை உணர்கிறேன்.

கிரண் முதுகுக்குப் பின்னால் கை முறுக்கப்பட்ட அனிதாவை முன்னால் முட்டித்தள்ளினான். ''கமான் காக்பிட்டின் கதவைத் திறக்கச் சொல்--இண்ட்டர்காம் மூலம்.''

அனிதாவின் விழிகள் நீர் துப்ப. தயங்கிக் கொண்டிருந்தவளின் முதுகில் நச்சென்றுகுத்தினான் கிரண்.''ம்''.

இண்ட்டர்காமில், ''காப்டன். கதவைத் திறங்க'' என்று அழைத்து. . . கதவு திறக்கப்பட்டதுமே சடாரென்று அவளை முன்னால் வைத்துப்பிடித்துக் கொண்டு உள்ளே நுழைந்தான் கிரண்.

அசிரத்தையாய் திரும்பின மூவரும் திடுக்கிட்டனர்.

என்ஜினியர் வேகமாக தன் சீட்டை விட்டு எழ முயற்சிக்க.

''நோ, உட்கார். இது உண்மைத் துப்பாக்கி. சுடுவேன்'' என்று கிரண் சொன்னதும் தயங்கி அமர்ந்தான்

கோ-பைலட் மைக்ரபோனில் அவசரமாக செய்தி சொல்ல வாயெடுத்த போது நச்சென்று அவன் கழுத்தில் ஒரு கையால் ஆழமாக வெட்டினான் கிரண். அப்படியே போர்டு மேல் கவிழ்ந்து விழுந்தான் அவன்.

கிரண் சிரித்துக் கொண்டே தனது பனியனுக்குள் கைவிட்டு, செண்ட் பாட்டில் போல இருந்ததை எடுத்து. ஒரு கையால் துப்பாக்கியைப் பிடித்து, அனிதாவை வளைத்துக் கொண்டே காப்டனை நெருங்கி. அவர் ''ஓ. நோ. நோ. என்ன செய்யறே?'' என்பதற்குள் அவர் மூக்கில் அதை ஸ்பிரே செய்ய. கெட்ட நச்சுக் காற்றைச் சுவாசித்து உடன் மயங்கினார் காப்டன். என்ஜினியர் கொஞ்சம் எதிர்ப்புக் காட்ட. . . காலை உயர்த்தி அவன் நெஞ்சில் உதைத்து கீழே தள்ளி மூக்கில் ஸ்பிரே செய்து அவனையும் மயங்க வைத்து. . . போர்டில் கவிழ்ந்து ஏற்கனவே மயங்கி இருந்த கோ-பைலட்டின் மூக்குக்கும் ஸ்பிரே செய்தான்.

ஹெட் போனில் கண்ட்ரோல் டவர் கத்திக் கொண்டிருந்தது. ''பிளைட் நம்பர் 514, என்ன நடக்கிறது அங்கே? பேசுங்கள். பேசுங்கள்.''

ரன்வே இறுதியில் வந்து நின்றுவிட்ட விமானத்தின் மூக்கின் ஜன்னல் வழியாக ஒரு முகமூடித் தலையைப் பார்த்துவிட்ட டிராஃபிக் என்ஜினியர் கண்ட்ரோல் டவருக்குத் தகவல் சொல்ல, அருகாமை இண்டர்னல் டெலிபோனுக்கு ஓட ஆரம்பித்தான்.

விமானத்தில் படிகளைப் பொருத்துவதற்காகக் காத்திருந்த ஊழியர்கள் விமானத்தின் கதவு இன்னும் திறக்க வில்லையே என்று காத்திருக்க.

கிரண் காக்பிட்டை விட்டு மறுபடி அனிதாவோடு பாஸன்ஜர் பகுதிக்கு வந்து, "போ அலெக்ஸ்--உள்ளே எதிர்ப்பு இல்லை. கண்ட்ரோல் டவருடன் பேசு. இவர்களை நான் கவனித்துக் கொள்கிறேன்," என்றான்.

அலெக்ஸ் காக்பிட்டிற்குள் நுழைந்து கோ-பைலட்டின் ஹெட்போனை எடுத்து அணிந்து கொண்டு பேசினான் நிதானமாக.

"கண்ட்ரோல் டவரா? பிளைட் நம்பர் 514-ல் இருந்து பேசுகிறேன். கேட்கிறதா?"

"யெஸ், திஸ் ஈஸ் கண்ட்ரோல் டவர். பேசுவது யார்? என்ன அங்கே ரகளை? என்ன நடக்கிறது அங்கே?"

"மிஸ்டர், இங்கே உங்கள் கேப்டன், கோ-பைலட், என்ஜினியர் மூவருமே மயங்கிக் கிடக்கிறார்கள். அதனால் விமானத்தை நாங்கள் கைப்பற்றியுள்ளோம்."

"கைப்பற்றி? வாட் நான்சென்ஸ்? யார் நீ?"

"யெஸ். கைப்பற்றியிருக்கிறோம் துப்பாக்கி முனையில், உள்ளே நூற்றி ஏழு பயணிகள் மற்றும் இரண்டு ஹோஸ்டஸையும் எங்கள் நண்பர்கள் துப்பாக்கி முனையில் உட்கார வைத்திருக்கிறார்கள்."

"ஓ காட்! ஹூ ஆர் யு?"

"சொல்கிறோம். விமான நிலைய சீஃப் அதிகாரியிடம் சொல்கிறோம். அவரைப் பேசச் சொல்லுங்கள்," என்று காத்திருந்தான் அலெக்ஸ்."

இங்கே கிரணின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த அனிதா--துப்பாக்கி பிடித்த அவனின் கையைக் கழிக்க முயன்றபோது--ஜாக்கிரதையாக கையை எடுத்துக் கொண்டு, "நோ பேபி. விளையாட்டு வேணாம். உன் பேரென்ன?" என்றான் கிரண்.

''அ. அனிதா,'' என்றாள்.

''ஐ சீ'' என்று பிரயாணிகளைப் பார்த்து, ''உங்கள்ல யாருமே சினிமாவில் தவிர நேர்ல ஒரு கொலையை--ஒரு துப்பாக்கிச் சூட்டை பார்த்திருக்க மாட்டிங்கன்னு நினைக்ககிறேன். அந்த எக்ஸிபிஷனை உங்களுக்கு இப்போ காமிக்கிறேன்'' என்று சட்டென்று அனிதாவைக் கீழே தள்ளி விழவைத்து அவள் மார்ப்புக்கு நேராகப் பிஸ்டலை நீட்டினான்.

''ஓ! நோ. நோ. என்னைச் சுட்டுடாதே. என்றாள் அனிதா மிரட்சியாக.

கிரண் சரியாக அவளின் இதயப் பகுதியில் சுட்டான்.

''அம்மா'' என்று அலறிக்கொண்டு. . . பவுண்டனைப் போல மார்பிலிருந்து ரத்தத்தைப் பீச்சியடித்துக் கொண்டு அனிதா.

ரமேஷ் சோப்ரா அர்ஜுன் ஆத்ரேயிடம் போனில் பேசிக் கொண்டிருந்தான்.

''இல்லை அங்கிள், அவளுக்கு புத்தி வந்துடிச்சி. ஏரோட்ராமிலேர்ந்து என்கூட பேசினா. இந்த டிரிப்பைக் கடைசி டிரிப்பா வச்சிக்கிறேன்னு சொன்னா. போயிட்டு வந்து ரிசைன் பண்ணிடுவா நிச்சயமா''

அனிதா சரிந்து மூடப்படாத விழிகளோடு இறந்தாள்.

அத்தனை பிரயாணிகளும் ஆணியடித்தாற் போல அமர்ந்திருக்க. . . ஒன்றிரண்டு பேர் மயக்கம் போட்டார்கள். டாக்டர் விக்ரம் தன் மார்பைப் பிடித்துக்கொண்டார். நஸியா தவித்தாள்.

அலெக்ஸ் விமான நிலைய உயர் அதிகாரியிடம் பேசினான், ஆங்கிலத்தில்.

''ஹலோசார், வெரி பாட் மார்னிங் டு யு. இப்போ உங்களுக்கு ஒரு துப்பாக்கி வெடிச்ச சத்தம் கேட்டிருக்குமே... பயணிகள்ல யாரோ எதிர்ப்பு காட்டினதாலே என் நண்பர்கள்ல ஒருவன் சுட்டுட்டான். நான் சொல்றதை குறுக்கே பேசாமல் கேளுங்கள். நாங்க ஆப்பிரிக்கா நாட்டு சிடிசன்ஸ். இங்கே இந்தியாவிலே தங்கி படிச்சிக்கிட்டிருக்கோம். அங்கே நாட்ல ஒரு தனி பகுதியை தனி நாடா பிரிக்கச் சொல்லி நடக்கிற போராட்டத்திலே தீவிரமா இருக்கிற இயக்கத்திலே நாங்க உறுப்பினர்கள். எங்க இயக்கத்தைச் சார்ந்த பத்னேழு பேரை அரசாங்கம் கைது செஞ்சி எங்க இயக்க நடவடிக்கைகளைப் பற்றி--கொடுமைப் படுத்தி விசாரிக்கிறாங்க. எங்க நாட்டின் தூதரகத்துக்கு தகவல் தந்து அவங்க மூலமா எங்க இயக்க உறுப்பினர்கள் அந்தப் பதினேழு பேரையும் அரசாங்கம் விடுதலை செய்ய ஏற்பாடு செய்யணும். எங்க கோரிக்கை நிறைவேறுகிற வரைக்கும் இந்த விமானத்தையும்--அத்தனை பிரயாணிகளையும் நாங்க விடுவிக்க மாட்டோம். புரிஞ்சுதா?''

''நோ. திஸ் ஈஸ் பேட். உங்க நாட்டு பிரச்சனைக்காக சம்மந்தமில்லாம இந்தியாவிலே அதுவும் ஒரு பாஸஞ்சர் விமானத்தை வச்சிகிட்டு மிரட்றது தப்பு. உங்க நாட்டு தூதரகமும் இங்கே இல்லை; டெல்லியிலே இருக்கு. நீங்க விமானத்தை விடுவிச்சி சரணடைஞ்சிடறது நல்லது.''

''நோ சார். நடக்காத காரியம். எங்களுக்கு சௌகரியப்பட்ட விமானத்தைத்தான் நாங்க கடத்த முடியும். விமானத்தை சுத்தி போலீஸோ--விமான செக்யூரீட்டி மனிதர்களோ நெருங்கினா. விமானமே நொறுங்கிடும் அத்தனை பேரோடவும், மிரட்டல் இல்லை இது. செயலுக்குப் பயந்தவங்க இல்லை நாங்க. கொஞ்ச

நேரத்திலே எங்க தீவிரத்தோட சாம்பிளைக் காண்பிக்கிறோம். இப்போ முதல் காரியமா விமானத்தை சுத்தி நிக்கிற ஊழியர்களை--ஸ்டெப்ஸ் தள்ள தயாரா இருக்கிறவங்களை உடனே விலகச் சொல்லுங்க. லைன்லயே இருங்க. கொஞ்சம் நிமிஷத்திலே மறுபடி பேசறேன்.''

''ஹலோ. நீங்க எத்தனை பேர்?''

''அஞ்சு பேர்'' என்று ஹெட்போனைக் கழற்றி வைத்து விட்டுக் காக்பிட்டை விட்டு வெளியேறிக் கிரணுடன் இணைந்து தரையில் கிடந்த அனிதாவைப் பார்த்து... ''ஓ... ஹோஸ்டஸைப் பலி கொடுத்திருக்கியா?'' என்றான் லேசான நடுக்கத்துடன்.

''நீ போய் விமானத்தோட கதவைத் திற, இவளோட உடலை வெளியே தள்ளணும். தள்ளினதும் மறுபடி மூடிடலாம்.''

''ஓக்கே'' என்று மறுபடி காக்பிட்டுக்குள் நுழைந்தான்.

விமான நிலையத்தின் சீஃப் அதிகாரியின் அறையில் டி. ஜி. பி., ஐ. ஜி., அமைச்சர், சுனில், பிரிட்டோ அனைவரும் பதட்டமாய்ச் சூழ்ந்திருந்தார்கள்.

போனில் பேசிவிட்டு வைத்த டி. ஐ. ஜி. அவர்களிடம் அவசரமாகப் பேசினார். வாஸ்தவம்தானாம். அந்த நாட்டிலே அப்படி ஒரு பிரிவினை இயக்கம் செயல் பட்டுக்கிட்டிருக்கு. அவன் சொன்ன மாதிரி பதினேழு பேரைப் போன வாரம் கைது செஞ்சியிருக்காங்க. அந்த நாட்டோட ஸ்டூண்ட்ஸ் நிறைய பேர் நம் நாட்டிலே படிக்கிறதும் உண்மை. டெல்லி எஜுகேஷன் டிபார்ட்மெண்ட்டுக்குத் தகவல் சொல்லி அந்த நாட்டு மாணவர்களை லிஸ்ட் பண்ணச் சொல்லிட்டேன். இந்தியா பூராஅவங்க அத்தனை

பேரையும் செக் பண்ண சொல்லியாச்சு, ரொம்ப நேரமாகிற வேலை இது.''

ஐ. ஜி. தொடர்ந்தார்.

''அவங்க அந்த நாட்டின் சிடிசன்ஸ்ங்கிறதிலேயோ அவங்க தீவிரவாதிகள்ங்கிறதிலேயோ எனக்குச் சந்தேகம் இல்லை. ஹோஸ்டஸைக் கொண்ணு கதவைத் திறந்து பாடியைக் கீழே தள்ளிட்டு மறுபடி மூடிக்கிட்டாங்க. முகமூடி அணிந்திருந்தாங்க. துப்பாக்கிகள் வச்சிருக்காங்க. அவங்க சொல்ற மாதிரி வெடிகுண்டுகள் வச்சிருக்கவும் வாய்ப்பு இருக்கு. மறுபடி அவங்களாவே தொடர்புகொள்ற வரைக்கும் உத்தரவு சொல்ற வரைக்கும் நாம் யாரும் கிட்டே வரக்கூடாதுன்னு அவங்க சொல்லியிருக்கின்ற எச்சரிக்கையை விளையாட்டா எடுத்துக்க நான் தயாரா இல்லை. அதிரடி நடவடிக்கை மாதிரி விமானத்தை போலீஸ் படையினால் சூழ்ந்துக்க முடியும். தயாரா படை இருக்கு. ஆனா அவங்க சொந்த உயிருக்காக கவலைப்படறவங்களாத் தெரியலை. பெரிய உயிர் சேதங்களை நாம் அனுமதிக்க முடியாது. பொதுவாகவே-- பேசித்தான் அபாயத்தைத் தவிர்க்கணும். முதல்ல கொஞ்சம் கொஞ்சமா பயணிகளை விடுவிக்கச் சொல்லிக் கேக்கணும்.''

''முதல்ல அந்த சயன்டிஸ்ட்டை மட்டுமாவது வெளியேற்றணும்.''

''உண்மை. ஆனால் அவங்களுக்கு அவரோட முக்கியத்துவத்தை எடுத்துச் சொன்னா-- அதுவே அதிக ஆபாத்தா முடிஞ்சிடும். உங்க சயன்டிஸ்டைச் சுட்டுடுவோம்னு மிரட்ட ஆரம்பிச்சுடுவாங்க'' என்றான் பிரிட்டோ.

''அவர் சொல்றது கரெக்ட், இப்போ அவங்க மறுபடி

தொடர்பு கொள்வதற்கு முன்னாடி பம்பாயை காண்ட் டாக்ட் பண்ணி இந்த பிளைட்டின் பிரயாணிகள் அத்தனை பேர் முகவரிகளிலேயும் அவங்களைப் பத்தி விசாரித்துச் சொல்லலாம். நம்ம கிட்டே இருக்கிற பிரயாணிகள் லிஸ்ட் டிலே எந்த அஞ்சு பேர் தீவிரவாதிகள்ன்னு தெரிஞ்சுக்கணும் முதல்ல''

''அவங்க உண்மையான பெயரையும் -- அட்ரசையும் தந்திருக்க மாட்டாங்க. ஆனா உண்மையான அட்ரஸ் கொடுத்துள்ள மற்ற எல்லோரையும் விலக்கிக்கிட்டே வந்து கடைசி அஞ்சு பேரைத் தனிப்படுத்திடலாம். அந்த டிக்கெட் டுகளை எந்த ஏஜென்சி மூலம் வாங்கினாங்கன்னு டீப்பா போகலாம்'' என்றார் மற்றொரு அதிகாரி.

''கோ அஹெட். நாலு டாக்டர்களை --நடமாடும் மருத்துவமனையை எல்லாம் தயார்படுத்தி வச்சிட்டோம். சந்தர்ப்பப்பட்டா ஒரு அதிரடி நடவடிக்கையா விமானத்தை சூழ்ந்துக்க போலீஸ் படையை தயார் படுத்திட்டோம். அவங்க நாட்டு தூதுவரை வரவழைக்க ஏற்பாடு செஞ்சிட் டோம். அவர் டெல்லிலேர்ந்து மெட்ராஸ் வந்து சேர எவ்வளவு நேரமாகும் மை காட்! அதுவரை அவங்க தொடர்பு கொள்ளாமலே இருப்பாங்களா? இதுக்கு நடுவிலே இருக்கிற அவங்க கிட்டேர்ந்து மீட்க. நாம ஏதாவது செய்யணும். என்ன செய்யலாம்?'' என்றார். டி. ஜி. பி.

என்ன செய்யலாம் என்று மண்டையை உடைத்துக் கொண்டனர். அமைச்சர் பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டார். முதலமைச்சரிடம் பிரதம மந்திரி பேசினார் தொலைபேசியால். முதலமைச்சர் விமான நிலையத்தில் இருக்கும் டி. ஜி. பி.யிடம் பேசினார். போலீஸ் அதிகாரிகள் துரித துரிதமாக போனில் பேசினார்கள். பைக்கில், ஜீப்பில் புறப்பட்டார்கள்.

விமான நிலையத்தின் வாசலில் வரவேற்க

வந்தவர்கள் கட்டுப்பட்டார்கள். டெலிவிஷன் காமிராக்கள் தீவிரவாதிகள் கைப்பிடியில் இருக்கும் விமானத்தைப் பல கோணங்களில் படமெடுத்தது. நிருபர்களும்--காமிராக்காரர்களும் அலைந்தார்கள். கிளிக்-- கிளிக் என்றார்கள். விமானத்தின் கதவு திறந்து அனிதாவின் உடல் தள்ளப்படுகின்ற காட்சியை ஒரு சில காமிராக்கள் கவ்வியிருந்தன-- பவர்ஃபுல் லென்ஸ் மூலமாக. அவர்கள் தங்கள் பத்திரிகை அலுவலகங்களுக்கு ஓடினார்கள்.

தூர்தர்ஷன்-- வானொலி நிலையங்களின் டெலக்ஸ் சாதனங்கள் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தன. விசேஷ செய்தி அறிக்கைகள் தயாராகிக் கொண்டிருந்தன. வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் சாட்டிலைட்டுகள் மூலம் செய்திகளையும், படங்களையும் தங்கள் நாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருந்தன. நாளிதழ்களில் மாலை இதழ்கள் ஒதுக்கியிருந்த செய்திகளை எடுத்து விட்டு-- புதுச் செய்திகளை டைப் செட்டிங்கிற்கு அனுப்பின.

சைதாப்பேட்டை.

திரு. வி. க. தெரு.

சந்தடியற்ற சாலையின் ஓரமாக அந்த டாக்ஸி நின்று கொண்டிருந்தது. டாக்ஸியின் பானெட் திறந்திருந்தது.

அதற்குள் குனிந்து கையில் ஸ்பானரோடு ஒன்றுமே செய்யாமல் சும்மா இருந்தான். காக்கி பேண்ட், காக்கி சட்டை அணிந்திருந்த டிரைவர்.

அந்த டிரைவர் இரண்டு நிமிஷத்திற்கு ஒரு முறை சாலையின் எல்லையைப் பார்த்துக் கொண்டு, காத்திருந்தான்.

அந்த டிரைவர்-- ராவ்.

15

“அப்பாடா! வொர்க் ஓவர்,” என்றான் அலெக்ஸ் துப்பாக்கியை இடுப்பில் செருகிக் கொண்டு.

மீதி பிளாஸ்திரி ரோலையும், பிளாஸ்டிக் கயிற்றையும் சூட்கேஸிற்குள் வைத்துவிட்டுப் பயணிகளைப் பார்த்தான்.

அத்தனை பேரும் தங்கள் தங்கள் இருக்கைகளில் பெல்ட்டுக்குள் இருக்க. மயங்கித் தலை தொங்கிப் போயிருக்க அனைவரின் வாய்களிலும் அகலமான பிளாஸ்திரி.

தூரத்தில் மற்றொரு ஹோஸ்டஸ் பெண்ணும் இன்னொரு விமான உதவியாளனும் அதே போலவே தரையில் கிடக்க.

“இவ்வளவு தூரம் செய்யணுமா, கிரண்?” என்றான் அலெக்ஸ்.

“கொஞ்சம்கூட எதிர்ப்பில்லைன்னு உறுதி செய்து கிட்டா சுதந்திரமா செயல்படலாம் அலெக்ஸ். இப்போ பாரு யாருக்காவ்து மயக்கம் தெளிஞ்சாலும், அவன் எதுவும் செய்ய முடியாது. காக்பிட்டுக்குள்ளேயும் இதே மாதிரி செஞ்சாச்சு. இப்போ இந்த விமானத்திலே உணர்வோட இருக்கிறது மூணே பேர்தான்.”

“மூணு பேரா? நாம ரெண்டு பேர்தானே?”

“இல்லை, காக்பெட்டுக்குள்ளே இருக்கிற மைக்ரோஃபோன்.”

''கிரண், கண்ட்ரோல் பாயிண்ட்லே இப்போ அவங்க என்ன செஞ்சிட்டிருப்பாங்க.''

''யோசனை பண்ணி யோசனை பண்ணித் திட்டம் போடுவாங்க எப்படி மடக்கலாம்னு. நாம் கொடுத்த தகவல்கள் உண்மைதான்னு உறுதி செஞ்சிருப்பாங்க. மறுபடியும் நாம பேசறதுக்காகக் காத்திருப்பாங்க. அவசரப்பட்டு எதையும் செய்ய மாட்டாங்க. ஏன்னா. அனிதாவோட பிணத்தைக் கீழே தள்ளினதாலே. ரொம்ப அதிர்ச்சியடைஞ்சிருப்பாங்க. நாம சரியான தீவிரவாதிகள்னு நம்பிட்டாங்க. கொலையோட அவசியத்தை இப்ப புரிஞ்சிட்டியா?''

''எல்லாம் சரி, கிரண். எதுக்காக பிணத்தை அவங்க எடுத்திட்டுப் போக அனுமதி கொடுத்தே?''

''ஏன்? அதனாலே என்ன?''

''அவளைப் பிரேத பரிசோதனை செஞ்சிருப்பாங்க.''

''அதனாலே?'

''அப்போ குண்டு கிடைச்சு. அதை வச்சி.

''முட்டாள்!'' என்று கிரண் தன் பாக்கெட்டிலிருந்து ரத்தக்கறை தோய்ந்த குண்டை எடுத்துக் காட்டினான். ''அனிதாவோட இதயத்திலே கிராஸா பாஞ்சு பின் தோள் வழியே வெளியேறிடுச்சு குண்டு. பர்பஸா அந்த மாதிரி கீழே தள்ளி சுட்டேன் இதுக்காக.''

''எல்லாத்தையும் யோசிச்சிருக்கே, கிரண்.''

கிரண் சிரித்துக் கொண்டே, ''ஓ. கே. விமானம் நம்ம கண்ட்ரோலுக்கு வந்து எவ்வளவு நேரமாச்சு?'' என்றான்.

அலெக்ஸ் நேரம் பார்த்து, ''முப்பத்தஞ்சு நிமிஷம் ஆச்சு. கிரண், நம்ம திட்டத்தோட இரண்டாவது கட்டத்தை ஆரம்பிக்கலாமா?''

''நோ. இப்போ வேணாம். இன்னும் கொஞ்சம் போகட்டும்.''

''நாம நேரம் கடத்திறதிலே, நாம் தீவிரவாதிகள் இல்லைன்னு, மாணவர்கள் இல்லைன்னு அவங்க கண்டு பிடிச்சிட்டா?''

''அது அத்தனை சீக்கிரம் முடியாது அலெக்ஸ். நம்ம சரியான முகவரிகள் அவங்ககிட்டே இல்லை. இங்கே இருக்கிற தீவிரவாதிகள் அஞ்சு பேர்ன்னு அவங்க ஓரளவு நம்பிட்டாலும் மறுபடி அதை அவர்களுக்கு உறுதிப்படுத்தணும். அவங்க மனசிலே இங்கே அஞ்சு தீவிரவாதிகள் இருக்கிறதா பதிய வைக்கணும்.

''எப்படி?''

''பேச்சிலேதான் இருக்கு சாமர்த்தியம். இப்போ நான் சொல்ற மாதிரி பேசு. அப்புறம் இருபது நிமிடம் கழிச்சு நம் திட்டத்தின் இரண்டாவது கட்டம், ஓ. கே.?'' என்று கிரண் பேச வேண்டியதைச் சொல்ல, அலெக்ஸ் உற்சாகத்தோடு மைக்ரோபோனுக்குச் சென்று அதை ஆன் செய்தான். முன்போலவே ஆங்கிலத்தில் பேசினான்.

''ஹலோ, ஃபிளைட் நம்பர் 514.''

''ஹலோ!'' என்றார் விமான உயர் அதிகாரி. ''ஒரு நிமிடம்,'' என்று கூறி விட்டு டி. ஜி.பி.யிடம் ஹெட் போனைக் கொடுக்க, அவர் வந்து, ''ஹலோ, தமிழ்நாடு டைரக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ் பேசறேன்.'' என்றார்.

''வணக்கம் சார். எங்க தூதுவர் புறப்பட்டுட்டரா?''

''டெல்லியை விட்டுப் புறப்பட்டாச்சு. ஹலோ, கவனியுங்க. உங்க முயற்சி ரொம்ப தப்பானது. முதல்லே அத்தனை பயணிகளையும் விடுவிங்க. உங்க கோரிக்கைப் படி உங்க நாட்டோட தூதரகத்தைத் தொடர்பு கொண்டு அவரை வரவழைச்சிருக்கோம். அவர் வந்திட்டிருக்கார்.

விமானம் உங்க பொறுப்பிலே இருக்கு. இதிலே அநாவசியமாக நூற்றுக்கும் மேற்பட்ட பயணிகளை நீங்க துப்பாக்கி முனையில் வச்சியிருக்கிறது தேவையில்லாதது. இரக்கமே இல்லாம ஒரு இளம் பொண்ணை சுட்டு கொன்னுருக்கீங்க. நோ. ரொம்ப முறையற்ற செயல் உங்களோடது, மிரட்டல் முனையிலே எதையும் சாதிச்சுட முடியும்னு நினைக்கிறது அவ்வளவு அறிவு பூர்வமானதில்லை. இந்த நிமிடம் நீங்க அஞ்சு பேரும் சரண்டர் ஆகிடறது நல்லது.''

''சாரி சார். நீங்க இதே மாதிரி தொடர்ந்து அட்வைஸ் பண்ணிட்டே இருக்கப் போறதா இருந்தா. பிரயாணியையும் பிணமா வெளியில தள்ள வேண்டியதாக இருக்கும்.''

''ஓ நோ! டூ பேட்.''

''மிஸ்டர் டி.ஜி.பி. எங்களோட பலத்தையும், தீவிரத்தையும் நல்லாப் புரிஞ்சுக்கணும் நீங்க. கொலைக்குத் தயக்கமே இல்லை, எங்ககிட்டே. எவ்வளவு அழகான பெண்ணை முதல் பலியா கொடுத்தோம் பார்த்தீங்களா? எங்க உயிரும் எங்களுக்கு வெல்லம் இல்லை. இந்த விமானத்தையே சுக்குநூறா தகர்த்து எறியறதுக்கான வெடி குண்டுகள் கைவசம் இருக்கு. எங்களோட கோரிக்கை நிறைவேறுகிற வரைக்கும் விமானத்தை விடறதாகவும் இல்லை. சரண்டர் ஆகிறதாகவும் இல்லை. நீங்க உங்க போலீஸ் வேலையைக் காட்டினா, நாங்க எங்க மூளையைக் காட்டத் தயங்க மாட்டோம். முதல்ல எங்க தூதரோட பேசிட்டு, பிறகுதான் மற்ற முடிவுகள்.''

''ஓ.கே. ஓ.கே. . . ரைட். அவரோட பேசிட்டுப் பிறகு முடிவெடுங்க. பிரயாணிகளை மட்டும் விடுவிச்சிடுங்க. நினைச்சுப் பாருங்க. ஒவ்வொருத்தருக்கும் எவ்வளவு முக்கியமான வேலைகள் இருக்கும்.''

''உயிரைவிட வேலைகள் முக்கியமில்லை சார். இருந்தாலும் நீங்க சொன்னதை நான் என் நண்பர்களோட கலந்து ஆலோசிக்கிறேன்.''

''ப்ளீஸ். . . செய்ங்க. ஏழு பெண்கள். ஒரு ஹோஸ்டஸ் பெண். இவங்க எட்டு பேரையும் முதல் கட்டமாக விடுவிக்கலாமே. பெண்கள் பெரிய அதிர்ச்சிகளைத் தாங்க மாட்டாங்க.''

''நடந்த கொலை பெரிய அதிர்ச்சி இல்லையா? அதையேத் தாங்கிக்கிட்டாங்க. நான் நண்பர்களைக் கலந்துக்கறேன்.''

''நல்லது. பாஸிடிவா முடிவெடுங்க. காப்டன், கோ-பைலட், இன்ஜீனியர் இவங்கயெல்லாம் எந்த நிலையிலே இருக்காங்க?''

''மயக்க நிலையிலே அப்புறம் மிஸ்டர் டி. ஐ. ஜி. சார் இங்கே விமானத்திலே கேக்கும், பிரெட்டும்தான் இருக்கு. பிரயாணிகளும் சரி, நாங்களும் சரி, காலை ப்ரேக்ஃபாஸ்ட் இன்னும் சாப்பிடலை. அதனாலே நாங்க அஞ்சு பேர், ஒரு ஹோஸ்டஸ், ஒரு அஸிஸ்டெண்ட், மூணு ஆபீசர்கள் தவிர நூத்திப் பன்னிரண்டு பேர் பயணிகள் ஆக மொத்தம் 121 பேருக்கான டிபன் வேணும். இன்னும் அரைமணி நேரத்திலே வேணும். தயார் செய்து, தயாரானதும் தெரிவியுங்க. எப்படி ஒப்படைக்கணும்னு சொல்றோம்.''

''ஒ. கே. செஞ்சிடறோம். மிஸ்டர், உங்க பேர்?''

''மிஸ்டர் யுனிவர்ஸ். நல்லாயிருக்கில்லே? இதையே வச்சிக்குங்க. பெண் பிரயாணிகளை விடுவிக்கிறது சம்பந்தமா நான் மிச்ச நாலு பேரையும் கலந்துபேசிட்டுச் சொல்றேன்,'' என்று கூறி விட்டு கிரணை அடைந்தான்.

‘‘கேட்டுட்டுத்தான் இருந்தேன். பிரமாதமா பேசிட்டே. இப்போ நம்ம திட்டத்தோட அடுத்த கட்டம். அதோ பாரு அந்த கர்ப்பிணிப் பொண்ணு. அவ பேரு ரோஸ்லின். ரோஸ்லின் எப்படி இருப்பான்னு நமக்குத்தான் தெரியும். அவங்களுக்குத் தெரியாது. இப்போ நம்ம டாக்டர் விக்ரம், ரோஸ்லினா மாறப் போறார்.’’ என்று தனது சூட்கேஸைத் திறந்து, ஏற்கெனவே தைத்து ரெடியாய் வைத்திருந்த விக்ரமின் அளவுக்கான ஜாக்கெட், பிரா, சேலை, பாப்ஹேறராக ஒரு டோஃபா, மேக்கப் சாதனங்கள் இவற்றை வெளியில் எடுத்துக் கொண்டு, விக்ரமை அணுகினான் கிரண்.

டி. ஜி. பி–ஐ. ஜியைப் பார்த்துக் கொண்டு பேசினார்.

‘‘கொஞ்சம் இளகின மாதிரி தெரியுது. முதல் கட் டமாக பெண்களை விடுதலை செஞ்சிடுவாங்கன்னு எதிர்பார்க்கறேன்.’’

அவர் பேச்சில் சுவாரசயிமில்லாமல் சற்றுத் தள்ளி கையில் ஒரு லென்சோடு சுனில் பிரபாகர் அந்தப் புகைப்படத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அருகில் பிரிட்டோ.

‘‘என்ன பார்க்கறே அப்படி? அதான் கீழே அனிதாவோட பிணத்தைத் தள்ற ரெண்டு பேருமே சுத்தமா முகமூடி போட்டிருக்காங்களே. எந்த அடையாளத்தை நீ பார்க்க முடியும்?’’

பிரிட்டோவுக்கு பதில் சொல்லாமல் அமைதியாகப் பார்த்துக் கொண்டு இருந்தான் பிரபாகர்.

‘‘ஏன் பிரிட்டோ, அவன் பேச்சை ரெக்கார்ட் செஞ்சிருக்கோம். திரும்பத் திரும்பக் கேட்டுட்டோம். அவனோட ஆங்கில உச்சரிப்பிலே ஆப்பிரிக்கா வாடை வீசறதா நீ உணர்றியா? சவுத் இந்தியா மொழியா. . . ரொம்ப ப்ரோக்கனா பேசறான், இல்லே?’’

''ஸோ வாட்? அவங்கதான் மாணவர்களா இங்கே தங்கிப் படிக்கிறதா சொல்றாங்களே. . . எத்தனை வருஷமா படிக்கிறாங்களோ. தொனி நம்ம பாணிக்கு மாறியிருக்கலாம்?''

''டாக்டர் விக்ரமுக்கு ஏதும் ஆகியிருக்காதே?''

''அவரோட முக்கியத்துவம் அவங்களுக்குத் தெரியாத வரைக்கும் --எல்லா பயணிகளுக்கும் ஏற்பட்டிருக்கிற நிலைதான் அவருக்கும். நம்ம டி. ஜி. பியோட அப்ரோச்படி நிதானமாதான் செயல் பட்டாகணும். அவங்க கிட்டே துப்பாக்கிகள் இருக்கும்னு நிரூபிச்சுட்டாங்க. சுடத்தயங்காதவங்க. முதல்ல பெண்கள் வரட்டும். நாம டிஃபன் அவங்க கேட்டபடி கொடுத்ததும்-- நாம ஒத்துழைக்கிறதிலே கொஞ்சம் திருப்தி அடைவாங்க. அப்புறம் வயசானவங்களை எல்லாம் விட்டுடுங்கன்னு கேக்கலாம். இசைவாங்க. அப்போ டாக்டர் விக்ரமும் அனுப்பப்படுவார்..பொறுமையாக, நூல்ல சிக்கல் எடுக்கற மாதிரி தான் தீர்த்தாகணும் இதை, வேற என்ன செய்ய முடியும் சுனில் நாம்?'' என்றான் பிரிட்டோ.

''வாஸ்தவம்'' என்று மறுபடி அந்தப் புகைப்படத்தைப் பார்த்தான்.

மயக்கத்தில் இருந்த டாக்டர் விக்ரம் இப்போ தரையில் வெறும் அண்டர்வேரோடு படுத்திருக்க. . . கிரண் நிதானமாக அவரின் மீசையையும், கிருதாக்களையும் மழித்தான். ஒரு முறை அவர் சற்று முனக. மறுபடி மருந்தின் மூலம் அவரை மயக்கத்திற்கு ஆட்படுத்தினான்.

டோப்பா பொருத்தப்பட்டு, புருவங்கள் மழிக்கப்பட்டு அழகாக ஐப்ரோ கோடுகள் வரையப்பட்டன. கண்களுக்கு மையிட்டு. உதட்டிற்கு லிப்ஸ்டிக் போட்டு... கைகளில் இருந்த கொஞ்சமான கறுத்த, வெளுத்த

மயிர்களையும் மழித்து. வழவழப்பிற்கு லோஷன் தடவி. பிரா அணிவித்து. ஜாக்கெட் அணிவித்து, சேலை கட்டி, காதுகளில் தொங்கல்கள் மாட்டி, வளையல்கள் மாட்டி.

டாக்டர் விக்ரம் இப்போது ஓரளவு ஆழமாக ஏழுமாத கர்ப்பிணியாக மாறியிருந்தார். மற்ற அத்தனை பயணிகளும் சீட்டோடு சாய்ந்து--வாய் மூடப்பட்டு கைகள் கட்டப்பட்டு. உணர்வுகள் மயக்கத்தால் மறக்கடிக்கப் பட்டு அப்படியே இருந்தனர்.

''அலெக்ஸ், இனிமேதான் ரொம்ப முக்கியமான கட்டம், ஒரு சின்ன தப்பு நடந்தாலும் திட்டம் நிறைவேறாது. படபடப்பேக் கூடாது. நான் சொன்ன மாதிரி அழகா பேசு... போ. டாக்டர் பயணத்துக்குத் தயார் ஆயிட்டார்,'' என்றான் கிரண்.

அலெக்ஸ் காக்பிட்டிற்குள் நுழைந்தான்.

''ஹலோ சார், நான் டி. ஜி. பியோட பேசணும்,'' என்றான்.

வினாடிகளில் ''ஹலோ'' என்றார் டி. ஜி. பி.

அவர்கள் இருவரும் பேசுவது ஸ்பீக்கர் மூலமாக அந்த அறை முழுவதும் உரக்கக் கேட்க முடிகிற வசதி செய்யப்பட்டிருக்க. அனைவரும் கேட்டுக் கொண்டு இருந்தார்கள். தவிர. டேப்பில் பதிவாகிக் கொண்டும் இருந்தது.

''டி. ஜி. பி. சார், பெண்களை மட்டும் ரிலிஸ் பண்றதைப் பற்றி பேசிக்கிட்டிருந்தப்பவே இன்னொரு பிரச்சனை வந்துடிச்சி. இங்கே பிரயாணிகளிலே ஒரு ஏழு மாச கர்ப்பிணி பொண்ணு ரோஸ்ஸின் அலெக் ஸாண்டர்னு பேரு நடந்த கொலையைப் பார்த்து அதிர்ச்சியடைஞ்சி மயக்கம் போட்டு விழுந்துட்டுச்சி.

அந்தப் பொண்ணுக்கு அபார்ஷன் ஆய்டுச்சின்னு நினைக்கிறோம். உயிருக்குப் போராடிக்கிட்டிருக்காங்க. முதல்ல அவங்களுக்கு ஒரு வழி செய்யணும். உயிருக்கு போராடறவங்களை அப்படியே விட எங்களுக்குச் சம்மதமில்லை. கோரிக்கை நிறைவேறக் கொலை செய்ய எங்களுக்குத் தயக்கமில்லை. அதே சமயம் அநாவசியமா உயிர்களைப் பறிக்க இஷ்டமும் இல்லை. பெண்ணைக் காப்பாத்த விரும்பறோம்.''

''வெரிகுட். இங்கே ஸ்பெஷல் ஆம்புலன்ஸ் தயாரா இருக்கு. அதிலே நாலு டாக்டர்கள் ரெடியா இருக்காங்க. ஸ்டெப்ஸை விமானத்திலே பொருத்தச் சொல்றோம். அந்தப் பெண்ணை நீங்க ஒப்படைங்க. ஆம்புலன்ஸை விமானத்துக்கு கிட்டே நிப்பாட்றோம். உடனே சிகிச்சை தரலாம்.''

''டி. ஜி. பி. சார், எங்களை அவ்வளவு மடையர்கள்னு நினைச்சிங்களா? எங்களைப் பற்றின அடையாளங்களையும் --தகவல்களையும் இந்த பொண்ணு மூலமா விசாரிக்க வாய்ப்பு தர்றதா இல்லை. இந்தப் பொண்ணு டாக்டர்கிட்ட போக வேண்டிய பொண்ணு. ஆனா அவ்வளவு அவசரம் இல்லை. கொஞ்சம் தாங்கும். அதனால நான் சொல்ற மாதிரி நீங்க செய்யறதா இருந்தா-- இவளைக் காப்பாத்த முயற்சி பண்றோம். இல்லைன்னா... இவ சாகறதைப் பத்தி எங்களுக்குக் கவலையே இல்லை.''

''ஒரு உயிரை காப்பாத்தறதிலே லேட் பண்ணாதிங்க. கமான், சொல்லுங்க. என்ன செய்யணும் நாங்க?''

--இவர்கள் பேசிக்கொண்டே இருக்க. டி. ஐ. ஜி. கையில் பிரயாணிகள் லிஸ்டை வைத்துக் கொண்டு, பார்த்து ஐ. ஜியிடம் சொன்னார், ''யெஸ் சார், ரோஸலின் அலெக்ஸாண்டர் வயசு 32- லிஸ்ட்ல இருக்கு.''

ஐ. ஜி. அவசரமாகச் சொன்னார். "கெட் ஹர் அட்ரஸ். பம்பாயோட பேசுங்க. அந்தப் பொண்ணு கர்ப்பவதியான்னு உறுதி செஞ்சுக்குங்க."

அலெக்ஸ் தொடர்ந்தான், "தெளிவா சொல்றேன். வயர்லெஸ் கருவி பொருத்தப்பட்ட ஒரு ஜீப் வந்து விமானத்தின் படிக்கட்டுகள் கிட்டே நிக்கணும். டிரைவர் உடனே போய்டணும். எங்களில் ரெண்டு பேர் இவளை அந்த ஜீப்பிலே அழைச்சுட்டு போவாங்க. போலீஸோட எந்த அங்கமும் ஜீப்பைத் தொடரக் கூடாது. எந்த உத்தரவு எங்கே போனாலும் வயர்லெஸ் மூலமா ஜீப்பிலே போற எங்க நண்பர்களுக்குத் தெரிஞ்சிடும். மறு நிமிஷமே. இவளை க்ளோஸ் பண்ணிடுவோம். தவிர. எங்க ரெண்டு நண்பர்களும் சரியா ஒரு மணி நேரத்திலே திரும்பி வருவாங்க- முதலுதவி முடிச்சி இவளை அழைச்சிக்கிட்டு, தேவைப்பட்டா ஒரு டாக்டரை கூட அழைச்சிக்கிட்டு, ஒரு மணி நேரத்திலே எங்க நண்பர்கள் திரும்பி வரலைன்னா. இங்கே விமானம் வெடிக்கும். எங்களோட எந்த வித்த்திலேயும் விளையாட முயற்சிக்கக் கூடாது. ஒரு உயிரைக் காப்பாத்தணுங்கற எங்க நல்ல நோக்கத்தை உங்களுக்குச் சாதகமா பயன்படுத்திக்க நினைச்சா. சத்தியமா நாங்க சும்மா இருக்க மாட்டோம். வரிசையா ஒவ்வொரு பிணமா வெளில அனுப்புவோம். ஜீப்பிலே ஒரு சி. ஐ. டி. ஆபீஸர் ஒளிஞ்சுக்கிட்டு இருக்கிறது- வழில ஜீப்பை தொடர்றது. .இந்த மாதிரி எந்தக் குள்ளநரி வேலையும் வேணாம். ஏன்னா எங்க அந்த இரண்டு நண்பர்கள் கையிலேயும் அழகான பிஸ்டல்ஸ் இருக்கு."

"மிஸ்டர், உங்க மூளை பிரமாதமா இருக்கு, ஆனா இவ்வளவு வேணாம். உயிருக்குப் போராடும் ஒரு பெண் கிட்டே நாங்க விசாரணை நடத்த மாட்டோம். உங்களைப் பற்றி புதுசா எந்தத் தகவலும் தெரிஞ்சுக்க வேண்டியது

இல்லை. எங்க டாக்டர்கள் கிட்டேயே ஒப்படையுங்கள். சிகிச்சை முடியறவரைக்கும் ஒருத்தர் பக்கத்திலேயே வேணும்னாலும் இருங்க, சுற்றி வளைக்கிற வேலையினாலே அந்தப் பொண்ணு உயிரை இழக்க நேரிடலாம்,'' என்றார் டி. ஜி. பி.

''உங்களோட பிடிவாதத்தினாலேயும் அந்த உயிர் பிரியநேரிடலாம் சார். ஓக்கே. எங்களுக்கென்ன? இவ எங்களுக்கு அக்காவா? தங்கையா? பாசமா? பற்றா? பிளேனுக்குள்ளேயே சாகட்டும். செத்ததும் தூக்கி வெளியில் போடறோம். வேற பேசலாம் டிஃபன் தயாராய்கிட்டிருக்கா?''

''தயாராகிக்கிட்டிருக்கு. மிஸ்டர். அந்தப் பொண்ணை.

''நோ. இனி அதை பத்தி பேச வேணாம். எங்க திட்டத்துக்கு நீங்க ஒப்புக்கலை விடுங்க.''

''நோ. நோ. நீங்க சொன்னபடி செய்யறோம்.''

''வெரிகுட். முதல்ல ஸ்டெப்சை கொண்டு வந்து நிறுத்திட்டு ஊழியர்களை ஓடிப் போய்டச் சொல்லுங்க. நான் சொன்னபடி. கொஞ்சமும் மாற்றம் இல்லாம செய்யுங்க. கமான்.''

டி. ஜி. பி. விமான நிலைய உயர் அதிகாரியைப் பார்த்தார். ''நமக்கு வேற வழியில்லை. அவன் சொல்ற படி செய்யத்தான் வேணும்'' என்றார்.

16

டாக்ஸி தயாராய் நின்றது.

சாலையின் முனையைப் பார்த்துக் கொண்டு-பரபரப்பை மென்று கொண்டு ராவ் காத்திருந்தான்.

அலெக்சின் வேண்டுகோள் படி செய்வது என்று போலீஸ் அதிகாரிகள் தீர்மானித்தார்கள்.

''ஜீப்பை மஃப்டியிலே ஆபீஸர்களை ஃபாலோ செய்யச் சொல்லித்தான் ஆகணும்'' என்றார் ஐ. ஜி.

''ஷ்யூர். வயர்லெசிலே தகவல்கள் இப்போ சொல்லிடலாம். அவங்க ஜீப்பிலே ஏறினதுக்கப்புறம் நோ கம்யூனிகேஷன்ஸ், ரொம்ப பிரில்லியண்டா இருக்காங்க'' என்றார் டி. ஜி. பி.

''நான் அப்படி நினைக்கலை'' என்றான் சுனில் பிரபாகர் பிரிட்டோவின் காதில் கிசுகிசுப்பாக ''இரக்கமுள்ள தீவிரவாதிகளை நான் முதன் முறையாக சந்திக்கின்றேன்.

''உண்மை முரண்படுது. ஆனா அவங்கத்தான் கிளியரா சொல்றாங்களே. நோக்கத்துக்காக கொல்வோம்- அநாவசியமா மாட்டோம்னு. என்றான் பிரிட்டோ.

''நம்பறியா நீ?''

''பின்னே? நம்பாம? நீ என்ன நினைக்கிற?''

''புரியலை, எனக்குப் புரியலை, குழப்பமா ஏதோ நினைக்கிறேன்,'' என்று எதிரே டெலிவிஷன் திரையில் அந்த போயிங் விமானத்தை நோக்கி 14 என்று எழுதப்பட்ட, சக்கரங்களில் நகர்கிற படிகள் மூன்று பேரால் தள்ளப் படுவதைப் பார்த்தான். ''ரெண்டு நாளைக்கு பேப்பர்கள் ரேடியோ டி.விக்கு நல்ல வேட்டை. இதை வச்சே ஒரு வாரம் ஓட்டிடுவாங்க. இப்போ கிட்டத்தட்ட இருபத்தஞ்சி கேமரா இதே காட்சியை படம் எடுத்துக் கிட்டிருக்கும் பிரிட்டோ. மக்கள் கூட்டத்தை விட நிருபர்கள் கூட்டம் தான் அதிகம். எல்லார் கையிலும் கேமரா. கீழே போகவே முடியலை'' என்று கண்ணாடி ஜன்னல் வழியாக. . . கீழே அலைமோதிக் கொண்டிருக்கும் நிருபர்கள், போட்டோ கிராபர்கள் கூட்டத்தைப் பார்த்துக் கொண்டே சொன்ன சுனில் பிரபாகர் கண்களை நிறுத்தினான்.

அருகில் இருந்த இன்ஸ்பெக்டரை அழைத்தான்.

''இன்ஸ்பெக்டர், அதோ பாருங்க. . . ஜீன்ஸ் பாண்ட்டும், டார்க் ப்ளு டி. ஷர்ட்டும் போட்டிருக்கிற அந்தப் பொண்ணை இங்கே கூப்பிட்டு வாங்க'' என்றான்.

''யாரது சுனில்?''

''அந்த நிருபர் ஆஷா.''

''எதுக்காக அவ?

''வரட்டும் இரு,'' என்றான் சுனில்.

வயர்லெஸ் பொறுத்தப்பட்ட ஜீப் விமானம் அருகில் நின்றது டிரைவர் இல்லாமல். படிகள் விமானத்தின் வாசலுக்கு எதிராகத் தயாராக இருந்தது. சொன்னபடி செய்தாகி விட்டது என்று டி. ஜி. பி. தகவலும் தெரிவித்து விட்டார்.

நகரெங்கும் ஜீப்பின் எண் தெரிவிக்கப்பட்டு. .நிழலாய்த் தொடர உத்திரவிடப்பட்டது. யாரையும் நெருங்க வேண்டாம் ஜஸ்ட் அப்சர்வ் என்று கட்டளை போடப்பட்டது.

காமிராக்கள் காத்திருந்தன.

அலெக்ஸ் மறுபடி பேசினான், "டி. ஜி. பி. சார், மறுபடி சொல்றேன். சரியா ஒரு மணி நேரத்திலே எங்க இரண்டு நண்பர்களும், அந்தப் பெண்ணும் இங்கே திரும்பியாகணும். இல்லைன்னா. நாங்க என்ன செய்வோம்னு உங்களுக்குத் தெரியும். உயிர்களோட விளையாடறது அப்புறம் நீங்களாத்தான் இருக்க முடியும். ரொம்ப வருத்தப்படுவிங்க."

கிரணை அடைந்தான்.

"அலெக்ஸ், கழுத்துக்குக் கீழே ஒரு கை, காலுக்குக் கீழே ஒரு கை கொடுத்து டாக்டரை தூக்கிக்கிட்டு நீ முதல்ல இறங்கறே. பின்னாடி நான் இறங்கறேன். கூடுமான வரை அவர் முகத்தை மறைக்கிறமாதிரி நடக்கணும். டெலி லென்ஸ் போட்டு நம்மைப் பார்த்துக்கிட்டே இருப்பாங்க. நம்ம முகமூடிகளை இப்பக் கழட்டவே கூடாது."

"சரி, டாக்டர் முகத்தை மறைக்கணும்னா... நீ முதல்ல இறங்கு. பின்னாடி நான் இறங்கறேன்."

"குட் ஐடியா. காக்பிட்டுக்குள்ளே போய்க் கதவை திறந்துவிட்டு வந்து நீ தூக்கிக்கணும். டாக்டருக்கு மறுபடி நினைவு திரும்பாம மறுபடி மயக்கத்திலே வச்சாச்சு, இப்போ நாம கொண்டு வந்த சூட்கேஸ்களிலே நம்மைக் காட்டிக் கொடுக்கிற மாதிரி எதுவும் இருக்காதுன்னு துல்லியமா ஆராஞ்சிடணும். நேரமானாலும் சரி."

துல்லியமாக ஆராய்ந்தார்கள். ரேகைகளை அழித்தார்கள். தயாரானார்கள்.

டெலிவிஷனில் அத்தனை அதிகாரிகளும் ஆர்வமாய் பார்த்துக் கொண்டிருக்க.

கதவு திறந்து.

முதலில் கையில் துப்பாக்கியுடன், முகமூடியுடன் மெதுவாக கீழே இறங்கினான் கிரண். இரண்டு படிகள் பின்னால் பெண்ணாகிப் போன டாக்டர் விக்ரமைச் சுமந்து கொண்டு அலெக்ஸ் இறங்க.

அத்தனை அதிகாரிகளும் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கிரண் ஜீப்பிற்குள், ஜீப்பின் அடியில் ஒரு முறை பார்த்துக் கொண்டு, டிரைவிங் சீட்டில் அமர்ந்து கொள்ள... அலெக்ஸ் பின் பக்கம் ஏறி உட்கார்ந்து மடியில் கிடத்திக் கொண்டு. . . சுற்றிலும் மறைவு லெதர்களைத் தொங்க விட்டுக் கொள்ள.

டாக்டர் விக்ரமை வரவேற்று அழைத்துச் செல்ல அமைக்கப்பட்டிருந்த பிரத்தியேகப் பாதையை நோக்கி ஜீப் சீறியது.

மஃப்டி அதிகாரிகள் அங்காங்கே ஸ்கூட்டரிலும், ஆட்டோவிலும், டாக்ஸியிலும், பிரைவேட் கார்களிலும் தயாராய் இருந்தார்கள் எஞ்சின் உறுமல்களுடன்.

விமான நிலையத்தை விட்டு ஜீப் வெளியேறியது.

''கதவை ஏன் அவங்க இன்னும் மூடலை?'' என்றான் டெலிவிஷனில் விமானத்தின் வாசலைப் பார்த்துக் கொண்டிருந்த 'பிரிட்டோ.

''மூடுவாங்க.'' என்றார் டி. ஐ. ஜி.

டி. ஜி. பி. விமானத்திலிருந்து வருகிற செய்திக்காகக் காத்திருந்தார்.

ஜீப் 90 கி. மீ வேகத்தில் பாய்ந்து கொண்டிருந்தது. திறமையாக ஒட்டினான் கிரண்.

ஜீப்பிலிருந்த வயர்லெசில் அலெக்ஸ் பேசினான். ''ஹலோ கண்ட்ரோல், எங்க ஜீப்பை சில கார்கள் ஃபாலோ பண்ணுது. அது நல்லது இல்லை. ஓவர்'' என்றான்.

பல கட்டிங்குளில் திரும்பி. வளைத்து.

தூரத்திலே ஜீப்பை பார்த்துவிட்ட ராவ் சந்தடியற்ற அந்தச் சாலையில் இருந்த அந்த டாக்ஸியின் பானெட்டை அவசரமாக மூடிவிட்டு. . காரின் பின் கதவுகளைத் திறந்து வைத்துவிட்டு டிரைவர் சீட்டில் அமர்ந்து எஞ்சினை ஸ்டார்ட் செய்து, கியரைக்கூட மாற்றி. கிளட்ச்சை விடுவிக்காமல் ஆக்ஸிலேட்டரில் தயாராய்க் கால் வைத்துக் கொண்டு காத்திருக்க.

''ஆஷா, உங்களை ஏன் வரவழைச்சேன்னா. இந்தப் போட்டோவைப் பாருங்க. அனிதாவோட பிணத்தைத் தள்ளினப்போ எடுத்தது. முகமூடி போட்ட இவனோட சட்டைக்குள்ளே. மெலிசா சிலுவை மாதிரி தெரியுது பாருங்க. இந்த லென்ஸ் வழியா பாருங்க. எதுவும் ஸ்ட்ரைக் ஆகுதா?'' என்றான் சுனில் பிரபாகர்.

பார்த்து, ''ஆமாம், சிலுவை மாதிரிதான் தெரியுது,'' என்றான்.

பிரிட்டோ, ''என்ன சுனில், என்ன உன் நோக்கம்?''

''வெய்ட். நானே இன்னும் கிளியரா இல்லை. ஆஷா நல்லா பாருங்க-அன்னிக்கு ஹோட்டல்ல அவன் கழுத்திலே பார்த்த அதே சிலுவை மாதிரி இருக்கா இது?''

''ஓ காட்! எதையும் எதையும் நீ கனெக்ட் பண்றே?'' என்றான் பிரிட்டோ ''இவங்க பிரிவினைவாதிகள். ஆப்பிரிக்காக்கார மாணவர்கள்.''

''பிரிட்டோ, கொஞ்சம் சும்மா இரேன். நான் உறுதியா எதுவும் சொல்லலையே. அவங்க சொல்லட்டும். நல்லாப் பாருங்க ஆஷா.''

'அந்த மாதிரிதான் தெரியுது. ஆனா. என்றாள் குழப்பமாக.''

ஐ.ஜி.யும், டி.ஐ.ஜி.யும் விமான வாசல் ஏன் மூடப்படவில்லை அவர்களிடம் இருந்து இன்னும் ஏன் தொடர்பு வரவில்லை என்ற யோசனையில் இருக்க. . . டி. ஐ. ஜி. தனியாய் வயர்லெஸ் கருவியில் அலெக்ஸ் ஜீப்பிலிருந்து கொடுத்த தகவலை வாங்கிக் கொண்டு. அதை அணைத்துவிட்டு. . . ''சார், த சேம் வாய்ஸ்'' என்றார். பரபரப்பாக விபரம் சொன்னார்.

''ஸோ வாட்? இருவரில் அவன் ஒருவன்.''

சுனில் பிரபாகர் எதையோ உணர்ந்தவன் போல. . . விமானத்திலிருந்து டி. ஜி. பியிடம் அலெக்ஸ் பேசின பேச்சுக்களின் நாடாவை ரிவர்ஸ் செய்தான். வீடியோவில் இருவரும் இறங்கின காட்சியை ரிவர்ஸ் செய்தான்.

''கமான் ஆஷா. இந்தப் பேச்சைக் கேளுங்க. இந்தக் குரல் உங்களுக்குப் பரிச்சயமான குரலான்னு நிதானமா சொல்லுங்க. வீடியோ காட்சியை மறுபடி மறுபடி பாருங்க. முகத்தை மறந்துட்டு உடலமைப்பை மனசில வச்சிக்கிட்டு... அன்னைக்கு உங்ககூட பேசினவனோட ஒப்பிட்டுப் பாருங்க. கமான்.'' என்று பதறினான்.

''வாட் ஈஸ் திஸ்'' என்றார் டி. ஜி. பி

''டாக்டர் விக்ரமைக் கடத்தத் திட்டமிட்டவங்களோட வேலைதான் இதுவுன்னு லேசா அபிப்பராயப்படறேன் சுனில்,'' என்றான் பிரிட்டோ.

''வாட்? ஓ! காட்! அப்படியா? இத்தனை பெரிய டிராமாவா? நோ. என்னால் இந்த தியரியை ஒத்துக்கமுடியலை. அநாவசியக் கொலை எதுக்கு செய்வாங்க. அவங்க சொன்ன தகவல் எல்லாமே கரெக்ட் ஒவ்வொரு தகவலையும் நாம உடனுக்குடன் செக் பண்ணிட்டோம். பின்னே எப்படி?''

ஆஷா மறுபடி மறுபடி கேட்டு, ''இந்தக் குரல் லேசா பரிச்சயமான மாதிரி தான் தெரியுது. உறுதியா சொல்ல முடியலை என்றாள்.

ஆஷா மறுபடி மறுபடி பார்த்து, ''அதே உயரம் தான். அதே பாடிதான். நடைகூட ஒத்துப்போகுது. ஆனா உறுதியா சொல்லத் தெரியலை'' என்றாள்.

''டேமிட்! நோ! இது டாக்டர் விக்ரமைக் கடத்தறதுக்கான திட்டம்தான்'' என்று கத்தினான் சுனில் பிரபாகர்.

டாக்ஸிக்கு அருகாக ஜீப்பை 'குயிக்' என்று பிரேக்கடித்து நிறுத்தினான் கிரண். அவசரமாக இறங்கினான். அதே விநாடிகளில் டாக்டர் விக்ரமை சுமந்து கொண்டு அலெக்சும் இறங்கி இருக்க. மூவரும் ராவின் டாக்ஸிக்குள் படாரென்று ஏறிக் கொள்ள.

ராவ் பிய்த்துக் கொண்டு கிளம்பினான்.

காரின் நான்கு ஜன்னல்களின் கறுப்புக் கண்ணாடிகளும் முழுக்க ஏற்றிவிடப் பட்டிருக்க. கிரணும் அலெக்சும் முக மூடியைக் கழற்றினார்கள்.

ராவின் டாக்ஸி கடந்து போய் நான்கு நிமிடம் தாமதமாக மஃப்டி போலீசின் முதல் கார் அந்த அனாதை ஜீப்பை கவனித்தது. அதன் அதிகாரி தூரத்தில் தன் காரை நிறுத்தி தயங்கி நெருங்கி உள்ளே யாருமில்லாததை உணர்ந்து வயர்லெசில் கவிழ்ந்த போது.

ராவ் படு வேகமாய் நுங்கம்பாக்கத்தை நோக்கித் துடிப்பாய் விரைந்து கொண்டிருந்தான்.

ஜீப் மட்டும் இருக்கிறது அவர்களைக் காணோம் என்கிற செய்தியைப் பெற்றவுடன் சுனில் பிரபாகரை அத்தனை அதிகாரிகளும் திரும்பிப் பார்த்தார்கள்.

''நீங்க சொன்னது போல.

"திஸ் ஈஸ் டாக்டர் விக்ரம்" என்றான் கிரண்.

-ராவின் வீட்டின் அறையில் நாற்காலியில் கட்டிப் போடப்பட்ட நிலையில் மயக்கத்தில் பெண் உடையில், மேக்கப்பில் இருந்த டாக்டர் விக்ரமைக் காட்டி.

"ஓ காட்! யு ஹேவ் டன் இட்!" என்று அவனை அணைத்துக் கொண்டார் ராகுல். உடனே சொன்னார். "நாம் இப்பவே கலையறோம். ராவ் மட்டும் இங்கே இருக்கட்டும். ராத்திரி மறுபடி சந்திக்கிறோம். அது வரை இவருக்கு நினைவு திரும்பறப்போ எல்லாம் மயக்க மருந்து தர வேண்டியது ராவோட வேலை. நீங்க வந்த டாக்ஸியோட நம்பரை மாத்தியாச்சு. நான் எடுத்துக்கிட்டுப் போய் அப்புறம் படுத்திடறேன் அலெக்ஸ். கிரண்-நீங்க உங்க வீடுகளுக்குப் போங்க. ராத்திரி சந்திக்கலாம்.

கிரண் தனது பைக்கில் தனது வீட்டை நோக்கிப் போய்க் கொண்டு இருக்கும் போது. வழியில் டிராஃபிக் தடை செய்யப்பட்டு. . . ஒவ்வொரு காருக்குள்ளும் போலீஸ் அதிகாரிகள் சோதனை செய்துக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

சிரித்துக் கொண்டான்.

17

புல்லட் புரூஃப் ஜாக்கெட் அணிந்து ஐ. ஜியின் தலைமையில் இருபது போலீஸ் வீரர்கள் விமானத்தின் கீழே படிக்கட்டுகளுக்கருகே. ஒரு கையில் துப்பாக்கி மறு கையில் இரும்புக் கேடயம் வைத்திருக்க.

விமானத்தின் திறந்த வாசல் வழியே கீழே இருந்த முதலில் ஒரு கட்டு எறியப்பட்டது. அந்தக் கட்டை போய் உள்ளே விழுந்ததும் உள்ளே இருக்கிற மீதி மூன்று தீவிரவாதிகள் அப்படி யாரேனும் இருந்தால் எட்டிப் பார்க்கட்டும் என்ற எதிர்பார்ப்பில் எறியப்பட்ட அந்தக் கட்டை எந்தச் சலனத்தையும் ஏற்படுத்தாததால்.

''யு பீப்புள், யாராவது எட்டிப் பாருங்க. வாசலுக்கு வாங்க'' என்று சின்ன லவுட் ஸ்பீக்கர் வழியே கத்தினார் ஒரு அதிகாரி.

ம்கூம். இருட்டும் அமைதியும் நுழைவாசலில்.

''கமான்'' என்று சைகை காண்பித்து விட்டு, விமானத்தின் படிகளில் ஏற ஆரம்பித்தார் ஐ. ஜி. மற்றவர்கள் திமுதிமுவென்று தொடர.

மாலை செய்தித்தாள்களில். மறுநாள் செய்தித் தாள்களில்.

விஞ்ஞானி டாக்டர் விக்ரம் கடத்தப்பட்டார்.

துணிகர முறையில் கடத்தல்!

ஆப்பிரிக்க நாட்டின் பிரிவினைவாதிகள் என வேஷம்!

டி. ஜி. பி. தனது பதவியை ராஜினாமா செய்தார்.

டாக்டர் விக்ரமின் பாதுகாப்புக்கு ஏற்பாடுகள் செய்த இரண்டு சி.பி.ஐ அதிகாரிகள் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர்!

பிரபல துப்பறியும் நிபுணர்கள் சென்னை வருகை!

''நோ! இது அநியாயம்!'' என்றான் பிரிட்டோ ஹோட்டல் அறையில்.

''எது பிரிட்டோ?'' என்றான் சுனில் சேரில் அமர்ந்து கண்களை மூடிக் கொண்டு-தலையைப் பிடித்தபடி.

''நாம சஸ்பெண்ட் செய்யப்பட்டது, பொது மக்களைத் திருப்தி படுத்தறதுக்காக எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை இது. நம் கடமையில் நாம தவறலை. நமக்குத் தரப்பட்ட பொறுப்பு சென்னையிலே டாக்டர் இருக்கிற ஏழு மணி நேரங்களுக்கு அவர் உயிருக்குப் பாதுகாப்பு தரவேண்டிய பொறுப்பு. நாம எந்த ஏற்பாடுகளையும் குறை வைக்கலை. விமானத்திலேர்ந்து இறங்கி அவரோட பயண வழியிலே கடத்தப்பட்டிருந்தா நாம் தவறுக்குப் பொறுப்பேற்கலாம். கடத்தல் ஆகாயத்திலே ஆரம்பமான ஒன்று.

''பிரிட்டோ, சில்லி மாதிரி பேசாதே. வேலைக்காரன் கிட்டே நான் ஒரு மணிக்கு வந்துடுவேன் - அதுவரைக்கும் வீட்டை பத்திரமா பார்த்துக்கோன்னு சொன்னா . அவன் 1.01க்கு வீட்டைத் திறந்து போட்டுட்டுப் போய்டலாம்னு அர்த்தமா? திட்டம் எங்கே ஆரம்பமானதுங்கறதெல்லாம் பிரச்சனையில்லை. கடத்தல் நடந்தது சென்னையிலே - நம்ம கண் எதிரிலேயே. அவன் சவால் விட்டபடி. அதி அற்புதமாக நிகழ்த்திக் காட்டிட்டான். இரெண்டே பேர்-அஞ்சு பேர் இருக்கிறதா நம்ப வச்சி ரொம்ப சாமர்த்தியமாக கடத்திட்டான். நம்ம கண் எதிரிலேயே கோட்டை

விட்டுட்டோமே. அந்த ஜீப்பை நம்மில் ஒருவர் ஃபாலோ பண்ணியிருக்கலாம். அவங்க எச்சரிக்கையும் நம்ம அஜாக்கிரதையும் தடுத்துடுச்சி. விமானத்துக்குள்ளே அவருக்கு சரியான பாதுகாப்பு இல்லைங்கிறதையோ- விமானத்தையே கைப்பற்றி இப்படி செய்வாங்கன்னோ நாம எதிர்பார்க்கலை. அப்படி எதிர்பார்க்காததுதான் தப்பு. நம் எதிரிகளை நம்மைவிட புத்திசாலிகளா கற்பனை செய்யலை நாம். அதுவும் தப்பு. அவங்களை அதிபுத்திசாலியாக நாம் நினைச்சி - இதையெல்லாம் - இந்த வினோத சாத்தியங்களையெல்லாம் கூட நம் மூளை கணக்கு செஞ்சிருக்கணும். அலட்சியப்படுத்திட்டோம். இல்லை, கவனக் குறைவா இருந்துட்டோம். ஸோ, வி டிசர்வ் அவர் சஸ்பென்ஷன்.''

''சுனில், உன்னை மாதிரி என்னால எடுத்துக்க முடியலை. இது கௌரவப் பிரச்சனை இல்லையா?''

''இல்லை. அறிவுப் பிரச்சனை. நாம் அறிவாளிகளா இல்லை, கடத்தினவங்க அறிவாளியாங்கற போட்டியிலே நாம் தோத்துட்டோம்.''

''குள்ள நரி வேலையை அறிவு என்பாயா?''

''ஷ்யுர். பார் எவ்வளவு அழகா திட்டம் போட்டு. பம்பாய்லேர்ந்து புறப்பட்டு செக்யூரிட்டிய திறமையா ஏமாத்தி துப்பாக்கிகளை எடுத்துப் போய். .ஆப்பிரிக்காவின் அந்த நாட்டுப் பிரச்சனைகளைப் பற்றி படிச்சி தெரிஞ்சிக்கிட்டு அதைப் பயன்படுத்தி பேச்சு வார்த்தையின் போது கொஞ்சம் கூட க்ளூ கொடுத்திடாத... பொம்பளை வேஷம் போட்டு. ரோஸ்லின்னு உண்மையான பேரைச் சொல்லி அபார்ஷன்னு சொல்லி... வயர்லெஸ் உள்ள ஜீப் கேட்டு. வாவ்! இது அறிவு பூர்வமான விஷயமில்லையா?''

“சுனில். . . நீ பாராட்றதைப் பார்த்தா. . . அவங்களைச் சந்திச்சா மாலையே போடுவே போலிருக்கே.

“வெய்ட். பிரிட்டோ, எல்லாப் புத்திசாலிகளுக்கும் சில சறுக்கல்கள் இருக்கு. நாம் முதல்ல சறுக்கிட்டோம். இப்போ அவங்களைச் சறுக்க வைக்கலாமே?”

“வாட் டு யு மீன்.

“போலீஸ் இன்வெஸ்டிகேஷன் ரொம்ப விரிவா நடந்துக்கிட்டிருக்கு. பிளேன்ல கிடைச்ச கை ரேகைகள், பேசின பேச்சுக்கள், வீடியோ காஸட்டுகள் அதை எல்லாம் வச்சி துரிதமா இறங்கிட்டாங்க. கடல் வான் -தரை மூன்று மார்க்கத்திலேயும் சென்னையை விட்டு டாக்டர் விக்ரம் கொண்டு செல்லப்பட முடியாதபடிக்கு விசேஷ செக்போஸ்ட்ஸ் ஏற்படுத்திட்டாங்க. சந்தேகப்படி எந்த வீட்டுக்குள்ளே எந்த இடத்துக்குள்ளே வேணும்னாலும் நுழைஞ்சு தேடிப் பார்க்க அதிகாரிகளுக்கு அனுமதி கொடுத்திருக்காங்க, புது டி. ஜி. பி. ஃபுல் ஸ்விங்ல இருக்கார். நம்ம டிபார்ட்மெண்ட் நம்மை நாளைக்குத் திரும்பச் சொல்லியாச்சு. அதுக்குள்ளே. வி மஸ்ட் டு சம்திங் .”என்று டிரெஸ்சிங் மேஜை மேல் சுனில் பிரபாகர் முஷ்டியைக் குத்த. கண்ணாடி அதிர்ந்து. . அதில் சுனில் பிரபாகர் அசைந்தான்.

“என்ன சொல்றே? தும்பைவிட்டு வாலைப் பிடிக்கிற கதையா? நம் கிட்டே என்ன தகவல் இருக்கு?”

“சொல்றேன். இப்போ அந்தக் கடத்தல்ல ஈடுபட்டது எத்தனை பேர்?”

“ரெண்டு பேர்.

“நோ. மூணு பேர் ஜீப்பிலேர்ந்து ஏதோ ஒரு வாகனத்துக்கு மாறி அவங்க தப்பிச்சிருக்காங்க. இந்த மூணாவது நபர் அவங்களுக்காகத் தயாரா காத்திருந்திருக்கான் ஜீப் அனாதையா நின்ற ஸ்பாட்ல.”

''யெஸ். மூணு பேர்.''

''ஆஷா பார்த்த அதே மூன்று பேர்தான் அவங்க. ஆஷா குரலை ஓரளவு அடையாளம் சொன்னா. உடலமைப்பையும் முக்கால்வாசி ஒத்துக்கிட்டா. கழுத்திலே அதே கிராஸ். இத்தனை ஒற்றுமைகளை யதேச்சையா அமைஞ்சதுன்னு நாம் ஒப்புக்க முடியாது. அந்த மூன்று பேர்தான் இந்த மூன்று பேர்.''

பிரிட்டோ சிகரெட் எடுத்துக் கொண்டு, ''ஒக்கே. அப்படியே வச்சிக்கலாம், போலீசும் அந்த கோணத்தை ஓரளவுக்கு அப்ரூவ் செஞ்சு ஆஷாவை நிறைய விசாரிச்சாச்சு. ஆஷாவோட வீட்டுக்கு ஃபுல் செக்ரியூட்டி கொடுத்தாச்சு. இப்போ அவங்களைப் பிடிக்கிறது எப்படி?''

சுனில் அவனுக்கு நெருப்புத் தந்து விட்டு, ''பிரிட்டோ மூணிலே ஒருத்தன் கிறிஸ்தவன். இன்னொருத்தன் பேர் நமக்குத் தெரியும் ராவ்.''

கரெக்டா சொல்ல முடியாது. ராவ்ங்கிறது கூப்பிடற பேரா இருக்கலாம். இல்லைன்னா பெயரோட பின்பாதியா இருக்கலாம். ராவ்ங்கிற பேரை மட்டும் வச்சிக்கிட்டு என்ன செய்ய முடியும்?''

''ஏதாவது செய்யணும் பிரிட்டோ. நம்மை நாம் நிரூபிச்சுக் காட்டணும் பிரிட்டோ.''

''சரி, எப்படி?''

''அதான் தெரியலை. கமான். ஆஷாவை நான் இப்போ சந்திக்க விரும்பறேன்'' என்று கோட் அணிந்தான் சுனில் பிரபாகர்.

18

கிரண் கதவைச் சாத்திவிட்டு படுக்கை மேல் பெட்டியை வைத்துத் திறந்தான்.

நூறு ரூபாய் கட்டுகளாகப் பணம்.

மெத்தையின் ஓரத்தைக் கிழித்து. கட்டுக் கட்டாய் உள்ளே செலுத்தி. நிதானமாகத் தைத்து, உறைமாட்டி. மேலே படுத்துக் கொண்டு, கையை நீட்டி டேப்பில் டிஸ்கோ இசையைப் போட்டுக் கொண்டு. தாலாட்டிக் கொண்டு, சிகரெட் புகைத்தான்.

அலெக்ஸ், பாங்க் மானேஜர் தனது சாவியைப் போட்டுத் திறந்துவிட்டுப் போனதும். தான் கொண்டு வந்த சாவியைப் போட்டுத் திறந்து பாங்கில் உள்ள தனது தனி லாக்கரில் – பெட்டியிலிருந்த கட்டுக்களை எல்லாம் வரிசையாக அடுக்கிப்.பூட்டி விட்டு, மானேஜரை அழைக்க... அவர் வந்து பூட்டிச் சென்றதும் வெளியேறி. நேராய்...

சில நிமிடங்களில் அவன் அந்த பெண்ணின் உடம்பில் ஒவ்வொரு பகுதியின் வாசனையையும் அறிய முயன்று கொண்டு இருந்தான்.

ராகுல் தொலைபேசியில் பேசினார்.

''ராவ், எதுவும் ப்ராப்ளம் இல்லையே?''

''இல்லை சரக்கை எப்போ வாங்கிக்கறிங்க?''

'நாளைக்கு ராத்திரி சாயங்காலம் வர்றேன்.

போனை வைத்துவிட்டு, அந்தத் தனியறைக்குள் சென்றான் ராவ்.

வாயும், கைகளும், உடம்பும் கட்டப்பட்ட டாக்டர் விக்ரம் சோகையாய் நிமிர்ந்து பார்க்க.

"ஸாரி டாக்டர் நீங்க ரொம்ப சிந்திச்சதுதான் உங்களுக்கு ஆபத்தாப் போச்சி. பாருங்க. இப்போ எந்த நிலைமைக்கு ஆய்ட்டிங்க?"

தெம்பு கூட்டித் திமிற முயன்றார். "ம்ம்ம்" என்று முணகினார்.

"அலட்டிக்காதிங்க டாக்டர். நீங்களாகவும் இங்கோர்ந்து தப்ப முடியாது. உங்களைக் கண்டுபிடிக்கவும் யாராலும் முடியாது, நிம்மதியா துாங்குங்க," என்று அறையைவிட்டு வெளியே வந்தான் ராவ்.

ஆஷா அழுத்தம் திருத்தமாய் சொன்னாள்

"இது வரைக்கும் நூறு ஆஃபீஸர்கள் மாத்தி மாத்தி கேட்டுட்டிங்க. அவங்க பேசிக்ககிட்ட வேற எதுவும் என் காதிலே விழலை! விழலை!"

எதிரே அமைதியாய் அமர்ந்திருந்தான் பிரபாகர்.

"மேடம், உங்களைத் தொல்லைப் படுத்தணுங்கறது எங்க நோக்கம் இல்லை. எங்களுக்கு அதிர்ஷ்டவசமா, உங்களுக்கு துரதிர்ஷ்டவசமா இந்தக் கடத்தல்ல ஈடுபட்ட மூணு பேர்களையும் முக்த்தையோ முதுகையோ பார்த்த ஒரே சாட்சி நீங்கதான். ஐ. ஜி. ஆஃபீஸ்ல எங்க கிட்ட தகவல் சொன்னப்போ முதல்ல ஒரே ஒரு வரிதான் சொன்னிங்க. அப்புறம் நான் விசாரிச்சப்போ உங்க கிட் டேர்ந்து எவ்வளவு தகவல்கள் கிடைச்சது. ஒருத்தன் பேரு ராவ். இது மாதிரி இன்னும் ஏதாவது தகவல் கிடைக்காதாங்கிறது தான் எங்க ஆசை. தயவுசெஞ்சி ஆத்திரப்படாம நிதானமா முதல்லோர்ந்து யோசிச்சுப் பாருங்க. மூணு பேர் அந்தப் பக்கம் பேசிக்கிட்டிருக்காங் கங்கிறதை உங்களை உணர வச்சது எது? அதிலோர்ந்து ஆரம்பிச்சு மனசிலே அசை போடுங்க உங்க காதிலே விழுந்த, அவங்க பேசின, ஒவ்வொரு தெளிவில்லாத வார்த்தைகளும் எங்களுக்கு உதவக் கூடும்," என்றான் நிதானமாய்.

''சார், உங்க நிலை எனக்குப் புரியுது, ஆனா சம்பவம் நடந்து நாலு நாள் கழிச்சு எல்லாம் எப்படி ஞாபகம் இருக்கும்? இந்த நாலு நாள்ல எத்தனை பேரை சந்திச்சேன்.... பேசினேன்.

''சரி. என்னைக் கேட்க விடுங்க. மூணு பேரும் எழுந்து போய்க்கிட்டு இருந்தப்போ அவங்களைப் பின்புறத்திலே இருந்து பார்த்திங்க. இல்லையா?''

''ஆமாம்''.

''அப்போ அவங்க சாதாரண விஷயங்களைப் பேசிக்கிட்டுப் போனாங்க. அவங்க உங்களை விட்டு விலக.. விலக. . . உங்களுக்கு அவங்க பேசறது கேக்கறது குறைஞ்சு நின்னுப் போச்சு. அப்படித்தானே?''

''ஆமாம்.''

''அவங்க சாதாரணமா என்ன பேசினாங்க? மறுபடி நினைச்சுப் பார்த்துச் சொல்லுங்க.

''அன்னிக்கேதான் சொன்னேனே. . . ராவ்ங்கிறவன் ஏதோ கல்யாணத்துக்குப் போகணும்னான் மறுநாளு இன்னொருத்தன் நிறைய வேலையிருக்கு போக்கூடாதுன்னு சொன்னான். சரி போகலைன்னுட்டான் இவன்.''

''ரைட். இதையேதான் அன்னிக்கும் சொன்னிங்க. இப்போ நான் கேக்கறது இந்த விஷயத்தை அவங்க பேசிக்கிட்டபடியே வசனமாவே அப்படியே சொல்ல முடியுமா?''

''அப்படியேதானே சொல்றேன்,.''

''நோ, நீங்க சொல்றது சாரம். நான் கேக்கறது சரியான வார்த்தைகள்,. ராவ்ங்கிறவன் உதாரணமா இப்படி சொல்லியிருப்பான் 'நாளைக்கு நான் ஒரு கல்யாணத்துக்குப் போகணும்டா.' இதே மாதிரி சரியான அதே வார்த்தைகளை நினைச்சிப் பாருங்களேன்.''

ஆஷா, ''இருங்க'' என்று கண்களை மூடிக் கொண்டாள், "சொல்றேன். இந்த ராவ்ங்கறவன் இப்படி சொன்னான் 'நாளைக்கு நான் அம்பேல். அப்புறம் ஏதோ ஒரு ஊர் பேரு சொன்னானே.

''ஓ காட்! ஊர் பேரும் சொன்னானா? கமான். எந்த ஊரு?''

''தொண்டையிலே இருக்கு சார். வரமாட்டேங்குது. நல்ல ஊரு சார். நான் கேள்விப்பட்ட ஊர்தான். வெய்ட் அதை அப்புறம் யோசிச்சுச் சொல்றேன். குறிப்பிட்ட ஊரைச் சொல்லி. அங்கே ஒரு கல்யாணத்துக்குப் போகணும்னு சொன்னான். அதுக்கு இன்னொருத்தன் 'நோ ராவ். நீ போகலை. தலைக்கு மேல் ஆயிரம் வேலை இருக்கு. நீ தேவை எனக்கு' அப்படின்னான். ராவ் மறுபடி 'முக்கியமான ஃபிரண்டோட கல்யாணம்ன்னான். இவன் 'கல்யாணம் நமக்கு முக்கியமில்லைன்னு சொன்னதும் ராவ் 'சரி, நான் போகலைன்னுட்டான். அவ்வளவுதான் என் காதில் விழுந்தது.''

பிரிட்டோ ஆஷ்ட்ரேயில் சிகரெட்டைத் தட்டிக் கொள்ள, சுனில் பிரபாகர் அருகே இருந்த ஆஷாவின் அப்பாவிடம், ''சார், உங்ககிட்டே தமிழ்நாடு பின்கோட் நம்பர் உள்ள புஸ்தகம் இருக்கா'' என்றான்.

அவர், இல்லையே'' என்றார்.

''பரவால்லை. ஆஷா. பார்த்திங்களா இப்போ புதுசா இன்னொரு தகவல் கிடைச்சிருக்கு. ராவ் கல்யாணத்துக்குப் போகணும்னு சொன்னது மட்டும் தான் முதல்ல தெரிஞ்சுது. இப்போ அது சொந்தக்காரங்க கல்யாணமில்லை, முக்கியமான ஃபிரண்டோட கல்யாணம்ங்கிறது தெரியுது. அந்த ஊர் பேரை விட்டு விட்டு யோசிச்சுப் பாருங்க. ஒரு மணி நேரத்திலே நாங்க திரும்பி வர்றோம்'' என்று எழுந்தான் சுனில் பிரபாகர்.

"எங்கே போகணும்?" என்றான் டிரிபேட் டி.

"வா சொல்றேன்" என்று வெளியே அழைத்து வந்து."

"புது டி. ஜி. பி.யைச் சந்திக்கணும் உடனே" என்றான்.

"புது டி. ஜி. பி. மீசை நரைத்திருந்தார்."

கைகளைக் கட்டிக் கொண்டு கதை கேட்கிற மாதிரி கேட்டார்.

"அதனாலே?" என்றார்

"அதனாலே. இப்போ நமக்கு இருக்கிற வழில இதுவும் ஒண்ணு சார். ராவ் மறு நாள் மட்டும் தான் எதுக்கோ அம்பேல்ன்னு சொல்றான். அதுக்குப் பதிலளிக்கிறவன் தலைக்கு மேல வேலையிருக்கு, நீ தேவை எனக்குன்னு சொல்றான். அந்த வேலைகள் என்னங்கிறதுதான் இப்போ நமக்குத் தெரியுமே. அதனால... அந்த கடத்தலுக்கான திட்டங்களையும், ஏற்பாடுகளையும் செய்யறதிலேர்ந்து ஒரு நாள் மட்டும் ராவ் விலக நினைச்சது முக்கியமான பிரண்டோட கல்யாணத்துக்காக. ஒரு நாளுக்குள்ளே போய்ட்டு வர்ற தூரத்திலே கல்யாணம் நடந்திருக்கு. ஆஷா அவங்களைச் சந்திச்சது பதினறாம் தேதி தமிழ்நாட்ல கிராமங்களைக்கூட விடாம - முக்கியமான நகரங்கள் வரைக்கும் நடந்த கல்யாணங்களோட விவரங்கள் வேணும், எல்லா ஊர் ஸ்டேஷன்களுக்கும் தகவல் தந்து சுலபமா இந்தத் தகவலை வாங்கிடலாம் சார் 17-ம் தேதி கல்யாணம் செஞ்சிக்கிட்ட ஒரு மாப்பிள்ளை நம்ம ராவுக்கு முக்கியமான ஃபிரண்டு. அந்த மாப்பிள்ளை யார்ன்னு கண்டுபிடிச்சிட்டா - அவனை விசாரிச்சு ராவை கண்டு பிடிச்சிடலாம் சார்."

"வெரிகுட் ஐடியா. உடனடியா தமிழ்நாட்ல அத்தனை ஸ்டேஷன்லேர்ந்தும் 17-ம் தேதி நடந்த கல்யாணங்களையும் அந்த மாப்பிள்ளைகளையும் விசாரிக்கச் சொல்லுவோம். ஆனா. . . இதிலே ஒரு சிக்கல்

இருக்கு, அந்த மாப்பிள்ளை முக்கியமான ஃபிரண்டுகிறதனாலே. தன் நண்பனைக் காட்டிக் கொடுப்பானா?''

''ராவ்ங்கிற மெட்ராஸ்காரன் அவனுக்கு பிரண்டாங்கிற ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் ஆமாம்ங்கிற பதிலை வாங்கிட்டா போதும். மிச்ச பதில்களை நான் வாங்கறேன். எப்படிப்பட்டவனையும் காட்டிக் கொடுக்க வச்சிடலாம் நம் வழிகளில், இந்த கல்யாண மாப்பிள்ளைகளை டவுட் வராம விசாரிக்கச் சொல்லிக் குறிப்பு தந்திடலாம் சார்,''

''யெஸ், முயற்சி செஞ்சி பார்க்கலாம்'' என்று இண்ட் டர்காமை எடுத்தார்.

''வெல் சார். நாங்க மூணு மணி நேரம் கழிச்சு வந்து சந்திக்கிறோம்.''

இருவரும் புறப்பட்டார்கள்.

''இப்போ எங்கே?'' என்றான் பிரிட்டோ டாக்ஸியில் ஏறிக் கொண்டு.

''மறுபடி ஆஷா, இங்கே ஆஃபீஸ்ல பின்கோட் நம்பர்ஸ் உள்ள புஸ்தகம் கிடைச்சது. இதோ.''

எதுக்கு சுனில் இது''

''ஆஷாவோட நினைவைத் தூண்டி விடத்தான்,. இதிலே அல்மோஸ்ட் எல்லா ஊர்களின் பெயர்களும் இருக்குமே.

''சுனில். உன் இந்த புது அப்ரோச் சக்ஸஸ் ஆச்சின்னா. சி. பி. ஐ--ல நீ எங்கேயோ போய்டுவ. டாக்டர் விக்ரம் உன்னால மீட்கப்பட்டா. ஓ, உனக்கு உலகப் புகழ் பிரபா. பார்க்கலாம்.''

''நோ! பிரிட்டோ பிரிச்சுப் பேசாதே. உன் துணையோடுதான் சாதிக்க விரும்பறேன்.''

"அடக்கமா பேசறே. இந்த உன் புது தியரியிலே நாமள் வாயையே திறக்கலை சுனில்."

ஆஷா அறையின் நீளங்களில் நடந்து கொண்டிருந்தாள்.

பீக்கேஸ் பைகளைக் கையில் ஏந்தி இருவரும் காத்திருந்தார்கள்.

"ஸாரி. நினைவுக்கே வரலை" என்றாள்."

"பரவாயில்லை. இந்த புஸ்தகத்தைப் புரட்டுங்க. வரிசையா ஒவ்வொரு ஊர் பெயரையும் நிதானமா வாய் விட்டுப் படிங்க. நினைவுக்கு வரலாம். நினைவு வந்ததுன்னா... உடனே எனக்கு இந்தப் போன் நம்பருக்கு சொல்றிங்களா?"

"ஷ்யுர் சார்."

அவர்கள் வெளியேறி நேராய்த் தங்கள் ஹோட்டல் அறைக்கு வந்தார்கள்.

"பிரிட்டோ, அவங்களைப் பிடிச்சே ஆகணும்!"

"பார்க்கலாம். டாக்டர் விக்ரமை எந்த சேதமும் இல்லாம விடுவிக்கணும்,. சைதாப்பேட்டையிலே அவங்க ஜீப்பை விட்டு வேறு வண்டியிலே மாறினதிலேர்ந்து சரியா இருபத்திஞ்சி நிமிஷம் கழிச்சுதான் எல்லா டிராஃபிக் போலீசுக்கும் தகவல் சொல்லி. எல்லா இடத்திலேயும் வாகனங்களை நிறுத்தி செக் செய்யச் சொன்னோம். அதனாலே சைதாப்பேட்டையிலேர்ந்து இருபத்தஞ்சு நிமிஷப் பயணத்துக்குள்ளே அடையக் கூடிய ஏதோ ஒரு சுற்றுப்புற ஏரியாவில் தான் அவங்க இருக்கணும். அவங்க வண்டி மாறின இடம். அந்த இடத்தை சுத்தி துப்பறவா விசாரிச்சாச்சு. யாருமே ஒரு வாகனம் காத்திருந்ததைப் பார்த்ததாக தகவல் சொல்லலை. எந்தப் பக்கம் போனாலும் முட்டிக்கிறோம் சுனில் நாம். நம்பிக்கை கொடுக்கிற மாதிரி ஒரு க்ளுகூட இல்லை நம்கிட்டே.

"ரொம்ப பெரிய க்ளூ இருக்கு பிரிட்டோ. மூணு பேர்ல ஒருத்தன் ராவ்."

"இதையே சொல்லிக்கிட்டிரு. கல்யாண மாப்பிள்ளைகளை விசாரிக்கிற ஸ்கீம் சாரியா வருமா? அவனவன் ஹனிமூன்ல இருப்பான். எங்கே இருக்கான்னு கண்டுபிடிச்சி தேடிப் போய் விசாரிக்கிறதுக்குள்ளே டாக்டர் விக்ரம் எங்கேயோ போய்டுவார். ரொம்ப ஸ்லோவான முயற்சி இது."

"ஆனா பிரிட்டோ, நம் கிட்டே வேற வழி இல்லையே. ஏன் பிரிட்டோ-ஒருத்தன் தன் சொந்த விலாசத்தை எத்தனை சந்தர்ப்பங்களிலே வெளியிடறான். பஸ் டிக்கெட், ரயில் டிக்கெட், ரிசர்வ் பண்றப்போ ஹோட்டல்ல ரூம் எடுக்கறப்போ- பெரிய ஜவுளிக் கடைகள்ல கஸ்டமர்ஸ் அட்ரஸ் புக்கிலோ இப்படி. ராவ்ங்கிற பேர் சிடில எங்கங்கே இருக்குன்னு ஒரு அலசல் செய்யலாமா? லைன்ஸ் கிளப், டைனர்ஸ் கிளப் இந்த மாதிரி.

"எனக்கு நம்பிக்கை இல்லை. அப்புறம் ஒவ்வொரு ராவையும் விசாரிக்கிறதா? ஒக்கே. செஞ்சு பார்க்கலாம். போலீஸ்ல இதை செஞ்சிட்டாங்கன்னுதான் நினைக்கிறேன். ஒரு நிமிஷம். . . " என்று போனை எடுத்து ஐ. ஜி. ,யுடன் பேசிவிட்டு வைத்து. ."ஸாரி சுனில்... அதிலேயும் அவுட். ராவ்ங்கற பேரை அலசு அலசுன்னு அலசிட்டாங்க. டெலிபோன் டைரக்ட்ரியில் உள்ள அத்தனை ராவ்களையும் அலசிட்டாங்க."

"காட்! என்னத்தான் செய்யலாம் நாம்?"

"நம்மை நமக்கு மேலே உள்ள அதிகாரிகள் விசாரிப்பாங்க உங்களை ஏன் டிஸ்மிஸ் செய்யக் கூடாதுன்னு. அதுக்கு என்ன பதில் சொல்லலாம்னு யோசிக்கலாம்" என்று பாத்ரூமுக்குள் நுழைந்தான் பிரிட்டோ.

19

அலெக்ஸ் டி. வி. பார்த்துக் கொண்டிருந்தான்

சாகித்ய அகாடமி பரிசு பெற்ற ஒருவரை ஒரு பெண் நிருபர் பேட்டி கண்டு கொண்டிருந்தாள்.

அந்தப் பெண் அழகாய் இருந்தாள்.

உற்றுப் பார்த்த அலெக்சுக்குப் பொறி தட்டியது.

இவள். இவள். ஹோட்டல் ராயல் மௌண்ட்டனில் சந்தித்த பெண்.

இப்போது திரையில். . .'மாத இதழின் சிறப்பு பெண் நிருபர் குமாரி ஆஷா சச்தேவ்' என்று எழுத்துக்கள் வர...

மடியில் இருந்த நாளிதழை அவசரமாகப் பிரித்து மறுபடி பார்த்தான்.

'இந்தக் கடத்தலில் ஒரு பிரபல பத்திரிகையின் பெண் நிருபர் சில நம்பிக்கை தரும் தகவல்களைத் தந்துள்ளார். அவர் தந்த குறிப்புகளைக் கொண்டு போலீஸார் மேலும் தீவிரமாக விசாரணையில் இறங்கி உள்ளார்கள்.''

''டாமிட்!'' என்று பத்திரிகையை எறிந்தான். ஷூக்களை அணிந்து கொண்டு உடனே புறப்பட்டான்.

''மை காட்!'' என்றான் கிரண், ''அப்படியா!''

''பார். அவளேதான். அன்னிக்கு நாம பேசினதிலே எதைக் கேட்டாள்னு நமக்குத் தெரியாது. நாம நம்ம பெயர்களைச் சொல்லிப் பேசிக்கிட்டோம். பத்தாததுக்கு நான் கிட்டே போய் என் மூஞ்சைக் காட்டிப் பேசிட்டு வந்தேன். டி. வி.யிலே பார்த்ததுமே பளிச்சுன்னு ஞாபகம்

வந்துடிச்சி. நேரா பத்ரிரிகை ஆபீஸ் போய் விலாசம் தெரிஞ்சுக்கிட்டுப் போனேன். சரியான பாதுகாப்பு வீட்டைச் சுத்தி. கிரண் நம்ம திட்டத்திலே எல்லாம் கரெக்டா நடந்துடிச்சின்னு நம்பினோம். இப்போ இந்தச் சிக்கல் விஸ்வரூபமா வளர்ந்துடுமோன்னு பயமா இருக்கு.''

''டாக்டர் விக்ரமை ராகுல் கிட்டே ஒப்படைச்சுட்டு நாம மூணு பேரும் நாளைக்கே எங்கேயாவது போய்ட்டு ரெண்டு முணு மாசம் கழிச்சுத் திரும்பறதுதான் பெட்டர்ன்னு எனக்குத் தோணுது. நீ சொன்ன மாதிரி அந்தப் பொண்ணு ஆஷா என்ன தகவல் சொன்னாள்னு தெரியாது. போலீஸ் என்ன விசாரிக்கிறாங்கன்னு தெரியாது. ஆனால். போலீசுக்கு ஒரு சின்ன செய்தி போதும் – மோப்பம் பிடிக்க. கமான். வா, ராவைப் பார்த்துப் பேசலாம்.''

கிரணும், அலெக்சும் ராவின் வீட்டிற்கு பைக்கில் அந்த ராத்திரி எட்டு மணிக்கு அவசரமாகப் புறப்பட்டார்கள்.

டெலிபோன் ஒலித்தது.

பாய்ந்து சென்று எடுத்தான் பிரபாகர்.

''ஹலோ, நான் ஆஷா பேசறேன்.''

''சொல்லுங்க மேடம்,. நான் சுனில் பிரபாகர்.''

''சார், எனக்கு ஊர் பேர் ஞாபகம் வந்துடிச்சி.''

''கமான். என்ன?''

''செங்கல்பட்டு.''

''வாவ்! ரொம்ப நன்றிங்க ஆஷா. மீட் யு லேட்டர்'' என்று அவசரமாக போனை வைத்துவிட்டு, பாத்ரூம் கதவைத் தட்டினான்.'' ''பிரிட்டோ, ஹரி அப். நாமே நேரடியா இறங்கலாம். செங்கல்பட்டிலே நடந்த கல்யாணத்துக்குத்தான் ராவ் போக விரும்பினான். இப்போ

நாம நேரா செங்கல்பட்டு போறோம். ஒட்டோமா மாப்பிள்ளைகளின் எண்ணிக்கைக் குறைவு. அவங்க எங்கே இருந்தாலும் நாமே போய் விசாரிக்கலாம்.''

பிரிட்டோ விரைவாய் வெளியே வந்தான்.

இருவரும் புறப்பட்டார்கள்.

ஒரு டாக்ஸி பிடித்துக் கொண்டு, செங்கல்பட்டை நேக்கிப் புறப்பட.

''டிரைவர் ஒரு நிமிடம். அப்படியே ஓரமா வண்டியை நிறுத்து'' என்றான் பிரிட்டோ.

''என்ன பிரிட்டோ?'' என்றான் சுனில்.

''எதிர்க்க ஷீலா என்னைத் தேடி ஹோட்டலுக்குப் போய்க் கிட்டிருக்கா. ஒரு வார்த்தை சொல்லிட்டு வந்துடறேன், பார்த்து நாளாச்சு.''

''யு ப்ளடி! உனக்குச் சமயமே தெரியாதா! ஹரி அப்மேன்.''

பிரிட்டோ இறங்கி எதிரே வந்து கொண்டிருந்த ஷீலாவை நெருங்கி, ''ஹாய். எங்கே என்னைப் பார்க்கவா?'' என்றான்.

ஆமாம் நாளைக்குக் கோயமுத்தூர்ல ஒரு கல்யாணம். போக முடியலை. கிரீட்டிங்ஸ் டெலகிராம் கொடுத்துட்டு அப்படியே உங்களையும் பார்த்துட்டு. ஏய். பிரிட்டோ. எங்கே ஓடறீங்க?''

ஓடி வந்து டாக்ஸியில் ஏறிக்கொண்ட பிரிட்டோ, 'சுனில், நாம செங்கல்பட்டு போக வேண்டியதில்லை. டிரைவர் வண்டியை எடு. மெட்ராஸ் ஹெட் போஸ்ட் ஆஃபீஸ் போப்பா,'' என்றான்.

''வாட் நான்செென்ஸ் பிரிட்டோ?''

''இல்லை சுனில். கேள். ஷீலா சொன்ன தகவல் என்னைத் தூண்டிடுச்சி. முக்கியமான பிரண்டோட

கல்யாணத்துக்கு ராவ் போக முடியலை. என்ன செஞ்சிருப்பான். தந்தி ஃபாரத்திலே தன் விலாசத்தை யதார்த்தமா கரெக்டா மறைக்காம அவன் எழுதியிருக்கலாம். தந்தியை அவன் போனாகிராமா கொடுத்திருந்தாலும் போன் நம்பரை வச்சி அவனைப் பிடிக்கலாம். இப்போ நமக்கு 16-ம் தேதி இல்லை 17-ம் தேதி சென்னையில் உள்ள எல்லாத் தபால் ஆபீஸ்லேர்ந்தும் செங்கல்பட்டுக்கு அனுப்பப்பட்ட வாழ்த்துத் தந்திகளோட பாரம் வேணும். இந்த முயற்சில சிக்கல் இருந்தா செங்கல்பட்டு போகலாம்'' என்ற பிரிட்டோவை இறுக்கமாக அணைத்துப் பளிச் என்று முத்தமிட்டான் சுனில் பிரபாகர்.

''பிரிட்டோ! கிரேட் ஐடியா'' என்றான்.

அந்த கிரேட் ஐடியா பலனளித்தது.

தந்திகளில் ராவ் அடித்த தந்தியின் பாரம் கிடைத்தது.

அதில் சுத்தமான விலாச வரிகள் இருந்தன.

காலிங் பெல் ஒலித்தது.

முன் ஹாலில் அமர்ந்திருந்த அலெக்சும்-கிரணும் ராவைப் பார்த்தார்கள்.

''யாரு? டோர்ல கண்ணாடி வழியா பார்த்துட்டு திற ராவ்.''

''ராகுல் வர்றதா சொல்லியிருந்தார்.''

ராவ் எழுந்து கதவின் சின்ன கண்ணாடி வழியே பார்த்தான். கையிலே ஒரு பாட்டிலோடு, தோளில் ஒரு பையோடு எவனோ ஒரு இளைஞன்.

''யாரு?'' என்று திறந்தான்.

''டாய்லெட் கிளீனிங் ஆயில் சார். ஒரு கறை விடாம எடுத்துடும். ஒரு பாட்டில் அஞ்சு ரூபா. ரெண்டா எடுத்தா எட்டு ரூபா.''

"இடியட்! அதெல்லாம் வேணாம். போய்யா" என்று கதவை அறைந்து சாத்தினான் ராவ். போய் நண்பர்களோடு அமர்ந்தான்.

தெரு முனையில் ஜீப்பில் ஐ. ஜி. நிற்க. அருகே சுனில் பிரபாகர், பிரிட்டோ, பின்னால் வரிசையாக ஏழு ஜீப்களில் ஆயுதம் ஏந்திய போலீஸ்காரர்கள்.

அந்தக் கிளீனிங் ஆயில் விற்பனை செய்ய வந்த போலீஸ் அதிகாரி சொன்னார்.

"சார், உள்ளே மூணு பேர் மட்டும் தான் இருக்காங்க. வேற யாரும் இல்லை. ட்ரே மேல பிராந்தி பாட்டில் இருக்கு. லேசான போதையிலே இருக்காங்க மூணு பேரும்."

"வெல்" என்று ஐ. ஜி. கார்ப்பரேஷனிலிருந்து பெற்ற அந்த வீட்டின் புளூபிரிண்ட்டை மடியில் விரித்தார்.

எந்த எந்த வழிகளில் எந்த ஆபீஸர் வர வேண்டும்-நிற்க வேண்டும் எந்த ஆபீஸர் வாட்டர் பைப் வழியாக வீட்டின் மேல் மாடிக்குப் போக வேண்டும் என்று அவசரக் கட்டளைகள் விடுத்தார்.

அடுத்த ஐந்தாவது நிமிடம் ராவின் தனிமையான பங்களாவைச் சுற்றிலும் போலீசின் முரட்டுக் கரங்கள் மௌனமாக வளைத்து நின்றன.

மறுபடி கதவு தட்டப்பட.

ராவ் மறுபடி கண்ணாடி வழியாய்ப் பார்த்தான்.

மறுபடி அதே இளைஞன்.

"யு. யு. என்று கதவைத் திறந்தான் ராவ்.

அந்த இளைஞனும். திமுதிமுவென்று உள்ளே ரிவால்வரோடு நுழைந்த போலீஸ் அதிகாரிகளும் ராவைத் திகைக்க வைக்க.

20

எல்லாப் பத்திரிகைகளும் ஒரே தலைப்பிட்டன.

டாக்டர் விக்ரம் மீட்கப்பட்டார்!

பாரதப் பிரதமரின் விருப்பத்திற்கிணங்க அவரைச் சந்திப்பதற்காக விமானத்தில் பயணப்பட்டனர் சுனில் பிரபாகர்-பிரிட்டோ மற்றும் குமாரி ஆஷா சச்தேவ்.

''என்ன ஆஷா அப்படிப் பார்க்கிறே?'' என்றான் சுனில், விமானம் புறப்பட்டதும்.

''ஒரே ஒரு கேள்வி சுனில்.'' - விமானம் ரன்வேயில் ஓடியது.

''என்ன?'' விமானம் சக்கரங்களை இழுத்துக் கொண்டு மேலே பாய்ந்தது.

''மே ஐ லவ் யு?'' என்றாள். ஆகாயத்தில் மற்றும் ஒரு ஆரம்பம்.

முற்றும்

பட்டுக்கோட்டை பிரபாகர்

திரு. பட்டுக்கோட்டை பிரபாகர் அவர்கள் 1958ல் தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டையில் பிறந்தவர். இவருடைய முதல் சிறுகதை 1977ம் வருடம் ஆனந்த விகடனில் வெளிவந்தது. இவர் 200க்கும் அதிகமான எண்ணிக்கையில் சிறுகதைகள், 300க்கும் மேலான நாவல்கள் மற்றும் 60 தொடர்கதைகளும் எழுதியுள்ளார். இவருடைய பல நூல்கள் தெலுங்கு, கன்னட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பல கதைகள் சின்னத் திரையில் ஒளிபரப்பப்பட்டுள்ளது. சில தமிழ் திரைப்படங்களுக்கும் திரு. பட்டுக்கோட்டை பிரபாகர் அவர்கள் வசனம் எழுதியுள்ளார். இவருடைய நூல்களை ஆய்வு செய்து இருவர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.

பூம்புகார் பதிப்பகம்

சென்னை - 600 108